பக்கங்கள்: 24

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 16, ஞாயிற்றுக்கிழமை 29.01.2017 | கதிர் 85

எமது வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய நத்தார் தின நல்வாழ்த்துக்கள்
Rasi Collections
ராசி கலெக்ஷன்ஸ்
இல.199, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 5571

# அதிகாரத்தைப் பிடிப்பதற்கு 2020 வரை இடமேயில்லை!

## பகற் கனவு காண வேண்டாம் என மஹிந்தருக்கு ஜனாதிபதி பதிலடி

கொழும்பு, ஜனவரி 29

**2020ஆம் ஆண்டுக்கு முன்னர் அரசியல் அதிகாரங்களைக் கைப்பற்றுவது தொடர்பில் எவரும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

**நேற்றுமுன்தினம் கொழும்பு நுகேகொடையில் கூட்டு எதிரணி நடத்திய கூட்டத்தில் அதிகார மாற்றம் குறித்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்த கருத்துக்குப் பதிலடி தரும் விதத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நேற்றைய உரை அமைந்தது.**

நேற்று நடைபெற்ற மொனராகலை கும்புக்கன் ஓயா நீர்த்தேக்கத் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

அரசியல் அதிகாரத்துக்காகப் போராட வேண்டிய காலம் இது அல்ல. ஏனென்றால் இது தேர்தல்காலமல்ல. தேர்தல் காலகட்டத்தில் அரசியல் அதிகாரங்

பக்கம் 23 »



மொனராகலை கும்புக்கன் ஓயா நீர்த்தேக்கத் திட்டத்தை நேற்று ஜனாதிபதி அங்குரார்ப்பணம் செய்து வைத்தபோது...

## சர்வதேச பங்களிப்புடனான விசாரணை; வலியுறுத்தி இம்முறையும் தீர்மானம்?

கொழும்பு, ஜன.29

இலங்கையில் போர்க் குற்ற விசாரணைப் பொறிமுறை சர்வதேச நீதிபதிகள், விசாரணையாளர்கள் மற்றும் வழக்கறிஞர்களைக் கொண்டு முன்னெடுக்கப்பட வேண்டுமென்று ஐ.நா. மீண்டும் வலியு றுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்வரும் பெப்ரவரியில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 34ஆவது கூட்டத் தொடரின் போது இது தொடர்பான பரிந்துரையை ஐ.நா. மனித

பக்கம் 24 »

## திருடர்களை அரசு பிடிக்கவேயில்லை திருடர்தான் அரசைப் பிடித்துள்ளனர்

### *சீறுகிறார் ஜே.வி.பியின் விஜித ஹேரத்*

ஊழல் மோசடிகளை உடன் நிறுத்தாவிட்டாலும் ஊழல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காவிட்டாலும் நீதியை சரியான முறையில் நிலைநாட்டக்கூடிய மாற்று அரசை உருவாக்குவோம் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பக்கம் 24 »

## தமக்குப் பதிலாக கோட்டாவா? சீறுகிறார் மஹிந்த ராஜபக்ஷ!

கொழும்பு, ஜன.29

மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பதிலாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை அல்லது சமல் ராஜபக்ஷவை அரசியலுக்குக் கொண்டு வரவேண்டும் என கூட்டு எதிரணியின் சார்பில் முன்னாள் அமைச்சர் குமார வெல்கம முன்வைத்த யோசனையை மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார். எனச் சில செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டுள்ளன.

பக்கம் 24 »

### *எம்.பி.ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை*

## பிள்ளையானுக்கு எதிராக குற்றப் பத்திரம் தாக்கல்

முன்னாள் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) உட்பட சிலருக்கு எதிராகக் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது என சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜோசப் பரராஜசிங்கம் 2005

பக்கம் 24 »

அளப்பு அருணாசலம்



உவர்... பதவிக்கு வந்ததுகூட பகல்கனவு மாதிரித்தானே கிடக்கு...!

## எல்லை நிர்ணய அறிக்கை 31க்கு முன் வர்த்தமானியில்?

கொழும்பு, ஜன.29

எல்லை நிர்ணய மேன்முறையீட்டு அறிக்கை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் என உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் தலைவர் அசோக பீரிஸுக்கு நேற்று அனுப்பி வைத்த கடிதத்திலேயே அமைச்

பக்கம் 24 »

## அத்தியாவசியப் பொருள்களுக்கு அதிகபட்ச விலைகள் நிர்ணயம்

கொழும்பு, ஜன.29

நாட்டில் அத்தியாவசிய பொருள்களுக்கான அதிகபட்ச விலைகளை நுகர்வோர் அதிகார சபை நிர்ணயம் செய்து அறிவித்துள்ளது.

அதன்படி, மைசூர் பருப்பு ஒரு கிலோ 159 ரூபாவாகவும், வெள்ளைச் சீனி ஒரு கிலோ 93 ரூபாவாகவும், பாசிப் பயறு ஒரு கிலோ 205 ரூபாவாகவும் விற்பனை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், துபாய் நெத்தலி ஒரு கிலோ 405 ரூபாவாகவும்,

பக்கம் 24 »

## உள்ளூராட்சித் தேர்தலை பிற்போட அமைச்சர் பைஸர் முயல்கிறார்?

### *எல்லை நிர்ணயக் குழுத் தலைவர் குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜன.29

எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் அறிக்கையில் குறைபாடுகள் இருக்கின்றன என உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்த கருத்து தேர்தலைப் பிற்போடும் நோக்கில் கூறப்பட்டது என எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் அசோக பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எல்லை நிர்ணய ஆணைக்

பக்கம் 23 »

## சுமந்திரனைக் கொல்வதற்கு முயற்சியா? இனவாத சக்திகள் மீது அவர் சந்தேகம்!

கொழும்பு, ஜன.29

புதிய அரசமைப்பின் ஊடாக தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிடைத்துவிடுமோ என்ற அச்சத்தில் தென்னிலங்கையில் உள்ள இனவாத சக்திகள் தன்னைப் படுகொலை செய்வதற்கு சதித்திட்டம் தீட்டியிருக்கலாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைப் படுகொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சதித் திட்டம் ஒன்றை இலங்கை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர் என இந்திய ஊடகமான 'தி ஹிந்து' செய்தி வெளியிட்டிருந்தது.

இது தொடர்பில் ஊடகம் ஒன்

பக்கம் 23 »

# இலங்கைக்கு எதிராகச் செயற்பட்ட அதிகாரிகளை நீக்கினாராம் ட்ரம்ப்

## கொழும்பு சிங்களப் பத்திரிகை தெரிவிப்பு

கொழும்பு, ஜன.29

இலங்கைப்படையினருக்கு எதிராக போர்க்குற்றம் சுமத்தி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் யோசனை முன்வைத்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் நான்கு பிரதான அதிகாரிகளை புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பதவி நீக்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிங்கள வாரப் பத்திரிகை ஒன்று இந்தச்செய்தியை வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் புதிய இராஜாங்கச் செயலாளராக ரெக்ஸ் மிலர்சன்நியமிக்கப்பட்டமையை அடுத்து இந்த அதிகாரிகள் நீக்கப்பட்டனர். இதனால் புலம்பெயர் ஈழத்தமிழர்கள் குழம்பியுள்ளனர் எனவும் அந்தப் பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜெனீவா யோசனைக்கு முதன்மையாக இருந்து செயற்பட்ட உதவி இராஜாங்க செயலாளர்ரொபர்ட் ஓ பிளேக், அந்த யோசனையை முன்னெடுத்து செல்வது குறித்து இதுவரை எந்தக் கருத்துக்களையும் வெளியிடவில்லை.

புலம்பெயர் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை கையாண்டஅமெரிக்க இராஜாங்க திணைக்களத்தில், ட்ரம்ப் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கை காரணமாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கமும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தில்தமிழீழத்தின் அதிகாரம் வீழ்ச்சியடைந்துள்ளதால், ஐ.நா. மனிதஉரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானத்தைத் திருத்தும் நோக்கில் பேச்சு நடத்த இலங்கை அரசாங்கத்திற்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது எனவும் அந்த சிங்கள வாரப் பத்திரிகை கூறியுள்ளது.

ஜெனீவா மனித உரிமை கவுன்ஸலின்34 ஆவது கூட்டத்தொடர் பெப்ரவரி 24 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது. அதற்கு முன்னர்யோசனை திருத்தப்பட வேண்டும் என அந்தப் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை, இராஜாங்கத் திணைக்களத்தில் தமது அதிகாரம் வீழ்ச்சி கண்டுள்ளதால், புலம்பெயர் ஈழத் தமிழர்கள், அவசரமாக ட்ரம்புக்கான தமிழர்கள்என்றஅமைப்பைதோற்றுவித்துள்ளனர் எனவும் அந்தப் பத்திரிகையில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த சிங்கள வாரப் பத்திரிகைமேற்படிசெய்தியை வெளியிட்டுள்ள போதிலும் அமெரிக்கா வில் புதிய ஜனாதிபதிகள் பதவிக்கு வந்தாலும் அதன் இலங்கைதொடர்பானகொள்கையில் மாற்றங்கள் இல்லை என ஏற்கனவே அமெரிக்கா அதிகாரி ஒருவர் கூறியிருந்தார்.

மேலும் அமெரிக்க போன்ற நாடுகளில் வெளிநாட்டு கொள்கை உட்பட முக்கியமான கொள்கைகள் பற்றி தீர்மானங்களை எடுப்பது அதிகாரிகளே அன்றி அரசியல்வாதிகள் அல்லர்என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# பிரபாகரனுடன் சமாதான ஒப்பந்தம் செய்து போரை நிறுத்திய ரணில்தான் போர் வீரன்

## கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ண புகழாரம்

கொழும்பு, ஜன.29

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் சமாதானஉடன்படிக்கைசெய்து போரைநிறுத்தியபிரதமர்ரணில் விக்ரமசிங்கவே நாட்டில் இருக்கும் போர் வீரன் என நவசம சமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற யுத்தம் குற்றவியல் யுத்தம் எனவும் அவர் கூறினார்.

வரலாற்று வீரன் என்ற வகையில் ரணில் விக்ரமசிங்கவின் பெயர் மகாவம்சத்தில் எழுதப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே விக்ரமபாகு கருணராட்ண இதனைக் கூறியுள்ளார்.

யுத்தத்தின்போதுஇலங்கைப் படையினர் சர்வதேச போர் சட்ட திட்டங்களை மீறி தமிழ் மக்களுக்கு எதிராக இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தினர். இந்த விடயம் தொடர்பாக ஊடகவியலாளர்பிரகீத்எக்நெலிகொட ஆராய்ந்து வந்தார். போருக்கு எதிராகச்செயற்பட்டதன் காரணமாக அவர்கடத்திக்கொலைசெய்யப்பட்டார்.

பிரகீத்எக்நேலிகொடைசிங்களவராக இருந்தும் தமிழர்களுக்கு எதிராக குற்றம் இழைக்கப்படுவதை அம்பலப்படுத்துவதற்காக அது குறித்து தேடிய வீரன்.

போரில் வீரர்கள் என சிலரை அடையாளப்படுத்துவது குறித்து வெட்கப்பட வேண்டும். போரில் வீரர்கள் இருப்பார்களாயின் போரில் ஈடுபட்ட இரண்டு தரப்பிலும் வீரர்கள் இருக்க வேண்டும். – எனவும் விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்தார். (ம)

# லொத்தர் சீட்டுக்கள் மீண்டும் 20 ரூபாவுக்கு

தேசிய லொத்தர் சபையால் அச்சிட்டு விநியோகிக்கப்படும் அனைத்து விதமான அதிஷ்டலாபச் சீட்டுக்களும் பெப்ரவரி மாதம் முதல் 20 ரூபாவுக்கு விற்கப்படும் என்று தேசிய லொத்தர்சபை வெளியிட்டுள்ள அறிக்கையில்கூறப்பட்டுள்ளது.

முன்னர் 20 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட அனைத்து விதமானலொத்தர்சீட்டுக்களும் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 30 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டன.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக அவற்றின் விலையை மீண்டும் 20 ரூபாவாகக்குறைப்பதற்குத்தீர்மானிக்கப்பட்டுள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# மட்டக்களப்பில் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குங்கள்!

## யோகேஸ்வரன் எம்.பி. கோரிக்கை

மட்டக்களப்பு, ஜன.29

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்கின்ற பெருமழையால்அதிகமாகப்பாதிக்கப்பட்டுள்ள படுவான்கரை மக்கள் அனைவருக்கும் பாரபட்சம் இன்றி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுங்கள் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் அரச அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெள்ள அனர்த்தங்களினால்பாதிக்கப்பட்டபகுதிகளுக்கு நேற்றுக்காலைசென்றயோகேஸ்வரன், அங்குள்ளநிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

குறிப்பாக, கிரான், செங்கலடி, வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு, வாழைச்சேனை மற்றும் வாகரை ஆகிய பிரதேசங்களுக்குச் சென்று அங்குள்ள பாதிப்புக்கள் தொடர்பாக மக்களிடமே நேரடியாகக் கேட்டறிந்தார்.

அங்கிருந்தவாறு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர், பிரதேசசெயலாளர்கள் ஆகியோரை தொலைபேசி மூலம்தொடர்புகொண்டநாடாளுமன்ற உறுப்பினர், உடனடியாக நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள் எனக் கோரிக்கை விடுத்தார்.

குறிப்பாக படுவான்கரை பகுதியில் உள்ள அனைத்து மக்களுக்கும்நிவாரணநடவடிக்கைகளைமேற்கொள்ளநடவடிக்கை எடுக்கவேண்டும்எனஅவர்தெரிவித்தார்.

படுவான்கரை பிரதேசத்தில் உள்ள மக்கள் விவசாய நடவடிக்கைகளையும்சிறுவிவசாயம்மற்றும் சேனைப் பயிர்ச்செய்கைகளையும் அதிகளவில் மேற்கொள்பவர்கள்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட வறட்சிகாரணமாககடுமையான பாதிப்புகளை எதிர்கொண்ட அந்தப்பிரதேசமக்கள்தற்போது ஏற்பட்டுள்ளகடுமையானமழை காரணமாகவும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர்.

அப்பகுதியில்கூலித்தொழில்களைச்செய்து அன்றாடம்தமது வாழ்க்கையினைகொண்டுசெல்பவர்களும் அதிகளவில் உள்ளனர். இந்த நிலையில் தொடர்ச்சியான மழை காரணமாக அவர்களின்தொழில்கள்பாதிக்கப்பட்டு பெரும் கஷ்ட நிலையில் உள்ளனர். – என்று யோகேஸ்வரன் எம்.பி. சுட்டிக்காட்டினார். (ம)

# தரம் குறைந்த எரிபொருள் பரிசோதனையில்!

கொழும்பு, ஜன.29

கொழும்புதுறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ள தரம் குறைந்த எரிபொருள் தொடர்பில் மீள்பரிசீலனை மேற்கொள்ளப்படுகின்றது என பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

3 லட்சம் பீப்பாய்களில் தரம் குறைந்தஎரிபொருள் கொண்டுவரப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (ஒ)

# மகாத்மாகாந்தியின் நினைவேந்தல் நாளை உருத்திரபுரத்தில்!

கிளிநொச்சி, ஜன.29

கிளிநொச்சி, உருத்திரபுரம் காந்தி நிலைய சிறுவர் இல்லத்தில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, மகாத்மாகாந்தியின் 69 ஆவது நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறும்.

கிளிநொச்சி காந்தி நிலையத் தலைவர் கா.கார்த்திகேசு தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், கரைச்சிப் பிரிவின் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக இந்துக் கல்லூரி அதிபர் கிருஷ்ண பிள்ளை விக்கினராசா, ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை அதிபர் ம.உமாசங்கர், கிளி நொச்சி வர்த்தக சங்கத் தலைவர் விசுவாசம் நவரட்ணராசா, கிளிநொச்சி சாயி சமித்தித் தலைவர் ரதி குணசேகரம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

'காந்தியக் கோட்பாடும் உலகியலும்' என்ற தலைப்பில் காந்தி செயலகச் செயலாளர் திருமதி சோமசேகரமும், 'பிள்ளையும், நான் கண்ட காந்தி மகான்' என்ற தலைப்பில் செல்வி பிரமதீஸ்வரியும் நினைவுப் பேருரை ஆற்றுவர்.

நிகழ்வில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவிகளின் நாட்டியாஞ்சலியும் இடம்பெறும். (இ)

# 'கோப்' குழு உறுப்பினர்களை நீதிமன்றம் அழைக்க முடியுமா?

## சட்ட ஆலோசனை கோர சபாநாயகர் முடிவு

பொது நிறுவனங்கள் தொடர்பானநாடாளுமன்றக்குழுவான 'கோப்' குழு உறுப்பினர்களை உயர் நீதிமன்றத்துக்கு விசாரணைக்காக அழைப்பது நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறும்செயலா என்பது தொடர்பில்சட்ட ஆலோசனையைப் பெற்று சபைக்குத் தெரிவிப்பார் என சபாநாயகர் கரு ஜயசூரிய அறிவித்துள்ளார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான கோப் குழு அறிக்கைக்கு எதிராக வண. நிதியாவல பாலித தேரரால் உயர்நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கில் 'கோப்' குழு உறுப்பினர்கள் பிரதிவாதிகளாகக்குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பிரதிவாதிகளான 'கோப்' குழு உறுப்பினர்களை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உயர்நீதிமன்றம் அறிவித்தல் விடுத்துள்ளது. இது தொடர்பில் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல்ரத்னாயக்கசபையில்வினா எழுப்பிய போதே சபா நாயகர் இவ்வாறு கூறியுள்ளார். (ஒ)

# மின் தடை பற்றிய அறிவித்தல்



யாழ்ப்பாணம், ஜன.29

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளைதிங்கட் கிழமையும் மின் தடை ஏற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இன்று ஞாயிற்றுக்கிழமை ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு மேலதிகமாக சில இடங்களில் மின்தடை ஏற்படும் என்றும் அதே போன்று திங்கட்கிழமையும் மேலதிகமாக குறிப்பிட்டசில இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்றும் நேற்று அறிவிக்கப்பட்டது.

அதற்கமைவாக இந்த இரு நாள்களிலும் மேலதிகமாக மின்தடை ஏற்படும் இடங்கள் வருமாறு:-

கிளிநொச்சிப் பிரதேசத்தில் காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை டொன்பொஸ்கோ, வன்னிவிளாங்குளம், ஒட்டறுத்தகுளம், வடகாடு, பாலிநகர், அம்பாள்புரம், கொள்ளவிளாங்குளம், ஐம்பது வீட்டுத்திட்டம், பாண்டியன்குளம், நட்டாண்கண்டல், கரும்புள்ளியான், தென்னியகுளம், உயிலங்குளம், பாரதிநகர், மாங்காக்குடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், பிள்ளையார் அரிசி ஆலை, 65வது படை ஆலங்குளம், துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், ரி.ஆர்.சி 1, 2 சிக்னல் மீடியம் வேர்க் சொப், பனிக்கங்குளம், CATIC பனிக்கங்குளம், மாங்குளம், நீதிபுரம், டயலொக் தொலைத்தொடர்பு கோபுரம், ஒலுமடு ஆகிய இடங்களில் மின்தடை ஏற்படும்.

காலை 8.30 மணிமுதல் மாலை 5.30 மணி வரை யாழ். பிரதேசத்தின் உடுப் பிட்டி வி.சி, நாச்சிமார்கோவிலடி, இலந்தைக் காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி, ஆலடி, நெடிய காடு, வல்வெட்டித்துறை, வெள்ளைறோட், உடுப்பிட்டிமகளிர், உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, கம்பர்மலை பாரதிதாசன், பழைய பொலிஸ் நிலையம், உடுப்பிட்டி வாசிகசாலை, பொக்கனைச்சந்தி, கெருடாவில், தொண்டைமானாறு, மயிலியதனை, சிதம்பரா வடக்கு, மருதனார்மடம் நடுப்பகுதி, இணுவில், உப்புமடம், தாவடி, சுதுமலை, சம்பியன் லேன், கொக்குவில்சந்தி, ஆடியபாதம் வீதி, பிரம்படி, மாவடி, மருத்துவ பீடப்பிரதேசம், குளப்பிட்டி ஆகிய இடங்களிலும், கிளிநொச்சிப் பிரதேசத்தில் நாச்சிக் குடா விலும், வவுனியா பிரதே சத்தில் வெளிக்குளத்திலிருந்து குடாகச் சக்கொடிய வரை, கோவில்குளத்தில் இருந்து சிதம்பரபுரம் வரை, ரி.எம்.எம். கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும்-

நாளைதிங்கட்கிழமை காலை 8 மணிமுதல் 6.30 மணிவரை வவுனியா பிரதேசத்தில் குருமன்காடு, வெளிக்குளத்திலிருந்து குடாகக்கச்சக்கொடிய வரை, கோவில்குளத்திலிருந்து, சிதம் பரபுரம் வரை, கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும்-

மன்னார்பிரதேசத்தில்பள்ளிமுனை, நானாட்டானிலிருந்து அச்சங்குளம் வரை, எருவிட்டான் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடை ஏற்படும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# சுமந்திரனைப் படுகொலை செய்ய சதி!

## இலங்கை அதிகாரிகள் கண்டுபிடித்தனர் என்று 'தி ஹிந்து' செய்தி வெளியீடு

கொழும்பு, ஜன.29

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைப் படுகொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சதித் திட்டம் ஒன்றை இலங்கை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர் என்று 'தி ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

தீவிரமான பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பது தொடர்பாக இலங்கைப் பிரதமர் செயலகத்தில் இருந்து, இந்த மாத முற்பகுதியில் சுமந்திரனுக்குத் தகவல் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் சுமந்திரனுக்குப் பரிமாறப்பட்டது என்று இலங்கை அரசின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் 'தி ஹிந்து'வுக்குத் தெரிவித்துள்ளார் என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

உயர்மட்டப் புலனாய்வு அறிக்கைகளின்படி இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்ட அதேவேளை, வடக்கில் இது தொடர்பாக நான்கு விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு முன்னாள் போராளிகளைக் கைது செய்த கிளிநொச்சி பொலிஸாரிடம் இது தொடர்பாக, 'தி ஹிந்து' விசாரித்த போது, இந்த விசாரணைகளை பயங்கரவாத தடுப்பு பிரிவே கையாள்கிறது என்று தெரிவித்துள்ளனர். எனினும் பயங்கர வாத தடுப்பு பிரிவினர் எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

அதேவேளை, கைது செய்யப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையான - தனது பெயரை



வெளிப்படுத்த விரும்பாத சட்டத்தரணி ஒருவர், கிளைமோர்கள் மற்றும் டெட்டனேற்றர்களை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

தமக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக அரசால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று சுமந்திரன் உறுதிப்படுத்தியுள்ளார் என்பதுடன் சில விவரங்களையும் பகிர்ந்து கொண்டுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் 13 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சுமந் திரன் பங்கேற்கவிருந்த நிகழ்வு ஒன்று கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டமை தொடர்பாகக் கருத்து வெளியிட்ட சுமந்திரன், பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக நிகழ்வை ரத்து செய்யவில்லை. அதற்கு வேறு சில காரணங்கள் இருந்தன. பின்னரே, ஜனவரி 13 ஆம் திகதி படுகொலை முயற்சி ஒன்றுக்குத் தயாராக இருந்தார்கள் என்று நான்கு பேர் கைதுசெய்யப்பட்டனர் என்று அறிந்து கொண்டேன். புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் பலர் வாழ்வதற்காகப் போராடுகின்றனர். அவர்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குமாறு நாம் அரசிடம் கேட்டிருந்தோம். அத்தகைய உதவிகள் கிட்டாத போது, அரசியல் நோக்குடன் செயற்படுவோரால் அவர்கள் இலகுவாக இலக்கு வைக்கப்படுகிறார்கள். - என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, சுமந்திரனை டிசெம்பர் 12 மற்றும் ஜனவரி 13ஆம் நாள்களில் தாளையடி - சோரன்பற்று வீதியில் கிளைமோர் தாக்குதல் நடத்தி கொலை செய்ய தயார்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன எனவும், எனினும் குறிப்பிட்ட நாள்களில் சுமந்திரன் அந்தப் பாதையால் பயணிக்காமையால் அவர் தப்பினார் என்றும் கொழும்பு ஆங் கில நாளிதழ் ஒன்றில் வெளியாகியுள்ள கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.- என்றுள்ளது. (ஐ)


## மெய்வன்மைப் போட்டிகள்

உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும். இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன் கலந்து கொள்வார். (ச)

★ ★ ★

யாழ். அல்வாய் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் ந.இராசலிங்கம் தலைமையில் இடம்பெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் கலந்து கொள்வார். (ச)

## பதில் பிரதம நீதியரசர் நியமனம்



கொழும்பு,ஜன.29

பதில் பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதியரசர் பிரசாத் டெப் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் நீதியரசர் பிரசாத் டெப் பிரதம நீதியரசராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

இந்த பதவிப் பிரமாண நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. அபயகோனும் பிரசன்னமாகியிருந்தார்.

பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் வெளிநாட்டு விஜயமொன்றை மேற்கொண்டுள்ள காரணத்தால் இவ்வாறு பதில் பிரதம நீதியரசராக பிரசாத் டெப் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வெளிநாடுகளில் துன்புறுத்தல்களை எதிர்கொள்வோருக்கு நிரந்தரத் தீர்வு

### வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் தெரிவிப்பு

வெளிநாடுகளுக்குச் சென்று துன்புறுத்தல்களை அனுபவித்துவரும் பணியாளர்களுக்கு நிரந்தரமாகத் தீர்வுகாண வேண்டிய காலம் வந்துள்ளது என்று இலங்கையின் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரல தெரிவித்துள்ளார்.

கஹவத்தையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நாட்டில் சட்ட விரோதமான முறையில் வேலை தேடிச் செல்வோரின் தொகை நாளாந்தம் அதிகரித்துள்ளது. வெளிநாட்டுப் பணிப்பெண்களாகச் சென்றவர்கள் பலர் பலவித இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

பலர் தமது நகைகள், பணம் உட்பட தமது வாழ்க்கையையே தொலைத்து நிற்கின்றார்கள். இதன் காரணமாகவே பலர் நாடு திரும்பியதும் தற்கொலை செய்து கொள்கின்றனர். வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் என்ற வகையில் இதனைத் தடுக்க வேண்டிய கடமை எனக்கிருக்கின்றது. இதற்காக எனது வேலையையும் இராஜினாமாச் செய்வதற்குத் தயாராக உள்ளேன்.- என்றார். (ஐ)







பருத்தித்துறை கலாசார மத்திய நிலையத்தின் திறப்பு விழா நேற்று இடம்பெற்றுள்ளது.

உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் எஸ்.பி.நாவின்ன வைபவ ரீதியாக நாடா வெட்டி கலாசார மத்திய நிலையதைத் திறந்து வைத்தார்.

விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றமையும் மண்டபம் திறந்து வைக்கப்படுவதையும் முதல் இரு படங்களிலும், கலாசார மத்திய நிலையத்துக்கு சங்கீத உபகரணங்கள் வழங்கப்படுவதையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (ஐ-40)


**மணமக்கள் விபரம்**

☎ 0114320017- 8
திங் - வெள் : 08.30 a.m - 05.00 p.m
சனி : 08.30 a.m - 02.00 pm

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| **3320 \| வே**<br>1978 \| 165cm \| Divorced<br>Business \| இலங்கை<br>உத்தரம் (சிம்மம்) \| கிறிஸ்தவம் | **3982 \| ந**<br>1981 \| கரவெட்டி \| 152 cm<br>Nurse Midwife \| இலங்கை<br>உத்தராடம்(தனுசு) \|கி.பா: 33\| செவ்: 8 |
| **4831 \| கோ + வே**<br>1976 \| தெல்லிப்பளை \| 170 cm<br>Sales Manager \|இலங்கை<br>பூரம் (சிம்மம்) \|கி.பா: 26 \| செவ்:4 | **7235 \| ந**<br>1981 \| கோப்பாய் \| 156 cm<br>Field Officer \| இலங்கை<br>பூசம் (கடகம்) \| செவ்: 12 |
| **4016 \| பா**<br>1974 \| கொழும்பு 13\| 169cm<br>Salesman \| இலங்கை\| கிறிஸ்தவம்<br>பூரட்டாதி (கும்பம்) \|கி.பா: 26 | **4612 \| வே**<br>1981 \| திருகோணமலை \| 168 cm<br>Doctor \|இலங்கை\| செவ்: 12<br>திருவோணம் (மகரம்)\| கி.பா: 78 |
| **4624 \| க**<br>1969\| கரவெட்டி \| 162 cm<br>Farmer \| இலங்கை<br>உத்தரம்(கன்னி) \| செவ்: 1 | **6939 \| ப**<br>1981 \| அச்சுவேலி \| 167 cm<br>Lecturer \| இலங்கை<br>பூசம் (கடகம்) \| செவ்: 4 |
| **7272 \| க**<br>1969 \| யாழ்நகர் \|162 cm<br>Business \| இலங்கை<br>கிறிஸ்தவம் | **5839 \| வே**<br>1981 \| மூளாய் \|164 cm\| Divorced<br>Analysis \| இலங்கை\| செவ்: 4<br>மிருகசீரிடம் (மிதுனம்) \| கி.பா: 34 |

அருந்ததி
இணைய திருமண சேவை
www.arunthathee.com | 077 716 45 24
480 /2c, காலி வீதி, வெள்ளவத்தை 011 406 32 82 | 20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் 021 492 75 27

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மீண்டும் வலுப்பெறும் மஹிந்தர்

'காலைச் சுற்றிய பாம்பு கொத்தாமல் விடாது' என்பார்கள்.

மைத்திரி - ரணில் என்ற கூட்டு நல்லாட்சி அரசின் காலைச் சுற்றியிருக்கின்றது கூட்டு எதிரணி என்ற பாம்பு. அதன் தலை - அல்லது தலைவர் - முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷ.

இனவாத நஞ்சைக் கக்கிக் கொண்டிருக்கும் கூட்டு எதிரணி என்ற பாம்பு, நல்லாட்சி அரசின் காலைச் சுற்றிக் கொண்டு விட்டது. எப்போது அது போகும் - அல்லது கொத்தும் - என்பதுதான் கேள்வி.

தன் கைவரிசையைக் காட்ட அது தயாராகிவிட்டது என்பதையே நேற்று முன்தினம் நடைபெற்ற அதன் நுகேகொடைக் கூட்டம் காட்டு கின்றது.

கூட்டு எதிரணிக்கும் நுகேகொடைக்கும் ஓர் இராசி உண்டு போலும்.

2015 ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை அடுத்து,அத்தேர்தலில் தோல்வியடைந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அடுத்த நாள் காலையில் நேரத்துடனேயே ஜனாதிபதி மாளிகை, தாம் வைத்திருந்த அலரிமாளிகை என்பவற்றை எல்லாம் விட்டு விட்டு மூடை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு புறப்பட்டார்.

அவர் அத்தோல்வியுடன் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவாரா, இல்லையா என்பது குறித்துப் பல்வேறு கதைகளும் அடிபட்டபோது, இதே நுகேகொடையில், இது போன்ற பாரிய பொதுக் கூட்டம் ஒன்றைக் கூட்டி, மீண்டும் மஹிந்த அரசியலுக்கு வரவேண்டும் என்ற செய்தியை, அக் கூட்டத்தின் மூலம், அங்கு திரண்டிருந்த பொதுமக்கள் வாயிலாக, மஹிந்தருக்குச் சொன்னது கூட்டு எதிரணி.

அந்தக் கூட்டம் நடைபெற்றது 2015 பெப்ரவரி 18 ஆம் திகதி அன்று ஆகும். அந்தத் திகதியை கூட்டு எதிரணி அப்போது தேர்ந்தெடுத்தற்கும் ஒரு காரணம் கூறப்பட்டது. அன்றைய தினத்துக்குச் சரியாக இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் - 1815 பெப்ரவரி 18 ஆம் திகதி தான் - ஆங்கிலேயர் கடைசி கண்டி மன்னனான ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனைக் கைது செய்தனர். முழு இலங்கையினதும் இறைமை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடம் வீழ்ந்ததான குறியீட்டுத் திகதியாக அது கொள்ளப்பட்டது. அந்த இறைமை வீழ்ந்ததின் இருநூறாம் ஆண்டில் அந்தக் கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் திரண்ட சனசமுத்திரம், அச்சமயம் செய்த மெதமுலனவில் வீட்டுக்கு ஓய்வெடுக்கச் சென்ற தம்மை மீண்டும் அரசியலுக்கு அழைத்து வந்ததாக மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்றார்.

அந்தக் கூட்டம் நடைபெற்றுச் சரியாக 23 மாதங்களின் பின்னர் - ஏறத்தாழ இரண்டு வருடங்களின் பின்பு - நேற்று முந்தினம் அதே இடத்தில் கூட்டு எதிரணியின் கூட்டம் கூட்டப்பட்டது.

இரண்டு வருடத்துக்கு முன்னர் நடைபெற்ற அந்தக் கூட்டம் தான் மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்கு இழுத்து வரத் தூண்டியதா என்பது தெரியவில்லை. ஆனால், இந்த இரண்டு நுகேகொடைக் கூட்டங்களும் - அவை இரண்டுமே ஏறத்தாழ இரண்டு வருட வித்தியாசத்தில் நடத்தப்பட்ட போதிலும் - இலங்கையின் சமகால அரசியலில் காத்திரமான செல்வாக்குச் செலுத்தும் விவகாரங்களாக மாறியிருக்கின்றன என்பது மட்டும் உண்மை.

நுகேகொடை கூட்டத்துக்குத் திரண்ட - அல்லது திரட்டப்பட்ட - சனசமுத்திரம், ஆட்சியாளர்கள் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கும் என்பது நிச்சயம். அந்தக் குறிப்புடன்தான் அந்தக் கூட்டத்தில் தமது பேச்சையே ஆரம்பித்தார் மஹிந்த ராஜபக்ஷ.

மஹிந்த ராஜபக்ஷவுடன் சேர்ந்திருக்கும் அணி -

அவரது அண்மைக் காலப் பேச்சுகள் - நுகேகொடை கூட்டம் உட்பட பொது மேடைப் பேச்சுகள், அறிவிப்புகள், அறிக்கைகள் -

அவரது தரப்பின் அண்மைக் கால அரசியல் காய் நகர்த்தல்கள் -

இவற்றையெல்லாம் நோக்கும்போது ஒரு விடயம் தெளிவாகின்றது.

நல்லாட்சி அரசைக் கவிழ்த்து, ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதற்கு அவர் வைத்திருக்கும் - அவர் கைவசம் பேணும் - ஒரேயொரு துரும்புச் சீட்டு இனவாதமே. இனவாதம் மட்டும்தான்.


தென்னிலங்கையில் பௌத்த, சிங்கள பேரினவாதத்தைக் கிளப்பி, அதன் மூலம் நல்லாட்சி அரசுக்கு எதிராக மக்களைத் திசை திருப்பி, ஆட்சியைக் கவிழ்த்து, அதிகாரத்தைக் கைப்பற்றுவது ஒன்றே அவரின் இலக்கு என்பது வெளிப்படையான நிகழ்ச்சி நிரல் ஆகிவிட்டது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் எண்ணிக்கையில் சிறுபான்மையினராக உள்ள தரப்புக்களை - குறிப்பாக தமிழ் மக்களை - புறமொதுக்கி, அல்லது அவர்களைச் சிறுமைப்படுத்துவதன் மூலம் - பேரினவாதத் தரப்பின் ஆதரவுப் பலத்தை - வாக்கை - சுருட்டுவதுதான் அந் நிகழ்ச்சி நிரலின் பிரதான அம்சமாகும்.

சிறுபான்மையினரான தமிழர்களின் ஆதரவு குறித்து மஹிந்த தரப்பு கவலைப்படவில்லை என்பது, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்றுக் கொண்ட பின்னர், அவரால் கட்சியிலிருந்தும் ஒதுக்கி வைக்கப்பட்ட கருணாவை மீண்டும் நுகேகொடைக் கூட்ட மேடையில் பேச்சாளராக ஏற்றியமையிலிருந்தே உறுதிப்படுத்தப் பட்டுவிட்டது.

பேரினவாதம் பேசி, அதில் அரசியல் பிழைப்பு நடத்தும் உத்தி, தென்னிலங்கை அரசியலில் பெரும் வெற்றி வாய்ப்பைத் தருவதால் மஹிந்தவின் காட்டில் மழைதான்.

செய்ய வேண்டியதை, செய்ய வேண்டிய காலத்தில் செய்யாமல் தவறிழைத்து - பருவத்தே பயிர் செய்யத் தவறி - அரசியல் அந்தகாரத்துக்குள் நல்லாட்சி அரசு சிக்கிவிடுமோ என்பதுதான் இப்போது நடுநிலையானவர்களின் கவலையாக உள்ளது.




# நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணைந்து போராடுவோம்

### நீர்த்தேக்க அங்குரார்ப்பண நிகழ்வில் மைத்திரி

கொழும்பு, ஜன.29

அதிகாரத்துக்காக அன்றி நாட்டைக் கட்டியெழுப்பவே அனைவரும் இன்று ஒன்றிணைந்து போராடவேண்டியுள்ளது.

அதிகாரத்தைக் கோரி சிலர் போராட்டங்களை முன்னெடுத்த போதும் 2020 இற்குப் பின்னர் நடைபெறும் தேர்தலில் மக்கள் தீர்ப்புக்கு அமையவே அனைத்தும் அமையும் அதற்கு முன்னர் அரசியல் தொடர்பாக எவருக்கும் நினைத்துப் பார்க்கவும் முடியாது.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மொனராகலை கும்புக்கன் ஓயா நீர்த்தேக்கத் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர்மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தேர்தல் காலத்தில் அரசியல் நோக்கங்களுக்காகப் போராட்டங்களை முன்னெடுத்த போதும் மக்கள் விருப்பத்தில் தெரிவான புதிய அரசு முன்னேற்றத் திட்டங்களுடன் நாட்டை முன் கொண்டு செல்கிறது. இந்த நிலையில் குறுகிய அரசியல் நோக்கங்களை மறந்து அந்தத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதே நாட்டை விரும்பும் அனைத்து அரசியல்வாதிகளதும் பொறுப்பு.

ஊவா வெல்லஸ்ஸவை மீண்டும் விவசாயத் துறையில் முன்னேற்றி அந்த மக்களின் வாழ்க்கையை சுபீட்சமடையச் செய்வதற்காக 31 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

விவசாயத் துறைக்குத் தேவையான நீரை வழங்குவதுடன் துரிதமாகப் பரவிவரும் சிறுநீரக நோயை ஒழித்துக்கட்டி மக்களுக்குத் தேவையான சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக் கொடுப்பது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

விவசாய சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி நாட்டின் விவசாயத் துறையைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான நிகழ்ச்சித் திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர குளங்களைப் புனரமைக்கவும் பல்வேறு புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக காணிகளை இழந்த மக்களைப் பொருளாதார ரீதியாக முன்னேறச் செய்து அவர்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகளை அரசு முறையாக மேற்கொண்டு வருகிறது. அது தொடர்பில் இதுவரை எவ்வித பிரச்சினையும் உருவாகவில்லை.

மொனராகலை மாவட்ட அபிவிருத்திக்குத் தேவையான அனைத்து நிதிகளையும் வழங்கி மாவட்டத்தை அபிவிருத்தி செய்து மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.-என்றார்.

அமைச்சர்களான விஜித் விஜயமுனி சொய்சா, ரஞ்சித் மத்துமபண்டார, பிரதி அமைச்சர் சுமேதா பீ ஜயசிங்க, ஊவா மாகாண விசேட கருத்திட்ட பணிப்பாளர் ஜகத் புஷ்பகுமார, ஊவா மாகாண ஆளுநர் எம்.பீ ஜயசிங்க ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ)

# இளைஞர்களின் எதிர்காலத்துக்கு ஏற்றவாறு நாடு பெரியளவில் அபிவிருத்தி செய்யப்படும்

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.29

நாட்டின் இளைஞர் சமூகத்துக்கு சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்துவதற்காக இலங்கை பெரியளவில் அபிவிருத்தி செய்யப்படும்.

வங்காள விரிகுடாவில் உள்ள நாடுகளின் அபிவிருத்தியில் திருகோணமலை துறைமுகத்துக்கு வர்த்தக ரீதியில் பெரியளவில் கிராக்கி நிலவும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முத்துராஜவெல கைத்தொழில் வலயத்தின் முதலாவது சேவைகள் நகரத்தின் முதல் கட்டப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் பிரதமர் உரையாற்றினார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் இளைஞர் சமூகத்துக்கு சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்துவதற்காக இலங்கை பெரியளவில் அபிவிருத்தி செய்யப்படும்.

இலங்கை இந்து சமுத்திரத்தின் பொருளாதார கேந்திர நிலையமாக மாற்றியமைக்கப் படும். யுத்தத்தின் பின்னர் பெரிய அபிவிருத்தி செயற்றிட்டங்களை ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. கண்டி, கொழும்பு, அம்பாந்தோட்டை ஆகிய நகரங்களை இணைத்து பெரியளவில் அபிவிருத்தி வலயமொன்று அமைக்கப்படவுள்ளது.

இரண்டு விமான நிலையங்களும் இரண்டு துறைமுகங்களும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதற்கமைய வர்த்தக வலயங்களும் மேம்படுத்தப் படும். இதற்கு பெரியளவான நிதி தேவை. தற்சமயம் கடந்த அரசு பெற்ற கடனை செலுத்த வேண்டியுள்ளது.- என்றார்.

(ஐ)



**வாழ்தலுக்கு அச்சுறுத்தலாக உள்ள டெங்கு நோயைத் தவிர்ப்போம்.**

நீர் தேங்கி இருக்கும் சிறுகுட்டைகள், நீர்த் தொட்டிகள், ஆழம் குறைந்த கிணறுகள், வாய்க்கால்களில் நுளம்புக் குடம்பியை உணவாகக் கொள்ளும் மீனினங்களை இடுவோம்/ வளர்ப்போம். இம் மீனினங்களை ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிலும் இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

"சூழலை தூய்மையாகப் பேணுவோம்."

தகவல் – சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை – யாழ்ப்பாணம்

## நாளை

30.01.2017
திங்கட்கிழமை
நட்சத்திரம் : சதயம் மு.இ 11.59 வரை
திதி : திருதியை பி.இ 5.36 வரை
சுபநேரம் : 12.36 – 2.06 வரை
இராகுகாலம் : 08.06 – 9.36 வரை

# புகலிடக் கோரிக்கையை நிராகரித்த சுவிஸ்: 30 ஆயிரம் யூரோ இழப்பீடு செலுத்த உத்தரவு

## மனித உரிமைக்கான ஐரோப்பிய நீதிமன்றம் பிறப்பிப்பு

முன்னாள்விடுதலைப்புலிப் போராளி ஒருவரின் புகலிடக் கோரிக்கையை நிராகரித்து அவரை இலங்கைக்குத் திருப்பி அனுப்பியமைக்காக, அவருக்கு 30 ஆயிரம் யூரோக்களை இழப்பீடாகச் செலுத்துமாறு சுவிஸ் அரசுக்கு, மனித உரிமைக்கான ஐரோப்பிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெயர் குறிப்பிடப்படாத இந்த முன்னாள் போராளியையும், அவரது குடும்பத்தினதும் புகலிடக் கோரிக்கையை நிராகரித்திருந்த சுவிஸ் அரசு, அவர்களை 2013 ஆம் ஆண்டு இலங்கைக்குத் திருப்பி அனுப்பியிருந்தது.

முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினராக அங்கம் வகித்துள்ள அந்த நபர், அரச படைகளுக்கெதிரான சண்டைகளில் பங்கேற்றுள்ளார்.

2003 ஆம் ஆண்டு கொழும்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு சுமார் மூன்று மாதங்களாகத் தடுத்துவைக்கப்பட்டு அவர் சித்திரவதை செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் இத்தாலி ஊடாகச் சென்று 2009 ஆம் ஆண்டு மே மாதம் சுவிஸில் தனது மனைவியுடன் புகலிடம் கோரிய இவரது புகலிடக் கோரிக்கை 2011 ஆம் ஆண்டு நிராகரிக்கப்பட்டுள்ளது.

### மேன்முறையீடு நிராகரிப்பு

இதன் பின்னர் இவர் மேற்கொண்ட மேன்முறையீடுகளும் சுவிஸ் நீதிமன்றங்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

தான் திருப்பி அனுப்பப்பட்டால் கைதுசெய்யப்பட்டுச் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவேன் என்று அவர் தெரிவித்திருந்த போதிலும், அவரது கோரிக்கைகள் நம்பகத்தன்மையின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டு, அவரும், அவரது மனைவியும் சுவிஸில் பிறந்த இரண்டு குழந்தைகளும் 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சுவிஸ் அரசால் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டிருந்தனர்.

திருப்பி அனுப்பப்பட்ட அந்த முன்னாள் போராளியும், அவரது குடும்பமும் கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டு கடும் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 13 மணி நேர விசாரணையின் பின்னர் அவரது மனைவியும், பிள்ளைகளும் விடுவிக்கப்பட்ட போதிலும், முன்னாள் போராளி பூசா தடுப்பு முகாமில் பலமாதங்கள் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

அதன் பின்னர் புனர்வாழ்வு என்ற பெயரில் அடையாளம் காணப்படாத இடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறார்.

### போராளியைச் சந்தித்த தூதரக அதிகாரிகள்

2013 ஆண்டும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி அந்தப் போராளி தடுத்துவைக்கப்பட்டிருந்த இடத்துக்கு விஜயம் செய்துள்ள சுவிஸ் தூதரக அதிகாரியிடமும், ஐ.நா. மனித உரிமை அதிகாரியொருவரிடமும் அவர் அங்குள்ள நிலைமைகளைக் கூற முடியாத ஓர் இக்கட்டான சூழலில் இருந்தார் என அந்த அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த விஜயத்தின் பின்னர் அவரது மனைவியும், பிள்ளைகளும் மீண்டும் சுவிஸ் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் விடுவிக்கப்பட்டுள்ள இவர் மீண்டும் மனிதாபிமான அடிப்படையில் சுவிஸ் செல்வதற்கு விண்ணப்பித்து, அங்கு சென்ற அவர் மீண்டும் புகலிடக் கோரிக்கைக்கு விண்ணப்பித்தபோது அந்த விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதே நிலைமை பெயர் குறிப்பிடப்படாத மற்றுமொரு நபருக்கும் ஏற்பட்டுள்ளது.

இந்த வழக்குக் குறித்து, மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றம் வழங்கியுள்ள மிக முக்கியமான தீர்ப்பொன்றில், அந்த நபர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் சித்திரவதைக்குள்ளாவார் என்று கூறியிருந்தமைக்கு மத்தியிலும், திருப்பி அனுப்பப்பட்டு அங்கு சித்திரவதைக்குள்ளாகியிருக்கிறார் என்றும் இந்த அபாயங்கள் சுவிஸ் அறிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்திருக்கிறது.

பாதிக்கப்பட்ட நபருக்கு ஏற்பட்ட இழப்புக்ககாக சுவிஸ் அரசு 30 ஆயிரம் யூரோக்கள் இழப்பீடாகவும், 4 ஆயிரத்து 770 யூரோக்கள் செலவுத் தொகையாகவும் வழங்கவேண்டும் என்று தீர்ப்பளித்திருக்கிறது.

### ரணில்- மைத்திரி ஆட்சியிலும் சித்திரவதைகள்

2015 ஆம் ஆண்டு புதிய மைத்திரி - ரணில் அரசு பதவியேற்றதன் பின்னர் மனித உரிமைகள் நிலைமைகளின் பெரியளவில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்ற போதிலும், இன்றும் சித்திரவதைகள் இடம்பெற்று வருகின்றன என்று பல்வேறு சர்வதேச தொண்டு நிறுவனங்கள் ஆதாரங்களுடன் கூறி வரும் நிலையிலேயே இந்தத் தீர்ப்பு வெளியாகியிருக்கிறது.

நேற்று முன்தினம் வெளியான ஐக்கியநாடுகளின் சித்திரவதைகளுக்கு எதிரான விசேட பிரதிநிதி ஹுவான் மெண்டெஸ் வெளியிட்டிருந்த அறிக்கையிலும் இவ்வாறான சம்பவங்கள் இலங்கையில் தொடர்வதை உறுதிசெய்திருக்கிறார். (ஐ)

# ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வருடாந்தம் நீரில் மூழ்கி உயிரிழப்பு

கொழும்பு, ஜன.29

ஆண்டு தோறும் இலங்கையில் நீரில் மூழ்குவதன் மூலம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரணங்கள் ஏற்படுகின்றன என்று இலங்கை உயிர்ப் பாதுகாப்பு சங்கத்தின் செயலாளர் அசங்க நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சுற்றுலாப் பயணங்களின் போது நீரில் மூழ்கி உயிரிழப்போரை விடவும் அன்றாட நடவடிக்கைகளின் போது நீரில் மூழ்கி உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகம் என்று குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிட்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 99 வீதமான மக்களுக்கு நீச்சல் தெரியாது. நீச்சல் தெரியாதவர்களுக்கு சிறிய ஓர் நீர் நிலை கூட ஆபத்தாக அமையக் கூடும். நீர் நிறைக்கப்பட்ட பேசன் ஒன்றால் குழந்தையின் உயிர்பறி போகக்கூடிய அபாயமுண்டு.

நீச்சல் சம்பியன்களால் கூட நீந்த முடியாத ஆபத்தான வலயங்கள் இலங்கையில் காணப்படுகின்றன.

நீரில் மூழ்குவோரைக் காப்பற்றச் சென்றே அதிகமானவர்கள் உயிரிழக்கின்றனர். நீரில் மூழ்கி உயிரிழப்போரை பாதுகாக்கும் நுட்பங்கள் பற்றி மக்களுக்குத் தெளிவூட்ட வேண்டும்.

நீரால் ஏற்படக் கூடிய உயிராபத்துக்கள் தொடர்பில் உயிர்ப் பாதுகாப்பு வழிமுறைகள் பாடசாலை பாட விதானத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# நிவாரண விநியோகம்



தென்மராட்சி, ஜன.29

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அறுபது கிராம அலுவலர் பிரிவுகளிலும் உள்ள புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் குடும்பங்கள் மற்றும் இந்தியாவின் தமிழகத்தில் அகதிகளாக வாழ்ந்து மீண்டும் தாய் நாடு திரும்பியவர்களின் குடும்பங்களுக்குக் கடந்த வியாழக்கிழமை நிவாரணம் வழங்கப்பட்டது.

இவர்களுக்கான உலர் உணவுப் பொருள்களை இந்தியாவின் தமிழகத்தில் இருந்து நாடு திரும்பிய 60 குடும்பங்களும், புனர்வாழ்வு அளிக்கப்பட்ட 178 முன்னாள் போராளிகளின் குடும்பங்களும் பெற்றுக் கொண்டன. (ஐ-21)





தமிழ் அறிஞர் சி.வை.தாமோதரம்பிள்ளையின் நினைவு பதிவுகள் நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். நாவலர் மண்டபத்தில் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் 40 பாடசாலைகளுக்கு நாவலர் உருவச் சிலை வழங்கப்பட்டது. மாணவன் ஒருவரிடம் உருவச் சிலை வழங்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (ஐ-20)

## உலக தொழுநோய் தினம் நிகழ்வு இன்று

உலக தொழுநோய் தின நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்குச் சுழிபுரம் பிரதேச சபை மண்டபத்தில் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் க.நந்தகுமார் தலைமையில் இடம் பெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மருத்துவத்துறை விரிவுரையாளர் ந.சிவராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக வலி.மேற்குப் பிரதேச செயலர் அ.சோதிநாதன், வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் பி.செல்வின் கிரேனியஸ் ஆகியோரும் கலந்து கொள்வர். (ச)

## மருத்துவச்சொல் அகராதி வெளியீடு

வட இலங்கை மருந்தியலாளர் சங்கத்தின் ஆங்கில - ஆங்கில - தமிழ் மருத்துவச் சொல் அகராதி வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் விடுதியில் இடம் பெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்திய சாலை கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் எஸ்.சந்தி ரகுமார் கலந்து கொள்வார். மருத்துவச்சொல் அகராதியின் மதிப்புரையை யாழ்.பல்கலைக்கழக சமூக மருத்துவ நிபுணர் மருத்துவர் இ.சுரேந்திரகுமார் வழங்குவார். (ச)

# நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வை எட்ட வேண்டும்

## ரெலோ இயக்க கொள்கை பரப்புச் செயலாளர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.29

அரசமைப்புத் திருத்தம் தொடர்பாகத் தீர்க்கமான முடிவுகளை எடுக்கத் தடையாக, மக்கள் மத்தியில் அரசியல் இலாபத்துக்காகப் போலியான பரப்புரைகளைச் செய்து தவறாக வழி நடத்துவதற்குச் சிலர் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆயினும், நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு எட்டப்பட வேண்டும். இல்லையெனில் நாடு மீண்டும் மோசமான நிலையை அடையும்.

இவ்வாறு ரெலோ இயக்கத்தின் கொள்கை பரப்புச் செயலாளர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இந்த அரசை உருவாக்கிய பெரிய பொறுப்பு சிறுபான்மையின மக்களிடம் உள்ளது. இதன் மூலம் தமிழ் மக்களின் எதிர்கால இருப்பையும் அரசியல் எதிர்காலத்தையும் அவர்களின் உரிமைகளையும் அரசமைப்புத் திருத்தம் மூலம்தான் உறுதிப்படுத்த முடியும்.

அது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட மிதவாத தமிழ்க் கட்சிகள் அனைத்துமே அதிகாரப் பகிர்வையே இன நெருக்கடிக்கான உகந்த அரசியல் தீர்வு என்ற வகையில் முன்னெடுத்து வருகின்றன.

காணாமற்போனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணல் மற்றும் அரசியல் கைதிகளை விடுவித்தல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து மக்கள் நடத்தும் போராட்டங்கள் இன்னும் முடிந்தபாடு இல்லை. காணாமல் போனவர்கள் தொடர்பாக அலுவலகம் திறப்பதாக அரசு தெரிவித்துள்ளது. அது இன்னும் திறக்கப்படவில்லை. காணிப் பிரச்சினை, வாழ்விடப் பிரச்சினை, வாழ்வாதாரப் பிரச்சினை உள்ளிட்ட இன்னோரன்ன பிரச்சினைகளிலிருந்து தமிழ் மக்கள் விடுபடவில்லை.

தற்போது இந்த நாட்டில் மக்களிடையே பிளவை ஏற்படுத்துவதற்காக விசமத்தனமான இனவாதக் கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர். பழைய பல்லவி போன்று நாடு பிளவுபடப் போகிறது என்று சூழ்ச்சிக்காரர்கள் பல்வேறு உத்திகளைக் கையாண்டு பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.



தமிழ் மக்களுக்குக் கிடைக்கக் கூடிய தீர்வுகளைத் தடுக்கும் வகையில் போலியான, அடிப்படையற்ற குற்றச் சாட்டுக்களை எதிரணியினர் பரப்பி வருகின்றனர். எனவே, மக்களைப் பலிக் கடாவாக்கி ஆதாயம் தேடும் தரப்பினரின் செயற்பாடுகளைக் காட்டி அரசமைப்பு தொடர்பான விவகாரங்களை அரசு காலம் தாழ்த்தாமல் முன்னெடுக்க வேண்டும்.- என்றார். (ஐ)




## சூழலைச் சுத்தமாக்குவதை வலியுறுத்திப் பேரணி

### பட்டிருப்புப் பகுதியில் நேற்று

பட்டிருப்பு,ஜன.29

ஜனாதிபதியின் கிழக்கு மாகாணத்துக்கான விஜயத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சூழலைச் சுத்தப்படுத்தும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகமாகப் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தால் நேற்று சனிக்கிழமை பேரணி ஒன்று இடம்பெற்றது.

பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ந.புள்ளநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்தப் பேரணியில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள், கணக்காளர், பொறியியலாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இந்தப் பேரணியில் 'போதை மற்றும் மது பாவனையை முற்றாக ஒழிப்போம்', 'எமது சிறார்களை அழிவில் இருந்து மீட்போம்', 'சுத்தமான காற்றைச் சுவாசிப்போம்', 'நுளம்பு வாழ இடம் கொடுத்தால் உன் வாழ்வையே பறி கொடுப்பாய்', 'காட்டை அழிப்பவன் நாட்டை அழிப்பவன்', 'புகை சூழலின் பகை' போன்ற சுலோகங்களைக் கொண்ட பதாகைகளை பலரும் ஏந்தி இருந்தனர். (ச)

## ஆடை விற்பனை நிலையத்தில் தீ!

### ரூ.75 லட்சம் பெறுமதியான ஆடைகள் எரிந்து நாசம்

அம்பாறை,ஜன.29

அட்டாளைச்சேனை-கல்முனை பிரதான வீதியில் அமைந்துள்ள ஆடை விற்பனை நிலையம் ஒன்றில், நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை ஏற்பட்ட தீவிபத்தில் சுமார் 75 லட்சம் ரூபா பெறுமதியான ஆடைகள் எரிந்துள்ளன.

அட்டாளைச்சேனை 5 ஆம் பிரிவில் அமைந்துள்ள இந்த ஆடை விற்பனை நிலையம் அபுசாலி முகம்மட் நப்றாஸ் என்பவருக்குச் சொந்தமானதாகும். மின் ஒழுக்கின் காரணமாகவே இந்த தீவிபத்து ஏற்பட்டுள்ளது என்று அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)

## மாற்றுவலுவுள்ளோர் அமைப்பின் பிரதேச குழுக்கள் தற்போது தெரிவு

### முதற்கட்டமாக கண்டாவளைப் பிரிவில்



கிளிநொச்சி, ஜன.29

கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் அமைப்பின் பிரதேச குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் அமைப்பின் செயற்பாடுகளை இலகுபடுத்தும் நோக்குடனேயே பிரதேச குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

முதல் கட்டமாக கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் பிரமந்தனாறு, கல்லாறு, மயில்வாகனபுரம், நாதன் குடியிருப்பு, உழவனூர் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய மாற்றுவலுவுள்ளோர் பிராந்திய குழு அமைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு அங்கு மாற்று வலுவுள்ளோருக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

இந்தக் குழுக்கள் அமைக்கும் நிகழ்வில் கிராம அலுவலர் சாந்தி கிருஸ்ணா, கிளிநொச்சி மாற்றுவலுவுள்ளோர் சங்கத்தின் தலைவர் ஆறுமுகம் சிவநேசன், பிரதேச இணைப்பாளர்களான வே.கௌரிதாசன், எஸ்.வன்னியசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-70)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.29

கொட்டடி சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் நிலையத் தலைவர் நா.தனேந்திரன் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சனசமூக நிலையத்தில் இடம் பெறும்.சனசமூக நிலைய உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிலையத்தின் தலைவர் கேட்டுள்ளார். (ச)

## வெள்ளத்தால் பத்தாயிரம் பேர் பாதிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழை காரணமாக 2834 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிரான் - தொப்பிகல பிரதானவீதி வெள்ளத்தில் மூழ்கியதால் பூலாக்காடு, முறுத்தானை, கோராவளி, வடமுனை, ஊத்துச்சேனை திகிலிவட்டை, குடும்பிமலை ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 2 ஆயிரம் 155 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 564 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (ச)

## 'செமட்ட செவன' வீடமைப்புத் திட்டம் பேசாலையில் ஆரம்பம்



மன்னார், ஜன.29

மன்னார், பேசாலை முருகன் கோவில் கிராமத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 'செமட்ட செவன' வீடமைப்பு நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இதற்கான அடிக்கல் நடும் விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பேசாலை முருகன் கோவில் கிராமத்தில் வைபவ ரீதியாக இடம்பெற்றது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மன்னார் மாவட்ட முகாமையாளர் ஆர்.சுவர்ணராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் அப்பாஸ் அப்துல் றிப்கான் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு வீடமைப்புக்கான அடிக்கல்லை நட்டு வைத்தார்.

தொடர்ந்து மன்னார் பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார், ஐக்கிய தேசியக் கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் ஏ.சமியு முஹம்மது பஸ்மி, பேசாலை முருகன் கோவில் பிரதான தவிசாளர் குப்புசாமி ஆறுமுகம் ஆகியோரும் அடிக்கல்லை நட்டு வைத்தனர். (ஐ)

## மணவாளக் கோலம்

வடமராட்சி, ஜன.29

கரணவாய் ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி ஆலய வருடாந்த மணவாளக் கோலத் திருவிழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 4 மணிக்கு 108 சங்காபிசேக நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ஐ-21)

# நிதி மோசடி விசாரணைப் பிரிவு குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க முடியும்!

## லக்ஸ்மன் கிரியெல்ல கூறுகிறார்



கொழும்பு, ஜன.29

நிதி மோசடி விசாரணைப் பிரிவு சட்ட ரீதியானதா என்பது தொடர்பாக நாடாளுமன்றில் விவாதம் செய்ய முடியும் என்று அவைத் தலைவர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பெரிய நிதி மோசடிகள், துஷ்பிரயோகங்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் நிதி மோசடி விசாரணைப் பிரிவை இந்த அரசாங்கம் நிறுவியது.

இந்த நிதி மோசடி விசாரணைப் பிரிவு சட்ட ரீதியானதா இல்லையா என்பது தொடர்பாக நாடாளுமன்றில் விவாதம் செய்ய ஏற்பாடு செய்து கொடுக்க முடியும்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவு சட்டவிரோதமானது என ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் ஒருவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டிருந்தார் எனவும் இது தொடர்பாக நாடாளுமன்றில் தெளிவுபடுத்துமாறும் கூட்டு எதிர்க் கட்சியின் தலைவர் தினேஸ் குணவர்த்தன அவைத் தலைவரிடம் கோரியிருந்தார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அவைத் தலைவர், நிதி மோசடி விசாரணைப் பிரிவின் சட்ட ரீதியான தன்மை தொடர்பாக நாடாளுமன்றில் விவாதம் நடத்த முடியும் எனக் குறிப்பிட்டார்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவு சட்டவிரோதமானது என விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அண்மையில் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 600 மில்லியன் ரூபா வழங்கினார் என்றும் லக்ஸ்மன் கிரியெல்ல நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாலபே தனியார் பல்கலைக் கழகத்தை ஆரம்பிப்பதற்காக கடன் அடிப்படையில் மஹிந்த 600 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளார்.

இவ்வாறு கடந்த அரசாங்கத்தின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியையும் அதன் மாணவர்களையும் பாதுகாக்கும் பொறுப்பு இந்த அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.


நாட்டின் ஏனைய பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களுக்கு நிலவிவரும் வெற்றிடங்களைநிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தனியார்கல்வித்துறையைக் தரமுயர்த்தி மேம்படுத்துவது ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாக அமைந்துள்ளது.

மாலபே தனியார் மருத்துவ கல்லூரியைக் கொண்டு நடத்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

# மஹிந்த காலத்தில் போன்று இளைஞர்கள் வீதியில் சுட்டுக் கொல்லப்படவில்லை!

## பிரதி அமைச்சர் அஜித் பெரேரா



கொழும்பு, ஜன.29

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தைப் போன்று இளைஞர்கள் வீதியில் சுட்டுக் கொல்லப்படவில்லை என மின்வலு எரிசக்தி பிரதி அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மஹிந்த ஆட்சிக் காலத்தைப் போன்று தற்போது இளைஞர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டுவீதியில் அவர்களது சடலங் கள் போடப்படவில்லை.

மஹிந்த காலத்தைப் போன்று அரசியல்வாதிகள் நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையீடு செய்வது கிடையாது.

பொதுச் சட்டங்களை மீறும், நீதிமன்ற உத்தரவை மீறும் அனைவருக்கு எதிராகவும் தற்போது நாட்டில் சட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

நீதிமன்றால் ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் அதனை எதிர்நோக்கித் தாம் குற்றமற்றவர் என்பதை நிரூபிப்பதே பொருத்தமானதாக அமையும்.

மாறாக உத்தரவுக்கு எதிராகச் சவால் விடுப்பது பொருத்தமானதாக அமையாது.

அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் லஹிரு வீரசேகர நீதிமன்ற உத்தரவை மீறிச் செயற்பட்டமையால் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

# தாஜுதீன் கொலை விசாரணைக்கு அழைக்கப்படவுள்ளார் ஷிராந்தி!



தாஜுதீனின் கொலை தொடர்பான விசாரணைக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ அழைக்கப்படவுள் ளார் என்று தெரிவிக்கப்படு கிறது.

றகர் வீரர் வசீம் தாஜூன் கொலை இடம்பெற்ற தினத்தன்று இரவு, முன்னாள் ஜனாதிபதியின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷவின் செயற்பாடு தொடர்பாகச் சந்தேகம் எழுந்துள்ளது.

இந்தக் கொலை தொடர்பில் விசாரணை மேற்கொள்கின்ற குற்றப் புலனாய்வு பொலிஸாருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்று அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரத்ன ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணை குழுவால் அலரிமாளிகை தொலைப்பேசி இலக்கங்கள் தொடர்பான அறிக்கை பல மாதங்களாக விசாரணைக்காகக் கோரப்பட்டுள்ளன.

இருந்த போதிலும், முன்னாள் ஜனாதிபதி மற்றும் தற்போதைய ஜனாதிபதியின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்த பிரதி பொலிஸ் மா அதிபர் விக்கிரமசிங்கவின் தலையீட்டால் அந்த தொலைபேசி இலக்கம் கிடைப்பதற்குத் தாமதமாகியுள்ளது என்றும் அமைச்சர் ராஜித குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், கொலை இடம்பெற்ற தினத்தன்று விடியும் வரை ஷிராந்தி ராஜபக்ஷ மேற்கொண்ட தொலைபேசி தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவதானத்தைச் செலுத்தியுள்ளனர்.

இதுதொடர்பில்தெளிவுபடுத்தலுக்காக ஷிராந்தி ராஜபக்ஷ விசாரணை பிரிவுக்கு அழைக்கப்படவுள்ளார் என அமைச்சர் ராஜித குறிப்பிட்டுள்ளார்.

# அரசியல்வாதிகளுக்கும் நற்சான்றுப் பத்திரம் வழங்கப்பட வேண்டும் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன.29

அரசியல்வாதிகளுக்கு நற்சான்றுப் பத்திரம் வழங்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வு ஒன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-



உற்பத்தி மற்றும் சேவைகளுக்குத் தர நிர்ணய சான்றிதழ்கள் வழங்கப்படுவதைப் போன்றே அரசியல்வாதிகளுக்கும் ஆண்டு தோறும் சான்றிதழ்கள் வழங்கும் நடைமுறை அறிமுகம் செய்யப்பட வேண்டும்.

நாட்டு மக்கள் பொருள்கள் சேவைகளின் தரத்தைப் போன்றே அரசியல்வாதிகளின் தரம் பற்றியும் எதிர்பார்க்கின்றனர்.


அவ்வாறு அரசியல்வாதிகளுக்குத் தரநிர்ணய நற்சான்று வழங்கினால் அதனை நிர்ணயம் செய்யும் பொறுப்பு உழைக்கும் மக்களிடம் வழங்கப்பட வேண்டும்.

நாட்டின் அனைத்து விடயங்களினதும் தரத்தை நிர்ணயிப்பதற்கு அரசியல்வாதிகள் முக்கிய ஏதுவாகின்றனர்.

அரசியல்வாதிகளின் தரம் குறைவாகக் காணப்பட்டால் ஏனைய விடயங்களில் தரத்தை எதிர்பார்க்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சர்வதேசத்தின் பாராட்டைப் பெற்றுள்ளது நல்லாட்சி அரசாங்கத்தின் அரசியல் ஸ்திரம்

## அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவிப்பு



கொழும்பு, ஜன.29

நல்லாட்சி அரசால் நாட்டில் நிலைநிறுத்தப் பட்டுள்ள அரசியல் ஸ்திரத்தன்மை சர்வதேசத்தின் பாராட்டைப் பெற்றுள்ளது என்று பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏனைய கட்சிகளுடன் இணைந்து நாட்டை நிர்வகிக்கும் முதல் சந்தர்ப்பம் இது வல்ல. குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்த முடியாது. இவ்வாறான தோல்வி கண்ட முயற்சிகளும் இடம்பெறுகின்றன?.

பாதயாத்திரைகளையும், அரசியல் கூட்டங்களையும் நடத்துவதன் மூலம் சுதந்திர கட்சி ஆதரவாளர்களை ஏமாற்ற முடியாது .

அரசாங்கத்துக்குச் சவால் விடவோ, அரசாங்கத்தைக் கவிழ்க்கவோ எந்தச் சக்தியாலும் முடியாது.

நாட்டின் பிரதான இரண்டு கட்சிகளும் இணைந்து நல்லாட்சி அரசை ஏற்படுத்தி நாட்டை நிர்வகித்து வருகின்றன.

மக்களுக்குச் சார்பாகத் தீர்வுகளை எடுக்க ஒரு போதும் பின்நிற்கப் போவதில்லை. கடந்த காலங்களிலும் ஜனாதிபதி இவ்வாறான தீர்மானங்களை மேற்கொண்டார் என்றும் தெரிவித்துள்ளார்.

# கால்வாயில் இரு சடலங்கள் மீட்பு!

கொழும்பு, ஜன.29

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அத்திடியப் பிரதேச கால்வாய் ஒன்றின், இருவேறு பகுதிகளிலிருந்து இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த சடலங்கள் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்த இரு சடலங்களும், இதுவரை அடையாளம் காணப்படவில்லையெனவும் கூறப்பட்டுள்ளது. மேலும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

வொன்.வேணு கிருஷ்ணா

# ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?

76



### சுரங்கப் பாதை வழி 'நெரிசல்' அளவை எட்டிவிட்டது


வொஷிங்டன் டிசியில் நடந்த ஆர்ப்பாட்டம், மாநகர போக்குவரத்தை வெள்ளம்போல் நிறைத்தது, மற்றும் நகரின் போக்குவரத்து பொறுப்புக்கழகம் அதன் சுரங்கப் பாதை வழி நெரிசல் அளவை எட்டிவிட்டதாகக் குறிப்பிட்டது, இது பதவி ஏற்பு நாளில் வந்ததை விடவும் இரு மடங்கு இருந்தாகவும், பயணிகள் போக்குவரத்து வீதம் சாதாரண வேலை நாளை விடவும் குறைவாக இருந்தது என்றும் குறிப்பிட்டது.

### "பெண்கள் அணிவகுப்பு"

Source:http://www.ibtimes.com

Topless Woman Protests Donald Trump At Bernie Sanders Rally In Arizona

BY ABIGAIL ABRAMS @ ABBYABRAMS ON 03/21/16 AT 8:51 AM



A supporter without a top holds a sign during a campaign rally by Democratic presidential candidate Bernie Sanders in Phoenix, Arizona March 19. Photo: Reuters/Mario Anzuoni




வொஷிங்டன் டிசியின் ஆர்ப்பாட்டத்தின் ஏற்பாட்டாளர்கள், பெண்கள் அணிவகுப்பு என்று அவர்கள் அழைத்த ஆர்ப்பாட்டம், ட்ரம்ப் ஜனாதிபதித் தன்மையின் ஆபத்து முற்றிலும் இனம் மற்றும் பால் அடிப்படையிலானது என்று காட்டினர். மேடையில் பேசிய பேச்சாளர்களுள் பல ஜன நாயகக் கட்சி காங்கிரஸ் பெண் உறுப்பினர்கள், அதே போல பெண்ணியவாதி Gloria Stei - nem மற்றும் பல நடிகைகளும் அடங்குவர். ஸ்ரைனெம், மிஷேலையும் பாராக் ஒபாமாவையும் எமது மாபெருந் தலைவர்கள் எனப் புகழ்ந்தார்.

ஊர்வல ஏற்பாட்டாளர்களின் அரசியலுக்கு நேர்மாறாக, ஆர்ப்பாட்டக்காரர்கள் பாசிச மற்றும் போர் முனைப்புள்ள ட்ரம்ப் நிர்வாகத்திற்கும் அவர் அதிகாரத்திற்கு வர வழிவகுத்த முழு அரசியல் அமைப்புக்கும் ஆழமான மற்றும் உண்மையான வெறுப்பைக் காட்டினர்.

கனேடிய-அமெரிக்கர் மெட்லைன் மற்றும் காங்கோலிய அமெரிக்கர் Zekeh ஊடகவியலாளரிடம் ட்ரம்ப் தேர்தல் பற்றிப் பேசும்பொழுது உணர்ச்சி வயப்பட்டவராக இருந்தனர்.


Zekeh மேலும் குறிப்பிட்டார், நாம் பூகோளக் கிராமத்தில் வாழுகிறோம், ஒரு பெரிய சிலந்திவலை போன்ற ஒன்றால் இணைக்கப் பட்டிருக்கிறோம். தேசபக்தி வாதம் மற்றும் தேசியவாதம் ஒருத்தருக்கொருத் தர் எதிராக எங்களைத் திருப்பிவிடாது.

### ஆர்ப்பாட்டக்காரர்களில் பெரும் பகுதியினர், உயர்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள்


வொஷிங்டனில் பங்கேற்ற ஆர்ப்பாட்டக்காரர்களில் பெரும் பகுதியினர், உயர்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் உள்பட இளைஞர்கள் ஆவர். வடகரோலினா, சாப்பல் ஹில்லிலிருந்து வரும் ரியான் ஊடகவியலாளரிடம் கூறினார். ட்ரம்ப் ஜனாதிபதி பற்றி நான் அச்சம் கொண்டுள்ளேன். சோசலிசம் மட்டுந்தான் தீர்வுதர இயலக் கூடிய ஒரே பொருளாதார அமைப்பு.

சமூக சமத்துவமின்மையில் பெரும் வளர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையில் ஜனநாயகக் கட்சி அது ஆற்றும் அதன் பார்த்திரத்துக்காக ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற பல இளைஞர்கள் ஜன நாயகக் கட்சிக்குத் தமது குரோதத்தை வெளிப்படுத்தினர். அமெரிக்க பல்கலைக் கழகத்திலிருந்து வந்த பல இளம் மாணவர்கள் யுத்தம் மீதான அவர்களது வெறுப்பையும், எதிர்ப்பானது பரந்த எதிர்ப்பாக இட்டுச்செல் லும் என்ற தங்களது நம்பிக்கையையும் பற்றிப் பேசினர். ஜன நாயகக் கட்சியினர் பணக்காரர்களுக்கானவர்கள் என்றார் Quincy.

Rachel மேலும் குறிப்பிட்டார், "மோசமான தவறு கிளிண்டனை நிற்க வைத்தது தான். அவர்கள் பொதுக் கல்விக்குப் பணம் இல்லை என்றனர், ஆனால், அரசாங்கம் யுத்தத்திற்காக பைத்தியக்காரத்தனமாய் அதிக தொகையை செலவழிக்கின்றது!"



Madeleine and Zekeh from Baltimore, Maryland



Ryan from Chapel Hill, North Carolina

அத்தகைய உணர்வுகள் காங்கிரசில் உள்ள ஜனநாயகக் கட்சித் தலைவர்களது நடத்தைக்கு முற்றிலும் வேறானதாக இருக்கிறது. அவர்கள் அமெரிக்க




பகாசுரக் கம்பெனிகளின் நலன்களை முன்னுக்குக் கொண்டுவர, ட்ரம்ப் பொருளாதார தேசியவாதத்தைத் தழுவுதற்காக அவர் மீது இரக்கம் கொண்டனர், அதேவேளை ரஷ்யாவுக்கு எதிராக மிகவும் மூர்க்கமான நிலைப்பாட்டை அவர் எடுக்க வேண்டும் எனக் கோருகின்றனர்.



### குழுக்குள் ஆடும் விளையாட்டு ஒரே குழுவில் உள்ளவர்கள்

ஜனநாயகக் கட்சி செனெட் சிறுபான்மைக் குழுத்தலைவர் Charles Schumer ட்ரம்ப் பதவியேற்பை புகழ்ந்தார். இன்று நாம் ஜனநாயகத்தின் ஒரே அடிப்படை இயல்பான, அமைதியான வழியில் அதிகாரம் மாறுதலைக் கொண்டாடுகிறோம். ஜனாதிபதி ஒபாமா நவம்பர் தேர்தலை குழுக்குள் ஆடும் விளையாட்டு என்றும் ஜனநாயகக் கட்சிக் காரர்களும் குடியரசுக் கட்சிக்காரர்களும் ஒரே குழுவில் உள்ளவர்கள் எனவும் அறிவித்தார்.

உலகரீதியான பெரும் ஆர்ப் பாட்டங்கள் ட்ரம்ப் ஜனாதிபதி பதவிக்குத் தற்போதிருக்கும் பரந்த மக்கள் எதிர்ப்பின் ஆரம்பத்தைத் தான் சுட்டிக் காட்டுகிறது. வெளியில் இராணுவ வாதத்தை பின்பற்றுவதற்கும் உள் நாட்டில் ஒடுக்குமுறையை பின்பற்றுவதற்கும் தீர்மானமாக இருக்கும் இந்த நிர்வாகம், யுத்தம், சமூகசமத்துவமின்மை மற்றும் அவற்றை உருவாக்கும் முதலாளித்துவ அமைப்பு முறைக்கு எதிரான ஒரு பரந்த இயக்கத்தை எதிர்கொள்ளும்.


As clashes between protesters and supporters at Donald Trump's rally again made headlines over the weekend, Bernie Sanders' Saturday event saw its own moment of protest. But instead of a fight, the protest came in the form of a topless woman.

Partway through Sanders' speech in Phoenix, a woman climbed onto a man's shoulders and removed her shirt, the



Washington Post reported Sunday. Anna Mi, from Los Angeles, sported black painted messages on her bare back and front.

Her back read "STOP FASCISM" and and her front said "HATE SPEECH IS NOT FREE SPEECH" — messages directed at the Republican front-runner, not Sanders. While she wore no shirt as she cheered on the Vermont senator, Mi did wear two strategically placed "Free the Nipple" stickers.







(கேள்வி தொடரும்...)

காலைக்கதிர்
Kalaikkathir



# பண்பாட்டுக் கோலங்களைப் பறைசாற்றிய உழவர் பெருவிழா

















வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை உழவர் விழா கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் எழுச்சிமிகு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. அங்கு இடம்பெற்ற நிகழ்வுகளில் சில ..... (ஐ)





### திருத்தந்தையின் டுவிட்டர் செய்திகள்


@pontifex என்ற முகவரியுடன் ஒன்பது மொழிகளில் வெளிவரும் திருத்தந்தையின் டுவிட்டர் செய்திகளைப் பின்பற்றுவோரின் தொகை 2017இல் 3 கோடிக்கு அதிகமாகியுள்ளது. டுவிட்டர் செய்திகளைப் பின்பற்றுவோரில் இஸ்பானியர் – ஆங்கிலேயர் ஆகியோர் முன்னணியில் உள்ளனர்.

காலைக்கதிர்
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

### வன்முறையற்ற அகிம்சை வழி

வன்முறையற்ற அகிம்சை வழி குறித்து இயேசு சொல்லித்தந்தவற்றை முழுமையாக ஏற்று பின்பற்றுவது அவரது உண்மையான சீடர்களின் இலக்கணம் என திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தமது டுவிட்டர் செய்தியில் கருத்து வெளியிட்டுள்ளார்.

# தமிழ்நேசன் அடிகளாருக்கு யாழ் இலக்கிய வட்டம் கௌரவம்



யாழ் இலக்கிய வட்டம் 22 ஜனவரி 2017 அன்று மன்னனர் மறை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் நேசன் அடிகளார் மற்றும் ஓய்வுநிலை அதிபர் வே. ஞானகாந்தன் ஆகியோரின் முறையே தமிழ் மற்றும் கல்விப் பணிகளை பாராட்டி யாழ். நல்லூரில் கௌரவித்துள்ளது.

யாழ் இலக்கிய வட்டத்தின் தலைவரும் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தருமான பேராசிரியர் என். சண்முகலிங்கன் இவ் விழாவிற்கு தலைமை தாங்கினார்.

இந்நிகழ்வின் ஆசியுரையை வழங்கிய ஊடக விரிவுரையாளர் ரூபன் மரியாம்பிள்ளை ''அடிகளார் வாழும் போதே கௌரவிப்பது மிகவும் சிறப் பானது. பலருக்கு இந்த கௌரவிப்புக்களை வழங்கிவரும் யாழ் இலக்கிய வட்டத்தின் செயலாளர் நயினை கிருபாநந்தா சிறப்பாகப் பாராட்டப்பட வேண்டியவர். மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்நேசன் அடிகளார் சிறிய குருமடத்தில் கல்விகற்ற காலம் முதலே எழுத்துப்பணி மற்றும் தமிழ்ப்பணியில் ஆர்வமாக உழைத்தவர். குருப்பட்டம் பெற்ற பின்னர் தன் பயணப்பாதையில் வேகமாக வளர்ந்தவர். அவர் கௌரவம் பெறுவது சிறப்பானதும் தேவையானதுமாகும். அதனால் இவர் இன்னும் அதிக பணியை ஆற்ற உந்தப்படுவார்'' - என்றார்

இந்நிகழ்வின் வாழ்த்துரைகளை யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கே.பாலசுந்தரம்பிள்ளை, யாழ் பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் எம். வேதநாதன், பலாலி ஆசிரிய கலாசாலை முன்னாள் அதிபரும் கவிஞருமான சோ. பத்மநாதன், பலாலி ஆசிரிய கலாசாலை முன்னாள் விரிவுரையாளரும் பண்டிதருமான கலாநிதி எஸ். திருநாவுக்கரசு ஆகியோர் வழங்கினர். இந்த கௌரவிப்பு விழாவை யாழ் இலக்கிய வட்டத்தின் செயலாளர் நயினை கிருபாநந்தா சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

## கரித்தாஸ் ஆஸ்திரேலிய பிரதிநிதிகள் யாழ் நகரில்



கரித்தாஸ் ஆவுஸ்ரேலிய பிறாங் எல்விவுஸ், ஆவுஸ்திரேலிய - ஆசிய பிராந்திய தலைவர் மைக்கல் பெயறா, கரித்தாஸ் ஆவுஸ்ரேலியாவுக்கான தெற்காசிய பிரதிநிதி ஆகியோருடன் கரித்தாஸ் சிறிலங்கா செடெக் பிரதிநிதிகள் தெய்வேந்திரராஜா, திட்டமுகாமையாளர் வாரீஸ், திட்டஆலோசகர் ஆகியோர் ஜனவரி 19 - 20ஆம் திகதிகளில் கியூடெக் கரித்தாஸ் இயக்குநர் இயூஜின் பிரான்சிஸ் அடிகளாரை சந்தித்து வேலைத்திட்டங்கள் பற்றிக் கலந்துரையாடினர். இவர்கள் யாழ்.ஆயரையும் சந்தித்து யாழ்.குடாநாட்டின் தற்போதைய நிலைமைகளை அறிந்து கொண்டனர்.

செய்தியாளர்: இ.நிறோச்ன் கரித்தாஸ்

## இலங்கையில் போர்க்காலக் குற்றங்களுக்கு சாட்சி சொல்பவர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர்

### திருகோணமலை ஆயர் மேதகு கலாநிதி நோயல் இம்மானுவேல்

இலங்கையில் நல்லிணக்க வழிமுறைகள் குறித்த ஆலோசனைக்கு அரசால் நியமிக்கப்பட்ட குழு அண்மையில் அமைச்சர் மங்கள சமவீரவிடம் சமர்ப்பித்த அறிக்கையில் மனித உரிமை மீறல் வழக்குகளை விசாரிப்பதற்கு குறைந்தது ஒரு வெளிநாட்டு நீதிபதியையாவது நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளது. இது குறித்து கருத்து தெரிவித்த திருகோணமலை மறை மாவட்ட ஆயர் மேதகு கலாநிதி நோயல் இம்மானுவேல் ஆண்டகை ''வெளிநாட்டு நீதிபதிகளின் இருப்பு தேவையானது. இலங்கையில் போர்க்காலக் குற்றங்களுக்குச் சாட்சி சொல் பவர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர்'' - என்றார்.

விசாரணையின் போது இலங்கை நீதிபதிகள் இருந்தால் உள்ளூர் அதிகாரிகள் அவர்களை வசப்படுத்தி தங்களின் விருப்பு வெறுப்புக்கு ஏற்றால் போல் அறிக்கைகளை எழுத வைப்பார்கள் எனவும் ஆயர் மேலும் தெரிவித்தார்.

## அமெரிக்க புதிய அரசுத்தலைவருக்கு திருத்தந்தை வாழ்த்து

20 ஜனவரி 2017 அன்று ஐக்கிய அமெரிக்காவின் 45 ஆவது அரசுத்தலைவராகப் பொறுப்பேற்றுள்ள டொனால்ட் டிரம்ப்புக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் ''அமெரிக்க ஐக்கிய நாட்டில் புதிய அரசுத் தலைவராகப் பதவியேற்றுள்ள டொனால்ட் டிரம்ப் அவர்களுக்கு இறைவன் ஞானத்தையும் வல்லமையையும் வழங்கவேண்டுமென செபிக்கிறோம்'' - எனத் தெரிவித்துள்ளார்.

திருத்தந்தை மேலும் அவ் வாழ்த்துச் செய்தியில் ''டிரம்ப் எடுக்கும் தீர்மானங்கள் அமெரிக்க மக்களின் வரலாற்றை வடிவமைத்துள்ள வழமையான ஆன்மீக மற்றும் நன்னெறி விழுமியங்களால் வழிநடத்தப்படும் என நம்புகிறோம். மனித சமுதாயம் கடும் மனிதாபிமான நெருக்கடிகளால் சூழ்ந்துள்ள இக்காலத்திற்கு தொலைநோக்குப் பார்வையும் ஒன்றிணைந்த அரசியல் நடவடிக்கைகளும் தேவைப்படுகின்றன. ஏழைகள் மற்றும் நம் கதவுக்கு முன் நிற்கும் இலாசரைப் போன்ற தேவையில் இருப்போருக்கு அரசுத் தலைவர் டிரம்ப் அவர்கள் தலைமையில் அமெரிக்கா தொடர்ந்து செயல்படும் என என நம்புகிறோம்'' - எனத் தெரிவித்துள்ளார்.

### இத்தாலியில் கடும் பனிப்பொழிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு திருத்தந்தை செபம்

ஜனவரி 18 முதல் 25 வரை நடைபெற்ற கிறிஸ்தவ ஒன்றிப்பு செப வாரத்தையொட்டி கிறிஸ்தவ ஒன்றிப்பு என்பது மனித முயற்சிகளின் பலனாகக் கிடைப்பது அல்ல, மாறாக அது மேலிருந்து வரும் கொடையாகும் என திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் உரோம் நகருக்கு வடகிழக்கே ஏறக்குறைய 135 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள மலையடிவாரத்தில் அமைந்துள்ள பயணியர் விடுதி மீது ஏற்பட்ட கடும் பனிச்சரிவினால் பாதிக்கப்பட்ட மற்றும் பலியான மக்களுக்காக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் செபித்து வருகிறார். அப்பகுதியின்நிலை குறித்து தொடர்ந்து தகவல்களை தருமாறு திருத்தந்தை கேட்டுக் கொண்டுள்ளார் எனவும் இத்தாலிய ஆயர் பேரவையின் பொதுச் செயலர் பேராயர் வத்திக்கான் வானொலியில் தெரிவித்துள்ளார்.

## ஏறுதழுவுதல் தமிழரின் அடையாளம் மதுரைப் பேராயர் சுட்டிக்காட்டு

தமிழர்களின் கலாச்சார அடையாளமான ஏறுதழுவுதல் விளையாட்டு காப்பாற்றப்பட வேண்டும். அதைத் தடுக்க நினைப்பது தமிழர்களின் கலாசார உரிமையைப் பறிப்பதற்குச் சமம் என மதுரை பேராயர் ஆன்டனி பாப்புசாமி ஆண்டகை கூறியுள்ளார்.

தமிழகமெங்கும் இளையோர் மேற்கொண்ட அறப் போராட்டம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்நாடு ஆயர்களின் தலைவராகிய பேராயர் பாப்புசாமி அவர்கள் இந்தப் போட்டிக்கு விதிக்கப்பட்ட தடை தமிழர்களின் உரிமைகளைப் பறிக்கும் ஒரு முயற்சி என்று கூறினார்.

இந்திய கத்தோலிக்க இளையோர் இயக்கத்தின் மாநாட்டில் கலந்துகொண்ட இளையோரின் ஊர்வலம் ஒன்று பெங்களூர் பேராயர் பெர்னார்டு மொராஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்த 10 ஆயிரத்திற்கும் அதிகமான இளையோர் பங்கேற்றனர்.

பன்முக கலாசாரங்களையும் மதங்களையும் கொண்ட இந்தியாவில் அமைதியையும் ஒருங்கிணைப்பையும் உருவாக்க இளையோரின் பங்கு என்ன என்பது குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்பட்டது.

## உலகின் அனைத்து நாடுகளிலும் பாத்திமா அன்னையின் திரு உருவம்

2017ஆம் ஆண்டு மே மாதம் புனித பாத்திமா அன்னையின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட இருப்பதையொட்டி உலகின் அனைத்து நாடுகளுக்கும் அன்னையின் திருஉருவம் எடுத்துச் செல்லப்படவுள்ளது. இதற்கென 11 ஜனவரி 2017 அன்று திருத் தந்தை பிரான்சிஸ் அவர்கள் பாத்திமா அன்னையின் 6 திருஉருவங்களை ஆசீர்வதித்து உலகெங்கும் அனுப்பி வைத்தார். அன்னையின் திருஉருவம் ஆசியாவில் மேற்கொள்ளும் பயணத்தின் முதல் கட்டமாக ஹொங்கொங் புனித தெரேசா ஆலயத்தில் வைக்கப்பட்டது. ஜனவரி இறுதியில் பாத்திமா அன்னையின் திரு உருவம் பிலிப்பீன்ஸ் நாட்டிற்கு எடுத்துச் செல்லப்படும். 1917ஆம் ஆண்டு, போர்த்துக்கல் நாட்டின் மூன்று இடையர்களுக்கு மரியன்னை காட்சியளித்ததன் நூறாம் ஆண்டு சிறப்பிக்கப்படுவதையடுத்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ் வாண்டு மே மாதம் பாத்திமா திருத்தலத்திற்குச் செல்ல இருக்கிறார்.

### உண்மையின் எண்ணங்கள்

## வாழும்போதே வாழ்த்துவோம்

சாதனை படைத்தோர்க்கான கௌரவிப்பு யாழ் இலக்கிய வட்டத்தின் பெயரில் அதன் செயலாளர் நயினை கிருபாநந்தா அவர்களின் தனிப்பட் முயற்சியில் அவரின் இல்லத்தில் அவரின் சொந்த செலவில் பல வருடங்களாக இலைமறை காயாக இடம்பெற்று வருகிறது. வாழும் போதே வாழ்த்துவோம் என்ற நோக்கில் நயினை கிருபாநந்தா அவர்கள் ஆற்றும் இப்பணியை பாராட்டி வரவேற்கிறோம்.

யாழ் இலக்கிய வட்டத்தின் தலைவரும் யாழ் பல்கலைக் கழகத்தின் முன்னாள் உப வேந்தருமான பேராசிரியர் என். சண்முகலிங்கன் அவர்களின் தலைமையில் நடத்தப்படும் இவ்விழாக்களில் யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்கள், பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விமான்கள், செய்தியாளர்கள், ஆவலர்கள் எனப் பலரும் தம் பொன்னான நேரத்தை செலவு செய்து கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. நயினை கிருபாநந்தா அவர்களின் இந்த தனிப்பட்ட முயற்சியில் அவரின் குடும்பத்தினர் அனைவரும் இணைந்து தம் குடும்ப விழாவாகவே இவற்றை நடத்துவது சிறப்பம்சமாகும். நயினை கிருபாநந்தா அவர்களின் குடும்பத்தினரை காலைக்கதிர் கிறீஸ்தவ செய்தி இதழ் வாழ்க வளமுடன் என வாழ்த்துகிறது.

கத்தோலிக்க மதகுருவான தமிழ்நேசன் அடிகளாரை பாராட்டி கௌரவித்தமை சமயங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை உருவாக்கும் ஒரு செயற்பாடுமாகும்.





# குளிரிலிருந்து பாதுகாக்க யானைகளுக்கு ஆடைகள்!

குளிர்காலத்தில் பாதுகாப்பாகத் தூங்குவதற்காக, யானைகளுக்கு குளிரைத் தாங்கும் ஆடைகளைத் தயாரித்து அணிவித்துள்ள சம்பவம் இந்தியாவில் இடம் பெற்றுள்ளது.

இந்தியாவின் மதுரா நகரத்தில் அமைந்துள்ள வனஜீவராசிகளுக்கான அமைப்பான எஸ்.ஓ.எஸ். யானைகள் பாதுகாப்பு மையத்தில், குளிர்காலத்தில் யானைகளை இதமாக இருப்பதற்குத் தேவையான மிகப் பெரிய ஆடைகளை அருகிலுள்ள கிராமத்து பெண்கள் தயாரித்துக் கொடுத்துள்ளனர்.

முதல் கட்டமாக 20 யானைகளுக்குத் தேவையான குளிர் தாங்கும் ஆடைகளைத் தயாரிப்பதற்கு ஒரு மாதத்துக்கு மேற்பட்ட காலம் செலவாகியுள்ளது.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள பாதுகாப்பு மைய நிறுவுநர் கார்த்திக் சத்தியநாராயணன்;

''யானைகளுக்குத் தேவையான பாதுகாப்பை நாம் உருவாக்கியுள்ளோம். அதுபோல குளிரைத் தாங்கும் ஆடைகளையும் வழங்கி அவற்றின் நலனில் புது வழிகளைப் பின்பற்றத் தொடங்கியுள்ளோம்'' என்றார்.

மேலும் தற்போது 20 யானைகளுக்கு மட்டுமே ஆடைகள் அணி விக்கப்பட்டுள்ளதோடு, எதிர்வரும் குளிர்காலத்துக்கு முதல் சுமார் 50 யானைகளுக்குத் தேவையான ஆடைகளைத் தயாரிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாம்புகளை விட ஆபத்தானவை குதிரைகளே!


பாம்பு கடித்து இறப்பவர்களை விட, குதிரை தாக்கிக் கொல்லப்படுபவர்களே அதிகம் என ஆஸ்திரேலியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

ஆஸ்திரேலியாவின் மெல்போன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் ரொனெல்லே வெல்டன், தொடர்ச்சியாக 13 ஆண்டுகள் வைத்தியசாலையில் பதிவான உயிரிழப்புச் சம்பவங்களை ஆராய்ந்து இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

அந்த ஆய்வறிக்கையின் பிரகாரம் 13 ஆண்டுகளில் குதிரைகளால் 74 பேர் உயிரிழந்துள்ளனர். விஷப் பூச்சிக் கடிக்குள்ளாகி 27 பேரும், பாம்புகளால் 27 பேரும் இறந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


மேலும் ஆஸ்திரேலியாவில் விஷப் பூச்சிகளாலும் பாம்புகளாலும் அதிகமானோர் உயிரிழக்கிறார்கள் என்று கூறப்பட்ட நிலையில் இந்த ஆய்வு முடிவுகள் அதிர்ச்சி தருகின்றவையாக அமைந்துள்ளன என ரொனெல்லே வெல்டன் குறிப்பிட்டுள்ளார்.





# சீனாவில் நீர்த்தேக்கத்துக்குள் 600 வருட பழைமையான புத்தர்சிலை





சீனாவில், நீர்த்தேக்கம் ஒன்றைச் சீரமைக்கும் பணியின்போது 600 ஆண்டுகள் பழைமை வாய்ந்த புத்தர் சிலை ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் ஜியாங்ஸி மாகாணத்தில் உள்ள நீர்த் தேக்கம் ஒன்றைப் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக அந்த நீர்த் தேக்கத்துக்கு பெரிய மின் கதவு ஒன்றைப் பொருத்தவும் அதிகாரிகள் திட்ட மிட்டனர். இதற்காக நீர்த் தேக்கத்தின் அளவு படிப் படியாகக் குறைக்கப்பட்டது.

முதற்கட்டமாக அங்கிருந்த நீரில் 10 மீற்றர் அளவு குறைக்கப்பட்டது. நீரின் அளவு குறையக் குறையப் புத்தர் சிலையொன்றின் தலைப்பகுதி தெரியத் தொடங்கியது. இதைக் கண்ட ஒரு கிராமவாசி அது தொடர்பாக அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தினார்.

இதையடுத்து அந்த நீர்த் தேக்கத்தில் தொல்லியல் ஆய்வாளர்கள் ஆராய்ச்சி நடத்தினர். அதில், இந்தப் புத்தர் சிலையுடன், கோயில் ஒன்றின் தளப் பகுதியையும் அவர்கள் கண்டுபிடித்தனர்.

இந்தப் புத்தர் சிலை சுமார் 12 அடி உயரம் கொண்டது. நீர்த்தேக்கம் அமைந்துள்ள பாறையின் உட்புறமாக, பாறையைக் குடைந்து இந்தச் சிலை செதுக்கப்பட்டுள்ளது. அமர்ந்த நிலையில் உள்ள இந்த புத்தர் சிலை சீனாவை ஆண்ட 'மிங்' வம்சத்தவர்களது காலப்பகுதியில் - அதாவது, கி.பி. 1368-1644 காலப் பகுதியில் - வடிக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

அடியில் கோயில் தளம் ஒன்றும் காணப்படுவதால், அக்காலப் பகுதியில் இது ஒரு வழிபாட்டுத் தலமாக விளங்கியிருக்கலாம் என்றும் ஆய்வாளர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

சீனாவில், நீருக்கு அடியில் இருந்து தோன்றியுள்ள இந்தப் புத்தர் சிலை தமது நாட்டுக்கு ஒரு நல்ல அறிகுறியாக இருப்பதாக அந்த நாட்டு மக்கள் தெரிவிக்கின்றனர். தற்போது இந்த நீர்த் தேக்கத்துக்கு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை ஆரம்பித்துள்ளது.



# 11 ஆயிரம் வருடங்களுக்கு முன் பசுமையாக இருந்த சகாரா!

11 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சகாராப் பாலைவனம் 10 மடங்கு பசுமையாக இருந்தது என்று புதிய ஆய்வு தெரிவிக்கிறது.

உலகிலேயே மிகப்பெரிய பாலைவனமாக சகாரா திகழ்கிறது. இது ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ள பாலைவனம். மிக அதிகளவு வெப்பம் கொண்டது.

ஆனால், இந்தப் பாலைவனம் 5 ஆயிரம் முதல் 11 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தற்போது இருப்பதை விட 10 மடங்கு பசுமையாகவும், ஈரப்பதமாகவும் இருந்தது.


அந்தக்கால கட்டத்தில் அங்கு அதிகமான மழைப் பொழிவு இருந்தது. அந்தப் பகுதி முழுவதும் பசுமையாக இருந்ததால் மக்கள் அதிகளவில் குடியிருந்தனர். கால்நடைகளின் மேய்ச்சல் பகுதியாகவும் இருந்தது.

இதனால் கால்நடைகளும் பெருமளவில் வளர்க்கப்பட்டன. ஆனால் 8 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சகாரா பாலைவனம் வறட்சிப் பிடியில் சிக்கியது. ஆயிரம் ஆண்டுகள் படிப்படியாக வறண்டு வெப்பம் மிகுந்த பாலைவனமாக மாறியது.

இந்தத் தகவல் புதிய ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது. அமெரிக்காவின் அரிசோனாவில் உள்ள ஜெசிகா டயர்னி பல்கலைக் கழகத்தை சேர்ந்த நிபுணர்கள் கடந்த 25 ஆண்டுகளாகச் சகாரா பாலைவனப் பகுதியில் பெய்த மழை அளவு குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

அந்த ஆய்வில் இத்தகைய தகவல் தெரியவந்துள்ளது. பருவநிலை மாற்றம் காரணமாக சகாரா படிப்படியாகப் பாலைவனமாக மாறி இருக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. அகழ்வாராய்ச்சி மூலம் அங்கு மனிதர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் காணப்படுவதும் அறியப்பட்டுள்ளது.

*"இந்தப் பாலைவனம் 5 ஆயிரம் முதல் 11 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தற்போது இருப்பதை விட 10 மடங்கு பசுமையாகவும், ஈரப்பதமாகவும் இருந்தது."*



# சீரடி சாயி பாபாவின் மகா சமாதி நூற்றாண்டுவிழா!

எஸ்.டி.எஸ். உதயநாயகம்
*தலைவர்,சீரடி சாயி மத்திய நிலையம், கொழும்பு.*

சீரடி சாயி பாபாவின் அவதாரம், மானிட அவதாரங்களில் அதிர்வுள்ள சக்தி மிக்க முதன்மையானது. அதனால்தான் சீரடி சாயி அவதாரம் இன்றைய நவீன காலகட்டத்திலும் பேசப்படுகின்றது. அவரது மகா சமாதி 2018 இல் நூற்றாண்டை எட்டவுள்ளது.

அவர் வாழ்ந்த கால கட்டத்தில் வாழ்ந்த பக்தர்களைப் போன்று, அவரது மகா சமாதி நூற்றாண்டில் வாழும் பக்தர்களும் பாக்கியசாலிகள். அவரது மகா சமாதி தினம் சிறப்பு வாய்ந்தது. அவர் மகா சமாதியடைந்ததினம் 1918 ஆம் ஆண்டு விஜயதசமி தினமாகும். அதனை சீரடி சமஸ்தானம் வரலாற்று நினைவாகக் கொண்டாடுகின்றனர். அதனால் 2018 ஆம் ஆண்டு வரவிருக்கும் விஜய தசமி தினத்தை, சீரடி மகா சமாதி நூற்றாண்டு விழாவாகப் பிரமாண்டமாகக் கொண்டாடவுள்ளனர்.

இது சம்பந்தமாக ஒரு மாநாடு கடந்த டிசெம்பர் மாதம் 11ஆம், 12ஆம் திகதிகளில், சீரடி சமஸ்தானத்தில் இடம்பெற்றது. சீரடி சமஸ்தானத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து சீரடி ஆலயப் பிரதிநிதிகள் அங்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

கிட்டத்தட்ட 10 ஆயிரம் பிரதிநிதிகளுடன் மகராஸ்ரா மாநிலத்து நிதியமைச்சர், கல்வியமைச்சர், சுகாதார அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சீரடி சமஸ்தான நிதியத் தலைவர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். சீரடி ஆலயத்தின் பிரதான குரு ஸ்ரீ திகாம்பர சாஸ்திரிகள் சீரடி வேத பாராயணம் ஓத விழா ஆரம்பமாகியது.




*சீரடி சாயிசமஸ்தானம் டிரஸ்ட் தலைவர் வைத்தியர் சுரேஷ் ஹவாரேக்குப் பட்டபீதாம்பரம் போர்த்தி நினைவுச்சின்னத்தை சீரடி சாயி மத்திய நிலையம் ஸ்ரீ லங்கா தலைவர் எஸ்.டி.எஸ்.உதயநாயகம் வழங்குவதையும் அருகில் வைத்தியர் சந்திரபானு சத்பதி குருஜீயும் டிரஸ்ட் துணைத் தலைவர் ஸ்ரீ சந்திரசேகர் லட்சுமணராவ்வும் உள்ளனர்.*



*சென்னை மைலாப்பூர் அகில இந்திய சீரடிசாயி சாம்ராஜ் தலைவர் கே. தங்கராஜ், செல்வராஜ் அவர்களுக்கு சீரடி சாயிமத்தியநிலையம் இலங்கைத் தலைவர் எஸ்.டி.எஸ்.உதயநாயகம் நினைவுச்சின்னம் வழங்குவதையும் காணலாம்.*

இந்தியாவில் அனைத்து மா நிலங்களிலுமுள்ள ஆயிரத்து 500 சீரடி சாயி கோவில்களின் உள்நாட்டுப் பிரதிநிதிகளும், உலகிலுள்ள 48 சீரடி சாயி கோவில்களின் வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டார்கள். வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அனைவரும் மராட்டிய கலாசார முறைப்படி தலைப் பாகை கட்டப்பட்டுச் சீரடி சால்வை போர்த்தப்பட்டு வரவேற்கப்பட்டார்கள். வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அனைவரும் தங்களது கோவில்களின் சிறப்புக்களையும், வரவிருக்கும் மகா சமாதி நூற்றாண்டு பற்றிய, தங்களது கருத்துக்களையும் தெரியப்படுத்தினார்கள்.

சீரடி நிதியத் தலைவர் மருத்துவர் சுரேஷ் ஹவாரே தமதுரையில்:-

‘சீரடிக்குப் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் தினமும் வருகை தருகின்றனர். நூற்றாண்டு கொண்டாட்டங்களுக்கு லட்சக் கணக்கான பக்தர்கள் வரவிருப்பதால் பல ஒழுங்குகளைச் செய்யவுள்ளோம். இந்த வருடம் ஒக்ரோபர் மாதம் தொடக்கம் 2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம்வரை விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

‘‘ஓகஸ்ட் மாதம் சீரடியில் விமான நிலையம் திறக்கப்படவுள்ளது. தினமும் பக்தர்களுக்கு இலவச அன்ன தானம் வழங்கப்படவுள்ளது. தங்குமிட வசதிகளும் சிறப்பாகச் செய்யப்படவுள்ளன.

‘‘குறுகிய நேரத்தில் தரிசனங்கள் செய்வதற்கான ஒழுங்குமுறைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

‘‘அதற்கு ஏற்ற வகையில் மண்டபங்கள் பல அமைக்கப்படவுள்ளன. ஆராத்திகளில் கலந்துகொள்வதற்கான துரித இணையவழி முறைகளை அறிமுகப்படுத்தவுள்ளோம்.’’-என்றார்.

இதில் கலந்து கொண்ட பல மாநில பிரதிநிதிகள் மராத்திய மொழிகளிலும், ஹிந்தி மொழிகளிலும் தங்களது செயற்பாடுகளை வெளிப்படுத்தினர். சென்னை மைலாப்பூரிலுள்ள அகில இந்திய சாயி சாம்ராஜ் தலைவர் மு.தங்கராஜ் தமதுரையில், பத்து நல்ல திட்டங்கள் நடைமுறைப்படுத்தும்படி கேட்டுக் கொண்டார். தனியே ஒரு மாநிலத்துக்கு மட்டும் அபிவிருத்தித் திட்டங்களைச் செய்யாது, ஏனைய மாநிலங்களிலும் சீரடி சமஸ்தானம் உதவிகள் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

வெளிநாட்டிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள், தங்களது நாட்டில் சீரடி ஆலயங்களின் வளர்ச்சியையும், அற்புதங்களையும் எடுத்துக் கூறினார்கள். அதேசமயத்தில் சில வேண்டுகோள்களையும் உதவிகளையும் கேட்டுக் கொண்டார்கள்.

இலங்கையின் சார்பில் கலந்து கொண்ட சீரடி சாயி மத்திய நிலையம், ஸ்ரீலங்கா ஸ்தாபனத்தின் சார்பில் அதன் தலைவர் என்ற முறையில், அந்த மாநாட்டில் உரையாற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது.


அப்போது எனது உரையில், எமது ஸ்தாபனத்தின் வளர்ச்சியையும், கொழும்பு மாநகரில் மூவின மக்கள் மத்தியில் சாயி நிறுவனம் செய்துவரும் சேவைகளையும், உலகில் எங்குமில்லாது ஒரு நிகழ்வாக, சித்திரத் தேரில்



*சீரடி ஆலயத்தின் பிரதான குரு ஸ்ரீ திகாம்பரசாஸ்திரிகளுக்கு நினைவுச் சின்னம்.*

சீரடி சாயி பாபாவின் ஊர்வலத்தையும், பாபா வாழ்ந்த காலத்தில் இந்து, இஸ்லாமியர்களின் ஒற்றுமையைப் போன்று, அவரது இந்த நூற்றாண்டு கால கட்டத்தில் தமிழர், சிங்களவர் ஒற்றுமையாகச் சாயி மார்க்கத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதையும், அனைத்து மத நிகழ்வுகள் இடம்பெறுவதையும், பல மொழிகளில் வெளியாகியுள்ள சீரடி சாயிசத்சரிதம் புத்தகத்தை இலங்கையின் அரசமொழியான சிங்களத்தில் மொழி பெயர்த்து, சீரடி சந்நிதானத்தில் வெளியீடு செய்ததையும் ஞாபகப்படுத்தினேன்.

தமிழர்களுக்குச் சீரடி பாபாவைப் பற்றிப் பல நூல்கள் இருப்பதைப் போன்று, சிங் கள சாயி பக்தர்களுக்கும் அவர்களது மொழியில் பல நூல்கள் அறிமுகப்படுத்தவேண்டும் என்றும், சீரடியில் மகாராஸ்ரா மாநிலத்தில் மராட்டிய மொழிப் பிரச்சினை காரணமாகச் சிக்கல்கள் இருக்கின்றமையால், பல மைல்களுக்கு அப்பால் இருந்து வரும் இலங்கை பக்தர்களுக்கு ஆராத்தி, தரிசனத்துக்கான முன்னுரிமை வசதிகள், தங்குமிட வசதிகள், வழிகாட்டிகளின் துணையுடன் கூடிய உதவிகள் செய்து தரும்படி கேட்டுக்கொண்டேன்.



அதற்குப் பதிலளித்த சீரடிசாயி நிதியத் தலைவர், உதவிகள் செய்வதற்குத் தயாராக இருக்கிறார் என்றும், இது சம்பந்தமாக உடன் பொது ஜன தொடர்பு அதிகாரி மோகன் யாதவ் விடம் தொடர்பு கொள்ளும்படியும், தானும் இது சம்பந்தமாகத் தெரிவிப்பதாகவும் கூறினார்.

பாபாவின் நூல்களைச் சிங்களத்தில் மொழிபெயர்த்து, இலங்கையிலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் அத்தாட்சிப்படுத்தி அனுப்பிவைத்தால் நிதியம் புத்தகமாக வெளியீடு செய்வதுடன் வலைத் தளங்களிலும் பதிவு செய்ய ஏற்பாடுகள் செய்யலாம்.- என்றார்.

அதுபோன்று சென்னை மைலாப்பூர் சீரடி சாயி சாம்ராஜ் தலைவரும் இலங்கையிலிருந்து வரும் பக்தர்களுக்கு, சென்னை மைலாப்பூரிலுள்ள சாயி கோவிலில் தரிசன உதவிகள் செய்வதுடன், சீரடி சாயிபாபாவின் திருப்பாத பஞ்சமூர்த்தமொன்றை, கொழும்பிலுள்ள சீரடிசாயி மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைப்பதாகவும் கூறினார்.

சீரடி பாபாவிடம் 9 நாணயங்களைப் பெற்றக் கொண்ட லட்சுமி பாய் அம்மையாரின் பேரன் அருண்ஜீகெய்வாட், சென்ற தடவை இலங்கைவந்த சமயம், கொண்டு வந்த 9 நாணயங்களுக்குப் பக்தர்களின் தரிசனம் கிட்டியதை ஞாபகப்படுத்தினேன். இதன்போது மீண்டும் அதனை எடுத்து வரவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இலங்கை சீரடி சாயி மத்திய நிலையம் சார்பில் கலந்துகொண்ட நிலையத்தின் பொருளாளர் எஸ். தவகுமார் சகிதம் சீரடி சாயி சமஸ்தான நிதியத் தலைவர் மருத்துவர் சுரேஷ் ஹவாரே, மருத்துவர் சந்திரபானுசத்பதி குருஜீ, சென்னை மைலாப்பூரிலுள்ள அகில இந்திய சாயி சாம்ராஜ் தலைவர் மு.தங்க ராஜ், சீரடி ஆலயத்தின் பிரதான குரு ஸ்ரீ திகாம்பர சாஸ்திரிகள், சீரடி பாபாவிடம் 9 நாணயங்களைப் பெற்றக் கொண்ட லட்சுமிபாய் அம்மையாரின் மகள் சைலஜா அம்மையார் ஆகியோருக்கு நினைவுச் சின்னங்களை நிலையத் தலைவர் என்ற முறையில் வழங்கினேன். ★

# லீஸிங் கொம்பனியும் மத்தியஸ்த சபையும் மருத்துவ மாணவர்களின் போராட்டமும்...!

## ஊர்வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

''செலவழிக்கக் காசும் நேரமும் இல்லாதவைக்கு இலகுவான வழியாகத்தான், மத்தியஸ்த சபைகளை அரசாங்கம் உருவாக்கினது.ஆனால் அதுக்கே பேய்ப் பட்டம் கட்டிப்போட்டு ஊரையடிச்சு உலையில் போடுறவையை என்ன செய்யிறது ? இதுக்குத் தான் 'போஸ்ட்'டிலை கட்டி பொட்டு வைக்கிறவை தேவையென்டு சொல்லுறது.'' என்று புலம்பினாள் செல்லாச்சி.

''என்ன பிரச்சினை?'' என்று கேட்டார் ஏரம்பர்.

''காணிப்பிரச்சினை ஒன்று...மத்தியஸ்த சபையிலை கதைச்சுத் தீர்ப்பம் என்று பார்த்தால், அவன் அழைப்பு அனுப்பினாலும் வராமல் இருக்கிறான்.எனக்கு கோடு, கச்சேரியென்று அலைய நேரமுமில்லை ;செலவழிக்கக் காசுமில்லை'' என்று தனது நிலைமையைக் கூறினாள் செல்லாச்சி.

இதைக்கேட்ட ஏரம்பர் ''மத்தியஸ்தர் சபை என்பது பிணக்கை சம்பந்தப்பட்ட ஆக்களே தங்களுக்குள்ளை கதைச்சுத் தீர்க்க வழிகாட்டிற இடமே தவிர,நீதிமன்றம் மாதிரி விசாரிச்சு தீர்ப்புக் கூறும் இடம் இல்லை.அதனாலை ஒருத்தருக்கு பிணக்கைத் தீர்க்க சம்மதமில்லாமல் சபைக்கு வராவிட்டால் ,அவரை கட்டாயப்படுத்தி வரவைக்கிற அதிகாரம் மத்தியஸ்த சபைக்கு இல்லை.இதனாலைதான் கனபேர் அதுக்கு 'டிமிக்கி' கொடுக்கினம்.'' என்று அனுபவத்தைப் பகிர்ந்தார்.

''செல்வாக்கும் அதிகாரமும் இருக்கிற அரசாங்க அதிகாரிகள் மட்டுமில்லாமல், மேடை ஏறி மாலை வாங்குகிற பெரிய மனுசர் பலரும் கூட மத்தியஸ்த சபைக்கு மதிப்பளிக்காமல் இருக்கிறதுதான் கவலைக் குரியது'' என்று சொன்னார் வாத்தியார்.

அதற்கு ஜீவன் ''விடுதலைப் புலிகள் தமிழீழம் வாங்கித் தருவினம் என்று நம்பாதவை கூட, அவர்களிடம் முறையிட்டால் நீதி கிடைக்கும் என்று நம்பினவை. அதுக்குக் காரணம், புலிகள் கூப்பிட்டால் போய்த் தானே ஆக வேணும்.கூப்பிட வேண்டியவையை கூப்பிடிற மாதிரி கூப்பிட்டு ,கதைக்கிற மாதிரி கதைச்சு, முடிவு எடுத்தவை.கஷ்டப்பட்ட சனத்துக்கு இது பெரிய உபகாரமாக இருந்தது'' என்றான்.

அதுவரை கைபேசிக்குள் மூழ்கிக்கிடந்த ஜீவன் திடீரென்று ''மின்சாரசபையிலை எங்களுக்கு ஏதும் அலுவல் பார்க்க வேணும் என்றால் முதலில் மின்கட்டண நிலுவைகள் முழுக்கக் கட்டுங்கோ'' என்று முழுவதையும் கட்ட வைக்கினம். உள்ளூராட்சி சபைகளிலை அலுவல் என்றால்.'சோலைவரி எல்லாத்தையும் கட்டுங்கோ' என்று வசூலிச்சுப் போடுகினம் எல்லே'' என்று சொல்லி நிறுத்தினான்.

''இப்ப நீ என்னத்துக்கு ஆட்டுக்கை மாட்டை விடுறாய்'' என்று சினந்தாள் செல்லாச்சி.

''சொல்லுறன்'' என்ற ஜீவன் தொடர்ந்து'' அதே மாதிரி, மத்தியஸ்த சபை, அரசாங்க அமைப்புத்தானே...அதன் அழைப்பை உதாசீனப் படுத்துவது அரசாங்கத்தையே அவமதிக்கிற மாதிரித்தானே... அதனாலை இப்படி வராதவையின்றை பெயர்களை கிராம சேவையாளர் , பிரதேச செயலர், அரசாங்க அதிபர் என்று எல்லோருக்கும் அறிவிச்சு விட வேணும்.அந்த நபர் தனது ஏதேனும் தேவைக்கு அரச அலுவலகங்களுக்குப் போகும் போது, 'நீர் முதலில் போய் மத்தியஸ்த சபையிலை சமுகமளிச்சுப் போட்டு வாரும் என்று அனுப்பினால், எல்லோரும் ஒழுங்காக வழிக்கு வருவினம் எல்லே'' என்று சொன்னான்.

அதைக்கேட்ட செல்லாச்சி ''இண்டைகுத்தான்டா நீ உருப்படியாக ஒரு யோசனை சொல்லியிருக்கிறாய்'' என்று சொல்லியபடி கைநிறையை கச்சானை அள்ளி நீட்டினாள். சிரிப்புடன் வாங்கிக் கொண்டான் ஜீவன்.

அப்போது ,பேப்பர் தம்பி ''லீஸிங் கொம்பனிக்காரர் சிலர் 'எரியிற வீட்டில பிடுங்கின கொள்ளி மிச்சம்' என்று வெருட்டிக் காசைச் சுருட்டுகினமாம்'' என்றபடி வந்தமர்ந்தான்.

''அவங்கள் தொழிலே அதுதானே...இந்தக் கதை என்ன?'' என்று கேட்டார் ஏரம்பர்.

சொல்லத் தொடங்கினான் பேப்பர் தம்பி.....

''ஒரு பொடியன் 'லீஸிங்கிலை' வாகனம் ஒன்று எடுத்திருக்கிறான்.அப்ப இரண்டு பேர் அதுக்கு பிணைக் கையெழுத்துப் போட்டிருக்கினம். கெட்ட காலமோ என்னவோ, கடனுக்குக் கெடுத்த வாகனம் விபத்துக்குள்ளாகி ,அந்தப் பொடியனும் சம்பவ இடத்திலையே இறந்து போனான். விபத்து வழக்கு நீதிமன்றத்திலை இருக்கு.இந்த நேரத்திலை, கடன் கொடுத்த நிறுவன ஆக்கள் ,பிணைக் கையெழுத்துப்போட்ட இரண்டு பேர் வீட்டையும் போய் 'நீங்கள்தான் மிச்சக் கடன்காசைக் கட்ட வேணும்' என்று வெருட்டுகினமாம் '' என்றான் பேப்பர் தம்பி.

இதைக்கேட்ட ரூபன் ''இதென்ன அயோக்கிய வேலையாக இருக்கு.கடனுக்கு வாகனம் எடுக்கும்போதே,காப்புறுதிக்கும் சேர்த்துக் கணக்குப் பார்த்துத் தானே எவ்வளவு கட்ட வேணும் என்று நிர்ணயிக்கிறவை.வழக்கு முடிந்தால்,காப்புறுதி நிறுவனம் வாகனக் காசைக் கொடுக்கும் தானே.பிறகு எப்படி இவை பிணை நின்றவையிட்டை காசு கேப்பினம்'' என்று பொரிந்து தள்ளினான்.

''நிறையப்பேருக்கு இதிலை விளக்கம் இல்லை.நிறுவன ஆக்களும் அசிங்கப்படுத்தி எப்பிடியாவது காசைவாங்கிவிட வேணும் என்று பாக்கிறாங்கள். பாவப்பட்டதுகள் இருக்கிறதை வித்து கொடுக்குதுகள்'' என்று பரிதாபப்பட்டாள் செல்லாச்சி.


''எங்கடை சனமும் கடன் தாறான் என்றவுடன் ,எப்பிடித் திருப்பிக் கட்டுவது,என்ன நிபந்தனைகள் போட்டிருக்கு என்று பார்க்காமல் கண்ணை மூடிக் கொண்டு வாங்கிறதும் பிழைதான்'' என்றார் ஏரம்பர்.

இதைக்கேட்டு சோகமாகச் சிரித்த ரூபன் ''யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சமூகத்தில் உடனடியாக நடக்கிற நல்ல வியாபாரங்கள் இரண்டுதான்..... ஒன்று கடவுள்பக்தி; மற்றது கடனும் உதவியும்.....இது கூடத் தெரியாமல், யுத்தம் முடிஞ்சு இத்தனை வருசமாகியும் பாதிக்கப்பட்டவைக்கு என்ன தேவை என்று பார்த்து, வழி காட்டாமல் இருக்கிற எங்கடை புத்திசீவிகளும் அரசியல் வாதிகளும் இதற்கு மிகப்பெரிய காரணம்'' என்று சொன்னான்.

அப்போது ஏரம்பர் ''மருத்துவ மாணவர்கள், திடீரென்று வீதியிலை இறங்கிப் போராடுகினம். என்னவாம் ?'' என்று கேட்டார்.

தொண்டையைச் செருமிக் கொண்டு சொல்லத் தொடங்கினான் பேப்பர் தம்பி.

''2008 ஆம் ஆண்டு தொழில் நுட்பம் மற்றும் முகாமைத்துவத்துக்கான தெற்காசிய நிறுவனம்' என்ற பெயரிலை தனியார் கல்வி நிறுவனம் தொடங்கப்பட்டது. அந்தப் படிப்புகளுக்கு ஆக்கள் சேரவில்லையோ என்னவோ, 2011 ஆம் ஆண்டு அந்த நிறுவனத்தின் பெயரிலை முகாமைத்துவத்தை எடுத்துப்போட்டு மருத்துவத்தை சேர்த்து இருக்கினம். அதாவது தனியார் மருத்துவக் கல்லூரி ஆரம்பிச்சிருக்கினம். அந்தக் கல்லூரியிலிருந்து இப்ப முதல் தொகுதியினர் வெளிவந்திருக்கினம். அவைக்கு மருத்துவத் தொழில் செய்யத் தகுதி போதாது என்று இலங்கை மருத்துவ சங்கத்தினரும் பல்கலைக்கழகங்களின் மருத்துவ மாணவர்களும் எதிர்க்கினம்.'' என்று விளக்கி முடித்தான் பேப்பர் தம்பி.



''தடுக்குறதுக்குக் காரணம் என்ன சொல்லுகினம்?'' என்று கேட்டார் ஏரம்பர்.

''சரியாக மருத்துவம் செய்யும் அளவுக்கு அங்கு படிச்சு வெளியிலை வருகிறவர்களுக்கு, தகுதி கிடையாதாம்.'' என்று பதில் சொன்னான் பேப்பர் தம்பி.

''அதிக மருத்துவர்கள் உருவானால் நல்லதுதானே?'' என்று கேட்டார் ஏரம்பர்.

அதனைதலையாட்டி மறுத்த வாத்தியார் ''மருத்துவர்கள் தரமாகவும் தகுதியானவர்களாகவும் இருக்க வேணும்.மற்றத் துறைகளில் ஒன்றும் தெரியா விட்டாலும் ,பழகிக் கொள்ளலாம்.ஆனால், மருத்துவருக்கு ஒன்றும் தெரியாமல் வந்து எங்களிலை பழகினால் என்ன நடக்கும்?''என்று கேட்டார்.

''மருத்துவர்களையே எதிர்த்து கல்லூரி நடத்திறதென்றால் பெரிய கைகளாகத்தானே இருப்பினம்'' என்று கேட்டார் ஏரம்பர்.

''ஓம்மோம்..வலு பெரிய கைகள் எல்லாம் சம்பந்தப் பட்டிருக்காம்....அதனாலைதான் பெரியாக்கள் ஒருத்தரும் களத்திலை இறங்காமல் மாணவர்களை இறக்கி விட்டிருக்கினம் போல இருக்கு''என்றான் ஜீவன்.

''தனியார் கல்லூரிகள் அதிகமாகினால்,அரசாங்கம் இலவசக் கல்வியைப் படிப்படியாக நிறுத்தி விடும்.பிறகு மருத்துவப்படிப்பு ஏழைகளுக்கு கிட்டாமலே போய் விடும் என்றெல்லே போராடும் மாணவர் சொல்லுகினம்'' என்றான் ரூபன்.

''அப்பிடிப் பார்த்தால் தனியார் மருத்துவமனைகள் அதிகமாகினால் ,அரச மருத்துவமனைகளின் தரம் குறைந்து இந்தியா மாதிரி நல்ல சிகிச்சைக்குத் தனியாரிட்டைதான் போக வேணும் என்று ஆகி விடாதோ?'' என்று கேட்டான் ஜீவன்.

''மருத்துவர்கள் எதற்காகவும் போராடலாம்,..ஆனால் இதிலை பொதுமக்கள் கவலைப்பட வேண்டிய விசயம் இருக்கு'' என்று பீடிகை போட்டார் வாத்தியார்.

''எங்களுக்கென்ன?'' என்றார் ஏரம்பர்.

அதற்கு வாத்தியார் ''இலங்கை போன்ற வளரும் நாடுகளிலை தனியார் மயம் எதிலை வந்தாலும்,படிப்பிலையும், சுகாதார சேவைகளிலையும் வரக்கூடாது.வந்தால், அரசு நடத்திற சேவைகளை தனியார் எப்பிடியும் தரமற்றவையாக்கிப் போடுவினம்.பிறகு தங்களிட்டை வந்தால்தான் தரமான சேவை கிடைக்கும் என்ற நிலையை உருவாக்கினால்...'' என்று இழுத்தார் .

''அதுதான் பக்கத்திலை தமிழகத்திலை பார்க்கிறமே'' என்று சொன்னாள் செல்லாச்சி.

அதற்கு பேப்பர் தம்பி ''யாழ்ப்பாணத்திலையும் தனியார் மருத்துவக் கல்லூரி நடத்த விண்ணப்பிக்கப்பட்டிருக்கு என்று சொல்லுகினம். எப்பிடியும் தமிழீழம் கேட்ட எங்களை தமிழ்நாடு மாதிரி சீர்கெடுக்கத்தான் எல்லா வேலைகளும் நடக்குது'' என்றான்.

''பொதுமக்களுக்காக என்று சொல்லிப் போராடுகிற மருத்துவர்கள், வெளிநாடுகள் மாதிரி, மருத்துவ சிகிச்சைகளுக்கு மருத்துவர் பொறுப்புக் கூறக் கூடிய வகையில் சட்டம் கொண்டுவாறதை மட்டும் ஏன் எதிர்க்கினம் என்று தெரியவில்லை'' என்று உள்குத்துக் குத்தினான் ரூபன்.

''தனியார் மருத்துவக் கல்லூரிப் பிரச்சினை நீதிமன்றத்திலை இருக்கு. வாற 31 ஆம் திகதி தீர்ப்பாம்.'' என்று சொன்னான் ஜீவன்.

''இப்ப எங்கடையாக்கள் தனியார் மயப்படுத்துவினம். எதிர்ப்புகள் குறைந்தபிறகு,, ஈசல் மொய்ச்ச மாதிரி வெளிநாட்டு நிறுவனங்கள் குவியும். இப்ப சுதாரிக்காவிட்டால், அப்ப நாதியற்று நிக்கப் போறது. தமிழனோ சிங்களவனோ முஸ்லிமோ இல்லை... இலங் கையர்கள்தான்'' என்று கூறி விட்டு எழுந்து நடக்கத் தொடங்கினார் வாத்தியார்.

மற்றவர்களும் நடக்க, கச்சான் கடையைக் கட்டத் தொடங்கினாள் செல்லாச்சி.




# google+ இன் புதிய பதிப்பு விரைவில்!



கூகுள் நிறுவனத்தால் அறிமுகம் செய்யப்பட்ட சமூகவலைத்தளமான கூகுள் பிளஸ் கணக்கைப் பல மில்லியன் கணக்கான பயனர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

பேஸ்புக் வலைத்தளத்திற்கு போட்டியாக உள்ள இந்தக் கூகுள் பிளஸில் பல்வேறு சிறப்பம்சங்கள் அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன. அந்த வகையில் விரைவில் புதிய வசதிகளுடனான பதிப்பு ஒன்று அறிமுகம் செய்யப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இப் புதிய பதிப்பில் வெவ்வேறுபட்ட திரைகளுக்கு ஏற்றவாறு ஒத்திசைவாக்கம் செய்யக்கூடிய வசதி, தரம் குறைவான கருத்துரைகளை (Comments) மறைக்கும் வசதி உட்பட மேலும் சில வசதிகள் புதிதாக தரப்படவுள்ளன.

இவ் வசதிகள் உள்ளடங்கிய புதிய பதிப்பானது இம்மாதம் முதல் பயன்பாட்டிற்கு வரும் என கூகுள் நிறுவனம் அறிவித்துள்ளது.

# ஸ்மார்ட்போனில் அழிந்த தகவல்களை மீட்பது எப்படி?



ஆண்ட்ராய்ட் இயங்குதளம் கொண்டுள்ள ஸ்மார்ட்போன்களில் சேமித்து வைக்கப்பட்ட குறுந்தகவல்கள் சில வேளைகளில் அழிந்து போகக் கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன. அவ்வாறு அழிந்து போன தகவல்களைப் பின்வரும் வழிமுறைகள் மூலமாக மீளப்பெற்றுக் கொள்ள முடியும்.

**ஸ்மார்ட்போனின் டெவலப்பர் அப்ஷன்**

முதலில் உங்களது ஸ்மார்ட்போனின் டெவலப்பர் அப்ஷனினை செயல்படுத்த வேண்டும். இதற்கு Settings >> About phoneசென்று Build number ஒப்ஷனை கிளிக் செய்ய வேண்டும். இதைடிட Developer options has been enabled என்ற தகவல் வரும் வரை செய்ய வேண்டும்.

அடுத்து Developer options >> USB debugging ஒப்ஷன் செல்ல வேண்டும்.

**மென்பொருள் இன்ஸ்டால் செய்ய வேண்டும்**

அழிந்த தகவல்களை மீட்க இலவசமாக கிடைக்கும் மென்பொருளை டவுன்லோட் செய்து கணினியில் இன்ஸ்டோல் செய்ய வேண்டும். பின் ஆண்ட்ராய்ட் ஸ்மார்ட்போனினை கணினியில் இணைக்க வேண்டும்.

**ரிக்கவரி மென்பொருளை இயக்க வேண்டும்**

பின்னர் கணினியில் இன்ஸ்டோல் செய்யப்பட்ட ரிக்கவரி மென்பொருளை இயக்கி ஆண்ட்ராய்ட் ஸ்மார்ட்போனினை ஸ்கான் செய்ய வேண்டும். உங்களது ஸ்மார்ட்போன் கண்டறியப்பட்டதும், அழிந்து போன குறுந்தகவல்களை தேடி கண்டறிய முடியும். பின்னர் அழிந்து போன குறுந்தகவல்களை கண்டறிந்த பின் அவற்றை தேர்வு செய்து ரிக்கவர் என்ற அப்ஷனை கிளிக் செய்ய வேண்டும். இனி மீட்கப்பட்ட குறுந்தகவல்களை கணினியில் சேமித்துக் கொள்ளலாம்.

# ஸ்மார்ட் சீப்பு அறிமுகம்



அழகு சாதன தயாரிப்பில் முன்னணி நிறுவனமான லோரியல் நிறுவனம் ஸ்மார்ட் சீப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது. தலையை வாரும் போது எழும் அதிர்வு மற்றும் ஒலியைக் கொண்டு தலைமுடியின் தன்மையை ஸ்மார்ட்போனுக்கு அனுப்புகிறது. தலையை விருப்பத்துக்கு ஏற்ப வாருவதற்கான அழுத்தத்தையும் கொடுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. Wi fi மற்றும் Bluetooth மூலம் தகவல்களை அனுப்புகிறது. அமெரிக்காவில் நடந்த CES கண்காட்சியில் இந்தச் சீப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தச் சீப்பு இந்த ஆண்டு விற்பனைக்கு வரும் என்று நிறுவனம் அறிவித்துள்ளது.

# இன்டர்நெட் இல்லாத போதும் whatsapp இல் தகவல் அனுப்ப முடியும்!

உலகளவில் முன்னணி வகிக்கும் சமூகவலைதளங்களில் ஒன்றான வாட்ஸ் அப் நிறுவனம் அடிக்கடி புதிய அப்டேட்களை அறிமுகப்படுத்திக் கொண்டே உள்ளது. அந்தவகையில் தற்போது இன்னொரு புதிய விடயத்தை வாட்ஸ் அப் செயல்படுத்தியுள்ளது. அதாவது, இன்டர்நெட் கவரேஜ் அல்லது சரியாக சிக்னல் இல்லாத இடத்திலிருந்தும் இனி வாட்ஸ் அப்பிலிருந்து தகவல்களை அனுப்ப முடியும்.

அதாவது, ஒரு இடத்தில் இன்டர்நெட் சிக்னல் சரியாக இல்லை என்றாலும் கூட அந்த இடத்திலும் நாம் வாட்ஸ் அப்பில் மெசேஜ் டைப் செய்து queue வரிசையில் வைத்து விட வேண்டும். அங்கு இன்டர்நெட் சிக்னல் வந்துவிட்டால் அந்த மேசேஜ் அனுப்பட்டு விடும்.

திரும்ப தகவலை Resendசெய்ய Send பொத்தானை மட்டுமே அழுத்த வேண்டும்.

தற்போது இந்த வசதி ஐபோனில் மட்டுமே கொண்டுவரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இதயத்துடிப்பை கடவுச் சொல்லாக பயன்படுத்தும் புதிய தொழில்நுட்பம்


இணையவழி மருத்துவத்தின்போது தனிநபரின் உடல்நலம் பற்றிய மின்னணுத் தகவல்களைப் பாதுகாப்பதற்காக, அவரது இதயத் துடிப்பையே கடவுச்சொல்லாக பயன்படுத்தும் புதிய தொழில்நுட்பத்தை அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கி வருகின்றனர்.

தற்போது தகவல்களைப் பாதுகாப்பதற்காகப் பயன்படுத்தப்படும் 'என்க்ரிப்ட்' தொழில்நுட்பங்கள் மிகவும் சிக்கல் நிறைந்தவையாகக் காணப்படுகின்றன.

இதனால் இணையவழி மருத்துவம், கைபேசி மூலமான மருத்துவம் போன்றவற்றின்போது, இரகசியத் தகவல்களைப் பாதுகாக்க அத்தகைய பாரம்பரியத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது.

எனவே, 'என்க்ரிப்ட்' தொழில்நுட்பத்துக்கு மாற்றாக, எளிமையான, மருத்துவத்துறைக்கென்று பிரத்தியேகமான தகவல் பாதுகாப்புத் தொழில்நுட்பத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக பிங்கம்டன் பல்கலைக்கழக பேராசிரியர் ஷன்பெங் ஜின் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, நோயாளியின் 'இசிஜி' பரிசோதனை வரைபடத்தை கடவுச் சொல்லாகப் பயன்படுத்தி அவரது உடல்நிலை குறித்த விவரங்களைப் பாதுகாக்கும் முறையை உருவாக்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



# இலங்கையில் பாரதி 11



● முருகபூபதி – ஆஸ்திரேலியா

*'ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி*
*யாதியினைய கலைகளில் உள்ளம்*
*ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர்*
*ஈன நிலைகண்டு துள்ளு வார்'*

என்னும் பாரதியின் கவிதை வரிகளையே தாரக மந்திரமாக ஏற்று நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் வெளியான மல்லிகை மாத இதழ், தொடக்கத்தில் யாழ்ப்பாணத்தில் கஸ்தூரியார் வீதியில் அமைந்திருந்த ஜோசப் சலூன் என்ற சிகையலங்கார நிலையத்திலிருந்து வெளியாகி பின்னர், கஸ்தூரியார் வீதிக்கும் கே.கே.எஸ். வீதிக்கும் இடையில் ( ராஜா தியேட்டருக்கு பின்புறமாகச்சென்ற) சிறிய ஒழுங்கையிலிருந்த சிறு கட்டடத்தில் அமைந்த மல்லிகைக்கான பிரத்தியேக அலுவலகத்திலிருந்து வெளியானது.



Mallikai Editor Dominic Jeeva

மல்லிகை முதலாவது இதழ் 1966 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வெளியானபோது அதன் விலை 30 சதம்தான் என்பதை அறியும்போது ஆச்சரியம்தான்.

ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் ஒரு காலகட்டத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த மல்லிகையும் எமது மக்களைப் போன்று வடக்கில் உருவான அசாதாரண சூழ்நிலைகளையடுத்து கொழும்பில் ஸ்ரீ கதிரேசன் வீதிக்கு இடம் பெயர்ந்து, - இறுதியில் அங்கிருந்தே சில வருடங்களுக்கு முன்னர் தனது ஆயுளையும் நிறைவுசெய்துகொண்டது.

மல்லிகை ஆசிரியரும் வெளியீட்டாளருமான **டொமினிக் ஜீவா** பின்னாளில் **மல்லிகை ஜீவா** என்றே பரவலாக அறியப்பட்டவர்.

ஒரு சிகையலங்காரத் தொழிலாளியாக வாழ்ந்து, பொதுவுடைமைக் கருத்துக்களினால் ஈர்க்கப்பட்டு, அரசியல்வாதியாகிவிடாமல், இலக்கியவாதியாக தன்னை வளர்த்துக்கொண்டவர் ஜீவா.

சிறுகதை எழுதிக்கொண்டிருந்தவர் எவ்வாறு ஓர் இலக்கிய இதழை துணிந்து நடத்த முன்வந்தார் என்ற கதையை தனது சுயசரிதையிலும் விவரித்திருக்கிறார். இந்தச்சரிதை ஆங்கிலத்திலும் வெளியாகியிருக்கிறது.

முழுநேர எழுத்தாளராக ஈழத்து இலக்கிய உலகில் அறிமுகமான ஜீவா, இதழாசிரியராகவே தனது வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டவர். போர் நெருக்கடிமிக்க, மின்சாரம் தடைப்பட்டிருந்த காலப்பகுதியிலும் அச்சுத்தாளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவிய சூழலிலும் யாழ்ப்பாணத்திலிருந்து மல்லிகை வெளியானது. அப்பியாசக்கொப்பித்தாளிலும் மல்லிகை அச்சாகியதை மறந்துவிடமுடியாது.

ஆயினும் அன்றைய அசாதாரண சூழ்நிலைகளோ- காகிதத் தட்டுப்பாடோ - வாழ்வாதார நெருக்கடியோ இல்லாத இந்தக் கணினி யுகத்திலும் கொழும்பிலிருந்து வெளியான மல்லிகை, அதன் ஆசிரியராலேயே நிறுத்தப்பட்டதும் ஈழத்து இலக்கிய உலகில் மறக்கமுடியாத செய்தியாகும்.

இலங்கை கலாசார அமைச்சின் சாகித்திய மண்டலம் உருவானவேளையில் தமிழில் சிறுகதை இலக்கியத்திற்கான விருதை முதல் முதலில் பெற்றவரும் டொமினிக் ஜீவா என்பதும் முக்கியமான தகவல். அவர் குறிப்பிட்ட விருதைப் பெற்றுக்கொண்டு யாழ். ரயில் நிலையத்தில் வந்திறங்கிய பொழுது, அக்காலப்பகுதியில் யாழ். பிரதி மேயராக இருந்த துரைராஜா என்பவரின் தலைமையில் யாழ்.நகர மக்களின் சார்பில் மகத்தான வரவேற்பும் அளிக்கப்பட்டது. அவ்வாறு யாழ். மக்களின் அபிமானத்திற்கு ஆளாகியிருந்த டொமினிக் ஜீவா, போர் நெருக்கடியாலும் விமர்சிக்கப்பட வேண்டிய சில அரசியல் அழுத்தங்களினாலும் கொழும்புக்கு இடம்பெயர்ந்து மல்லிகையை வெளியிட்டார்.

மல்லிகை பற்றி இலங்கை நாடாளுமன்றத்திலும் விதந்து பேசப்பட்டிருக்கும் தகவலை நாடாளுமன்ற குறிப்பேட்டில் ( ஹன்சார்ட்) பார்க்க முடிகிறது.

**இலங்கையில் பாரதி** என்னும் இந்தத்தொடரை எழுதும் முருகபூபதி உட்பட பல இளம் தலைமுறையினரை 1970 காலப்பகுதியில் இலக்கிய உலகிற்கு தமது மல்லிகை ஊடாக அறிமுகப்படுத்தியவரும் இவர்தான். சில பிரதேச சிறப்பிதழ்களையும் மல்லிகை வெளியிட்டிருப்பதுடன் புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவில் வதியும் ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகளுடன் **மல்லிகை** ஆஸ்திரேலியா சிறப்பு மலரையும் 2000 ஆம் ஆணடில் வெளியிட்டுள்ளது.

தேசத்தின் கண்,சாகித்திய ரத்னா உட்பட பல விருதுகளையும் பெற்றிருக்கும் மல்லிகை ஜீவா முழுநேர எழுத்தாளராக, இதழாசிரியராக வாழ்ந்து, தற்பொழுது கொழும்பின் புறநகரில் ஓய்விலிருந்தவாறு, தமது எஞ்சிய காலத்தில், முந்திய காலம் பற்றி நனவிடை தோய்ந்துகொண்டிருக்கிறார். அவர் தற்பொழுது 90 வயதை நெருங்குகிறார்.

மல்லிகை ஜீவா அவர்களை பாரதியின் புதிய ஆத்திசூடியின் வெளிச்சத்திலும் அடையாளம் காணமுடியும்.

ஏறு போல் நட - ஓய்தலொழி - குன்றென நிமிர்ந்து நில் - சிதையா நெஞ்சுகொள் - சுமையினுக்கு இளைத்திடேல் - தூற்றுதல் ஒழி - தோல்வியிற் கலங்கேல் - ரௌத்திரம் பழகு - வெடிப்புறப்பேசு - முதலான குணாதிசயங்கள் இருந்தன. இந்த அருங்குணங்கள் மல்லிகை ஜீவாவிடமும் நீடித்திருந்தவை என்பது பரகசியம்.




மல்லிகை முதலாவது இதழ் 1966 ஓகஸ்ட்

இலக்கிய இதழை யாழ். மண்ணில் மலரவைக்க வேண்டும் என்ற எண்ணக்கரு அவரது மனதில் விதைக்கப்பட்டவேளையில் என்ன பெயர் சூட்டலாமா... என்று தனது இலக்கிய நண்பர்களுடன் கலந்துரையாடியிருக்கிறார்.

இதயம் - கமலம் - மலர் - செந்தாரகை - கலைஞன் முதலான பெயர்கள் ஆலோசிக்கப்பட்டு, இறுதியில் ஜீவாவே **மல்லிகை** என்ற பெயரை தேர்வுசெய்துள்ளார். மல்லிகை வெண்மையானது. வாசம் நிரம்பியது. ஏழை முதல் செல்வந்தன் வரையில் நல்ல நிகழ்வுகளுக்கும் துயர நிகழ்வுகளுக்கும் பயன்படுத்தப்படுவது, அதனால் எளிமையானது முதலான அபிப்பிராயங்களே அவர் மனதில் எழுந்திருக்கின்றன.

மல்லிகை வெளிவரத் தொடங்குவதற்கு முன்பே ஜீவாவும் வெண்ணிற ஆடைகளையே அணியத்தொடங்கிவிட்டார். அவரை வெள்ளை நேஷனல் வெள்ளை வேட்டியுடன்தான் எங்கும் காணலாம். அவர் சார்ந்திருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடுகள், கூட்டங்களில் மாத்திரம் தோளிலே சிறிய சிவப்புத் துண்டை அணிந்திருப்பார்.

இலங்கையில் மல்லிகை இலக்கிய உலகில் மணம் பரப்பிய காலம் ஈழத்து இலக்கிய வளர்ச்சியின் பொற்காலம் எனலாம். குறிப்பாக பாரதி இயல் ஆக்கங்களுக்கு மல்லிகை முன்னுரிமை வழங்கியது.

தமிழகத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வணிக இதழ்கள் சினிமாத்தாரகைகளின் வண்ணப்படங்களை வெளியிட்டுக்கொண்டிருந்த சூழலில், இலங்கையில் மல்லிகை கலை, இலக்கியவாதிகள், கல்விமான்கள், அறிஞர்கள் முதலானோரின் முகங்களை முகப்பில் பதிவுசெய்து, அவர்கள் பற்றிய விரிவான கட்டுரைகள் அல்லது நேர்காணல்களை வெளியிட்டுவந்தது.

காலப்போக்கில் குறிப்பிட்ட அட்டைப்பட அதிதி கட்டுரைகள் நான்கு பாகங்களில் தொகுப்பாக - சுருக்கமாகச் சொன்னால் ஆவணப்பதிவாகவே வெளிவந்தன.

இவற்றுக்குப்பின்னாலிருந்த மல்லிகை ஜீவாவின் அயராத உழைப்பு போற்றுதலுக்குரியது.

இலங்கையிலும் தமிழகத்திலும் பல சிற்றிதழ்கள் சிலரது ஆர்வத்தின் நிமித்தம் கூட்டு முயற்சியாகத்தான் வெளிவந்துள்ளன. இடையில் அவை குழுமோதல்களால் அற்பாயுளிலும் மறைந்தன. அத்தகைய இதழ்களுக்கென நீண்ட பெயர்ப்பட்டியல் உண்டு.

பொதுவுடைமையில் நம்பிக்கை வைத்திருந்த மல்லிகை ஜீவா, தமது மல்லிகை விடயத்தில், கூட்டுச்சேர்தல் - கூட்டுறவு அடிப்படை - குழுவாகச் செயற்படல் முதலான வழிமுறைகளைப் பின்பற்றவில்லை.

அதனாலும் மல்லிகை 45 ஆண்டுகளுக்கும் அப்பாலும் கடந்து வந்து இலக்கிய மணம் பரப்பியது.

1967 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெளியான மல்லிகையின் அடடைப்படம் மனுக்குலத்தின் சாதனையை சித்திரித்திருந்தது. அமெரிக்கா விண்வெளிக்கு அப்பலோவை அனுப்பி சந்திரனில் பூவுலக மனிதன் கால் பதித்த செய்தியை பதிவுசெய்தது.

பாரதியார் என்றோ '**சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்**' என்று பாடிவிட்டார். பாரதி மறைந்து 46 வருடங்களின் பின்னர் அவரது தீர்க்கதரிசனம் பலித்த 1967 ஆம் ஆண்டில் இச்சாதனையை விதந்து பாராட்டி ஜீவா குறிப்பு எழுதியிருந்தார்.

உலக வல்லரசுகளான அமெரிக்காவும் ரஷ்யாவும் எதிர் எதிர் துருவங்களாக இருந்த அக்காலப்பகுதியில் புரட்சியின் விளைநிலமான சோவியத் ரஷ்யாவை ஆதர்சமாகக்கொண்டிருந்த ஜீவா, அமெரிக்காவின் விண்வெளிச்சாதனையை புகழ்ந்து குறிப்புகள் எழுதிய அதே (1967 நவம்பர்) இதழில் அரைநூற்றாண்டு யுகப்புரட்சியின் தாக்கங்களும், மகாகவி பாரதியும் சோவியத் ஜனனமும் முதலான கட்டுரைகளையும் வெளிவரச்செய்திருந்தார்.

**'மனிதன் இம்மண்ணில் தோன்றிய நாளிலிருந்தே விண்ணை நோக்கித்தனது ஆச்சரியங்கலந்த சிந்தனையை உலவவிட்டதுண்டு. தனது அறிவுக்கே அப்பாற்பட்ட கோள்களையும் அண்டவெளி அற்புதங்களையும் பற்றித் தனது கற்பனைப்புரவியை தட்டிப்பறக்கவிட்டதுண்டு'** எனத் தொடக்கும் ஜீவாவின் குறிப்பு - காலங்காலமாக எமது தமிழ்க்குழந்தைகளுக்கு அம்புலியைக் காண்பித்து சொல்லப்பட்ட கற்பனைப் புனைவுக்கதைகளையும் விவரித்திருந்தது.

குழந்தைக்கும் காதலிக்கும் சந்திரனை உவமைப்படுத்தி கவிஞர்கள் பாடல்கள் இயற்றியவேளையில் பாரதியோ '**சந்திரமண்டலத்தியல் கண்டு தெளிவோம்**' என்று விஞ்ஞானபூர்வமாக அறிவியல் கண்கொண்டு பாடல் இயற்றினார்.

**50 ஆண்டுகள் என்பது சரித்திர வளர்ச்சிப்போக்கில் ஓர் அணுவுக்குச் சமானம். ஆனால், இந்த இருபதாம் நூற்றாண்டின் இரண்டாவது பத்துகளுக்கு பின்வந்த ஐம்பது வருடங்களும் உலக சரித்திரத்தின் சகல அம்சங்களையுமே திசை திருப்பும் ஆண்டுகளாக வந்து வாய்க்கப் பெற்றுள்ளன என்பதைச் சரித்திரமும் அரசியலும் தெரிந்தவர்கள் இன்று ஒப்புக்கொள்கிறார்கள்.**

**இதற்குக்காரணமாக அமைந்ததுதான் நமது மகாகவி பாரதி அன்றே இனங்கண்டு கவிக்குரல் கொடுத்துப்போற்றிய 'ஆகா வென்றெழுந்தது பார் யுகப் புரட்சி' என்ற 1917 இல் ரஷ்யாவில் நடைபெற்ற மகத்தான மனிதகுல விடுதலைப்புரட்சியாகும்'** எனத் தொடங்கப்பட்டிருந்த அக்கட்டுரையின் இறுதியில் பாரதியின் குறிப்பிட்ட கவிதை முழுமையாக பிரசுரிக்கப்பட்டிருந்தது.




தன்னிகரற்ற இக்கவிஞரின் தெரிந்தெடுக்கப்பட்ட கவிதைகளின் தொகுப்பொன்று 1963 இல் சோவியத் யூனியனின் மிகப்பெரும் புத்தக வெளியீட்டு ஸ்தாபனங்களில் ஒன்றான புனைகதை கவிதை வெளியீட்டகத்தாரால் வெளியிடப்பட்டிருக்கும் தகவலையும் சோவியத்தில் பாரதியின் கவிதைகள் கட்டுரைகள் மாத்திரமின்றி திருக்குறளும் சிலப்பதிகாரமும் ரஷ்ய மொழிகளில் வெளியாகியிருக்கும்

(18 ஆம் பக்கம் பார்க்க)

# கண்ணியம் பேசும் உங்களிடம் கவர்ச்சி வேண்டாமே...!

உடை என்பது, நம் சௌகரியத்துக்கு ஏற்ப, கண்ணியமாகத்தான் இருக்க வேணுமே தவிர, உடையை வைத்து நம்மை விமர்சிக்கும் படி இருக்கக் கூடாது.



ஒரு பெண் செய்யும் சின்ன தவறான காரியம் கூட, ஒரு வர லாறாக, ஒருதலை முறையின் பதிவாகப் பார்க்கும் சூழ்நிலை இன்றைய சமுதாயத்தில் உள்ளது.

ஒரு பெண், தான் தனித் திறமை உள்ளவள், பல சாதனைகளைச் செய்ய முடிந்தவள், பல இக்கட்டான சூழ்நிலைகளை சமாளிக்கும் திறன் படைத்தவள், தன் இலக்கை நோக்கி ஒவ்வோர் அடியாக எடுத்து வைக்க தெரிந்த வள் என்பதை வெளிக்காட்ட, மற்றவர்கள் பாராட்டும் படி நடக்க, தெரிந்திருக்க வேண்டும். ஆனால், பெண்களின் தற்போதைய நிலையை, சமூக முன்னேற்றத்தில் அவர்களின் பங்கை ஆராய்ந்து பார்த்தால், திருப்திகரமானதாக இல்லை என்று தான் கூறத் தோன்றுகிறது.

எல்லாத் துறைகளிலும் பெண்கள் ஜெயித்து வரும் வேளையில், பெண்களின் மாறிய மனநிலையை நாம் பெரும்பாலான பெண்களிடம் காணலாம். நான்கு பேர் பாராட்ட, கிரீடம் சூட்டிக் கொள்ள என, தங்களின் வெளிப்புற தோற்றத்துக்கே முக்கியத்துவம் தர முயல்கின்றனர்.

உடுத்தும் உடை, தற்போதைய பெண்களின் மூச்சாகவே மாறி விட்டது. உடலை மறைக்கத்தான் உடை என்பதெல்லாம் பழங்கதை. உடலை வெளிச்சம் போட்டு காட்டத்தான், புதுப் புது நவநாகரிக உடைகள் என்ற கட்டத்துக்கு வந்து விட்டோம்.

ஓர் உடை அழகாக இருக்கிறது என்பதே, அதை நாம் தேர்ந்தெடுப்பதற்கான காரணமாக இருக்கக் கூடாது. அது, நம் உயரம், உடல் அமைப்பு, வயது, சமுதாயத்தில் நம் நிலை இதையெல்லாம் கருத்திற் கொண்டு தான் அமைய வேண்டும். ஆனால், இப்படியெல்லாம் இப்போது யாரும் கவனம் கொண்டுள்ளனர் எனத் தெரியவில்லை.

உடை என்பது, நம் சௌகரியத்துக்கு ஏற்ப, கண்ணியமாகத் தான் இருக்க வேண்டுமே தவிர, உடையை வைத்து நம்மை விமர்சிக்கும்படி இருக்கக் கூடாது. கண்ணியமான உடை, மற்றவர்களைக் கவர்ந்து, கண்டி இழுக்காத உடை, நாகரிகமான முறையில் அணிந்தாலே, கம்பீரம் தானாகவே வந்து விடும். பெண்கள் படிக்கும் பருவ வயதில், தன் எதிர்காலம் பற்றிய இலட்சியத்தோடு நடைபோடும் இளம் பெண்கள் எத்தனை பேர், இதைக் கவனத்தில் கொண்டுள்ளனர் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

உடை, சிகை, முக அலங்காரம் அனைத்தும், ஆண்களின் பார்வைக்காக என்பதில் கவனம் செலுத்துவதால், பெண்கள், தங்களின் இலக்கு என்ன என்பதையே தீர்மானிக்க முடி யாமல் தடுமாறுகின்றனர். பின் எங்கிருந்து பெண்கள் சமுதாயம் முன்னேற்றம் காணும் என்பதும் கேள்விக்குறியே.

பெண்கள், தங்களுக்கான வழியை விரிவுபடுத்திக் கொண்டு போகும் போது, பாலியல் தொந்தரவு போன்ற சிக்கல்களை எதிர் கொள்ள வேண்டியிருக்கும். தனியாக வாகனம் ஓட்டும் பெண்ணை, சமூகம் ஆச்சரியத்துடன் வேடிக்கை பார்த்த நிலை, இன்று இல்லை. மற்றும் கடைகளில் தொங்கும் அரை குறை ஆடையுடன் படங்களை பார்ப்பதில் அதிர்ச்சியில்லை. பெண் என்பவளை, வெறும் பிள்ளைப் பெறும் இயந்திர மாக கருதி நடத்திய காலம் மாறியிருக்கிறது.

---

பட்டு சேலைகள், வெள்ளி நகைகள், பித்தளை, தங்கம் போன்றவற்றைப் பெண்கள் முன்னிலையில் குவித்தால் அவர்களின் முதல் தெரிவு தங்கமாகத்தான் இருக்கும்.

அந்தக் காலத்தில் நகைகள் அணிந்தமைக்கு, உடல் உஷ்ணம் குறைவு, மூக்கில் தங்கம் அணிந்தால் கண்பார்வைக்கு நல்லது போன்ற காரணங்கள் முன்வைக்கப்பட்டன.

ஆனால், இன்றைய காலத்தில் தங்கம் அணிவது என்பது அழகு மற்றும் ஆடம்பரத்துக்கானதாக மட்டும் என்ற நிலை வந்துவிட்டது.

பணத்துக்கு மனிதன் எவ்வளவு மரியாதை கொடுக்கிறானோ, அதே மரியாதையைத்தான் மனிதன் தங்கத்துக்கும் கொடுக்கிறான்.

அப்படியிருக்கையில், அந்தத் தங்கத்தை வைத்து பல்வேறு அணிகலன்கள் செய்து கழுத்து மற்றும் கைகளில் மாட்டிக்கொண்டால் பரவாயில்லை.

ஆனால், அதனைக் காலில் அணிந்து கொள்கிறார்கள். அது சரி பணம் இருக்கிறவன் காலில் போட்டு மிதிக்கத்தான் செய்வான். ஆனால் அறிவியல் ரீதியாக காலில் தங்கம் அணிந்தால் வாத நோய்கள் வரும் எனக் கூறப்படுகிறது.

தங்கம் லஷ்மிதேவியின் அம்சம். தங்கத்தால் செய்த கொலுசு, மெட்டி போன்றவற்றை காலில் போடுவது தவறு என்று சாஸ்திரம் கூறுகிறது.

லஷ்மியைப் போன்று பார்க்கும் காரணத்தால் தான் தங்கத்தைக் காலில் அணிவதற்கு அன்றைய காலத்து மக்கள் விரும்பவில்லை. தங்கத்தை காலில் அணிந்தால் செல்வம் குறைந்து விடும் என்று கூறப்படுகிறது.

தங்கத்தை நம் உடலில் ஒவ்வொரு பகுதியிலும் வைக்கும் போது உடல் சில தன்மைகளைப் பெறுகிறது.

காதில் தங்கம் இருந்தால் கழுத்து நரம்பு வலுவாக இருக்கும். மோதிர விரலில் தங்கம் இருந்தால் கருப்பையும், விந்தும் வலுவடையும்.

ஆனால், காலில் தங்கம் இருந்தால் வாத நரம்புகள் தூண்டிவிடப்பட்டு உடலில் வீக்கமும் வலியும் ஏற்படும் என்று மருத்துவ சாஸ்திரம் கூறுகிறது.

அதனால்தான் நம் முன்னோர்கள் வாதத்தைக் கட்டுப்படுத்திச் சமமாக வைக்கும் வெள்ளியை காலில் அணிந்து வந்தார்கள்.

இதுவே, காலில் தங்கம் அணியாததன் இரகசியம்.

# பெண்கள் காலில் தங்கம் அணியலாமா?



---

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் பேச்சு தேவைதான். அதற்காக எப் போதும், எங்கும், எல்லா வற்றிலும் பேச்சு தேவை தானா என்பதை யோசியுங்கள்.

முதலில் இந்த விடயத்தில் பெண்கள் கவனமாகவும் நிதானமாகவும் இருக்க வேண்டும்.

ஒரு சில பெண்களைக் கண்டால் பயம் ஏற்படுவது போல் உணர்வு ஏற்படும். அவள் வந்தாலே பெரும் தொல்லை. நாம் நைசாக நகர்ந்து விட வேண்டியது தான் என்று மற்றவர்கள் சொல்லும் அளவுக்கு சில பெண்கள் பேசிக் கொண்டே இருப்பார்கள்.



# பெண்கள் பேச்சை குறையுங்கள் பாதிப் பிரச்சினை தீர்ந்துவிடும்...

பிறரைப் பற்றி ஏளனமாக பேசுதல், கோள் சொல்லுதல், எதற்கெடுத்தாலும் குறை சொல்லுதல், இடக்குமுடக்காக பேசுதல் ஆகியவற்றால் தான் ஒருவருடைய மனம் அவரின் போக்கிலிருந்து மாறுகிறது. இவ்வாறான பேச்சுக்கள் உடலில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை எவருமே தெரிந்து கொள்வதில்லை.

அதிகமாக பேசினால் நம்முடைய உடலின் சக்தி குறைந்து விடும்.

ஆனால் பேச வேண்டிய நேரத்தில் பேசவேண்டும். அதுவும் சுருக்கமாக பேச வேண்டும். நீங்கள் பேசியதையே திரும்பத் திரும்பப் பேசக்கூடாது. இதனால் எதிரில் இருப்பவர் உங்கள் பேச்சைக் கேட்க விரும்பமாட்டார். இதனால் உங்கள் உடலின் சக்தி தான் வீணாகிப் போய் விடும்.

பிறரைப் பற்றி ஏளனமாக பேசுதல், கோள் சொல்லுதல், எதற்கெடுத்தாலும் குறை சொல்லுதல், இடக்குமுடக்காக பேசுதல் ஆகியவற்றால் தான் ஒருவருடைய மனம் அவரின் போக்கிலிருந்து மாறுகிறது.

இவ்வாறான பேச்சுக்கள் உடலில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை யாரும் தெரிந்து கொள்வதில்லை.


எனவே, இந்தத் தீய பழக்கங்களை விட்டு விடுவதை பற்றிச் சிந்திக்க வேண்டும். பேச்சு என்பது நம்மை மீறிய ஒரு செயலாக உள்ளது. கடுமையான வார்த்தைகள் நம்மை அறியாமலேயே நம்மிடமிருந்து வெளிவருகின்றன.

பேசிய பிறகுதான் அவ்வளவு கடுமையாக பேசியிருக்க வேண்டியதில்லை என்று தோன்றும்.

“தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவி னால் சுட்ட வடு'' என்ற திருக்குறளின் வாசகம் இந்தக் குறள் புத்தகத்தோடு போய்விடுகிறது. எவரும் கடைபிடிப்பதாகத் தெரியவில்லை. இனி கடுமையான வார்த்தைகளால் யாரையும் பேசுவதில்லை என்று தீர்க்கமாக, திடமாக, உறுதியாக முடிவெடுக்க வேண்டும். அதை நடைமுறையில் தினமும் பயன்படுத்தவேண்டும்.



# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




41

## பெங்களூர் பேச்சுக்கள்

கிழக்கு மாகாணத்தின் விவரமான வரைபடம் ஒன்றை எமக்கு முன்பாக விரித்து, கிழக்கு மாகாணத்தை முக்கூறு போடும் ஜெயவர்த்தனாவின் 'புதிய திட்டம்' பற்றி எமக்கு விவரமாக விளக்கிக் கொண்டிருந்தார் டிக்சிட். இந்தத் திட்டம் வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழர்களை இறுதியாக ஒன்றிணைக்க வழி வகுக்கும் என்று கூறிய அவர், இதுவொரு தற்காலிக ஒழுங்கு என்றும் இந்தத் திட்டம் பற்றித் தொடர்ந்து பேச்சுகளை நடத்தி முன்னேற்றம் காணலாம் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். நள்ளிரவு முழுவதும் ஜெயவர்த்தனாவின் திட்டத்தை அக்கு வேறு ஆணிவேறாக விளங்கப்படுத்தி, எமது பொறுமையைக் கொலை செய்து விட்டுக், களைத்துப் போய்க் கடுப்புடன் இருந்த பிரபாகரனைப் பார்த்து அந்தத் திட்டம் பற்றி அவரது கருத்தைக் கேட்டார் டிக்சிட். நான் எதிர்பார்த்தமை போலவே வெடுக்கென்று, சுருக்கமாகப் பதிலளித்தார் பிரபாகரன். அவரது தொனியில் ஆத்திரம் தெறித்தது. ''தமிழர் தாயகம் என்பது ஒன்றுதான். அதனைப் பிரிக்க முடியாது. ஜெயவர்த்தனா அதைப் பிரித்துக் கூறுபோட நாம் அனுமதிக்கப் போவதில்லை.'' என்று உறுதிபடச் சொன்னார். பிரபாகரனின் அந்த வசனத்தை நான் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கூறிய பொழுது டிக்சிட்டின் முகம் சுருங்கியது. ஜெயவர்த்தனாவின் திட்டத்திலுள்ள குறைபாடுகளையும் ஆபத்துக்களையும் நான் டிக்சிட்டுக்கு விளக்கிக் கூறினேன். விடுதலைப் புலிகளின் தலைமையோ அன்றித் தமிழீழ மக்களோ இந்தத் திட்டத்தை ஒருபொழுதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பதைத் தெட்டத் தெளிவாக அவரிடம் எடுத்துரைத்தேன். தனது நிலைப்பாட்டிலிருந்து பிரபாகரன் சிறிதளவும் விட்டுக் கொடுக்க மாட்டார் என்பதை நன்கு உணர்ந்த இந்தியத் தூதுவர், தனது முயற்சியைக் கைவிட்டு, வெளியுறவுச் செயலர் வெங்கடேஸ்வரனை எம்முடன் பேசுமாறு அழைத்தார்.

நாம் மிகவும் சோர்ந்துபோய் சினத்துடன் இருப்பதை அவதானித்த வெங்கடேஸ்வரன் எம்முடன் மிகவும் அன்பாகவும் பண்பாகவும் தமிழில் பேசினார். ஜெயவர்த்தனாவின் திட்டம் தொடர்பாக நாம் கொண்டுள்ள நிலைப்பாட்டை டிக்சிட் தமக்கு எடுத்துக் கூறினார் எனச் சொன்னார். அந்தத் திட்டத்தைத் திரும்பவும் விவரித்து விளக்க அவர் முனையவில்லை. தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைபற்றி ராஜீவ்காந்தி ஆழமான கவலை கொண்டிருக்கிறார் என்று தனது உரையாடலை ஆரம்பித்த வெங்கடேஸ்வரன், இனப் பிரச்சினைக்கு நியாயமான ஒரு தீர்வைக் காண்பதில் இந்தியப் பிரதமர் நேர்மையாக அக்கறை கொண்டிருக்கிறார் எனத் தெரிவித்தார். தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு ஜெயவர்த்தனாவை இணங்கவைக்க முடியுமென ராஜீவ் காந்தி நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். ஜெயவர்த்தனா அரசு முன்வைத்துள்ள திட்டம் தமிழ்மொழி வாரியான தாயகப் பிரதேசக் கோரிக்கையை ஒருமட்டத்துக்கு நிறைவு செய்ய முனைவதாகக் கூறிய வெங்கடேஸ்வரன், இதனை ஓர் இடைக் காலத் தீர்வாக நாம் கருத வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். இந்த இடைக்காலத் தீர்வை நாம் ஏற்றுக் கொண்டால், ராஜீவ்காந்திக்கு அது பெரும் இராஜதந்திர சாதனையாக அமையும் என்றும் சொன்னார். இந்த சார்க் உச்சி மாநாடு இந்தியப் பிரதமருக்கு ஒரு வெற்றிகரமான அரங்காக மாறுவதற்கு நாம் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். முடிவில், நாம் எமது நிலைப்பாட்டை மறு பரிசீலனை செய்து ஆக்கபூர்வமான முடிவை எடுக்கும்படியும் வேண்டினார். பிரபாகரனால் சினத்தை அடக்க முடியவில்லை. அது சொற்களாகச் சீறியது. ''ராஜீவ்காந்தியைத் திருப்திப்படுத்தி அவரது புகழை ஓங்கச் செய்வதற்காக எமது மக்களின் அரசியல் இலட்சியத்தைக் கைவிடச் சொல்கிறீர்களா?'' பிரபாகரனின் சீற்றத்தால் வெங்கடேஸ்வரன் ஆடிப்போனார். எமது உணர்ச்சியைத் தம்மால் புரிந்து கொள்ளமுடிகிறது எனச் சமாதானம் கூறிச் சமாளித்தார். அங்கிருந்து வெங்கடேஸ்வரன் நழுவிச் சென்றமையை அடுத்து, நட்வார் சிங் எம்மை அணுகினார். அவர் பேச்சைத் தொடங்குவதற்கு முன்னரே நான் குறுக்கிட்டு, சிறிலங்கா அரசின் திட்டத்திலுள்ள குறைபாடுகளை எடுத்து விளக்கி,

> *எம்.ஜி.ஆரின் மதிநுட்பமான மூளை, ஜெயவர்த்தனாவின் சதித் திட்டத்தை உடனடியாவே கிரகித்துக் கொண்டது. அந்தத் திட்டத்திலுள்ள எதிர்மறை அம்சங்களை இந்திய மத்திய அரசும், குறிப்பாக ராஜீவ்காந்தியும் புரிந்து கொள்ளாததையிட்டு அவர் ஆச்சரியப்பட்டார். எமது நிலைப்பாடு நியாயமானது , யதார்த்தமானது எனக் கூறிய எம்.ஜி.ஆர் , இவ்விவகாரத்தில் எமது விருப்புக்கு மாறாகத் தான் தலையிடப் போவதில்லை என உறுதியளித்தார். அத்துடன் பெங்களூர் பேச்சுக்கள் முடிவுக்கு வந்தன.*

அந்த யோசனையை எமது இயக்கமும் எமது மக்களும் ஒருபோழும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என உறுதிபடக் கூறினேன். நட்வார் சிங் ஒரு வித்தியாசமான மனிதர். மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளிப்பவர். நான் கூறிய கருத்துக்களை அவர் பொறுமையாகக் கேட்டார். எமது நிலைப்பாட்டின் நியாயப்பாட்டைத் தன்னால் புரிந்து கொள்ளமுடிகிறது என்றார். ஜெயவர்த்தனாவின் யோசனையை ஏற்றுக் கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொள்ளவில்லை. மூளைக்கு வதையாக அமைந்த இந்த நீண்ட பேச்சுகள் ஒருவாறு முடிவுக்கு வர அதிகாலை நான்கு மணி ஆகிவிட்டது. அதன் பின்னர் எமது அறைகளுக்குச் சென்று ஓய்வு எடுக்க அனுமதி கிடைத்தது.

ஜெயவர்த்தனாவின் யோசனையை நாம் மிகவும் வன்மையாக எதிர்த்து நின்ற போதும் ராஜீவ்காந்தி இலகுவில் விட்டுக்கொடுப்பது போலத் தெரியவில்லை. அத்திட்டத்தை எப்படியாவது எம்மீது திணித்துவிட வேண்டும் என்பதில் அவர் விடாப்பிடியாக நின்றார்.



எம்மை இணங்க வைக்கும் இறுதி ஆயுதமாகத் தமிழக முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரன் பெங்களூருக்கு அழைக்கப்பட்டார். எம்.ஜி.ஆருக்கும் பிரபாகரனுக்கும் மத்தியிலான நெருங்கிய நட்புறவைப் பயன்படுத்திப் புலிகளின் தலைவரைப் பணிய வைக்கலாம் என ராஜீவ்காந்தி எண்ணினார் போலும்.

மறுநாள் மாலை பெங்களூரிலுள்ள ராஜ்பவான் மாளிகையில் தமிழக முதல்வரை நாம் சந்தித்தோம். முதல்வருக்கு உதவியாக , தமிழ்நாடு உணவு அமைச்சர் பண்டுருட்டி இராமச்சந் திரனும் அங்கிருந்தார். சிங்கள அரசு முன்வைத்துள்ள யோசனைத்திட்டத்தில் அடங்கியுள்ள பாரதூரமான எதிர்மறை அம்சங்களை நாம் எம்.ஜி.ஆருக்குத் தெளிவாக எடுத்து விளக்கினோம். தமிழ் மொழி வாரியான தமிழ்த் தாயகமாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இணைக்கப்பட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் நீண்ட காலக் கோரிக்கை. இந்தக் கோரிக்கைக்கு முற்றிலும் மாறாக, கிழக்கு மாகாணத்தை இனரீதியாகவும், மதரீதியாகவும் முக்கூறு போடும் நாசகாரத் திட்டமொன்றை ஜெயவர்த்தனா முன்வைத்திருக்கிறார். இத்திட்டத்தை ஏற்றுக் கொள்ளுமாறு ராஜீவ் அரசு எமக்கு அழுத்தம் போடுகிறது. இத்திட்டம் ஏற்றுக் கொள்ளப் பட்டால் தமிழ்த் தாயக நிலம் பிளவடைந்து சிதைந்து போகும். அத்துடன் தமிழ் , முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான பெருநிலப்பரப்புகள் சிங்களவர்களுக்கு உரித்தாகிவிடும். இதனாலேயே இந்த எல்லை வரையறுப்புத் திட்டத்தை நாம் வன்மையாக எதிர்க்கிறோம் எனத் தமிழகத் தலைவர்களுக்கு விரிவாகத் தெளிவாக எடுத்து விளக்கினோம்.

எம்.ஜி.ஆரின் மதிநுட்பமான மூளை, ஜெயவர்த்தனாவின் சதித் திட்டத்தை உடனடியாவே கிரகித்துக் கொண்டது. அந்தத் திட்டத்திலுள்ள எதிர்மறை அம்சங்களை இந்திய மத்திய அரசும், குறிப்பாக ராஜீவ்காந்தியும் புரிந்து கொள்ளாமையையிட்டு அவர் ஆச்சரியப்பட்டார். எமது நிலைப்பாடு நியாயமானது , யதார்த்தமானது எனக் கூறிய எம்.ஜி.ஆர் , இவ்விவகாரத்தில் எமது விருப்புக்கு மாறாகத் தான் தலையிடப் போவதில்லை என உறுதியளித்தார். அத்துடன் பெங்களூர் பேச்சுக்கள் முடிவுக்கு வந்தன.

தமிழரின் நலனிலும், அரசியல் இலட்சியத்திலும் பற்றுறுதி கொண்ட புலிகளின் தலைவனை எந்த வழியிலும் மடக்கிவிட முடியாது என உணர்ந்து கொண்ட இந்திய ஆட்சியாளர்கள் இறுதியில் எம்மைச் சென்னைக்குத் திரும்ப அனுமதித்தார்கள். ஆயினும் , புலிகளின் தலைமை மீது இந்திய அரசுக்கு ஆத்திரமும் அதிருப்தியும் ஏற்படவே செய்தது. பெங்களூர் சார்க் மாநாட்டில் , இலங்கைப் பிரச்சினை தொடர்பாக ஒரு ராஜதந்திர சாதனையைப் பறைசாற்றலாம் எனக் கனவு கண்ட ராஜீவ்காந்திக்கு மீண்டும் இந்திய மத்தியஸ்துவ முயற்சி பின்னடைவு கண்டது பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. அத்தோடு சார்க் உச்சி மாநாட்டில் இந்திய அரசை வன்மையாகக் கண்டித்து ஜெயவர்த்தனா ஆற்றிய உரை ராஜீவை மேலும் சினத்துக்கு ஆளாக்கியது. சமாதான சகவாழ்வு, அயல்நாடுகளில் தலையிடாக் கொள்கை போன்ற சார்க் நாடு களின் இலட்சியங்களை மீறி 'தமிழ்ப் பயங்கரவாதத்துக்கு' இரகசிய உதவிகளை வழங்கி வருவதாக இந்தியா மீது ஜெயவர்த்தனா குற்றம் சுமத்தினார். உலக அரங்கில் பகிரங்கமாகப் பழிசுமத்தப் பட்டது இந்திய அரசுக்கு அவமானத்தை ஏற்படுத்தியது. இதற்காக இந்திய அரசு ஜெயவர்த்தனா வைப் பகைத்துக் கொள்ளவில்லை. இந்த அவமானமும் அவமதிப்பும் ஆத்திரமாக வடிவெடுத்து விடுதலைப் புலிகள் மீது திரும்பியது. இந்தியாவின் நல்லாதரவு தொடர்ந்தும் நீடிக்காது என்பதை உணர்த்த பிரபாகரனுக்குத் தனது ஆழ்ந்த அதிருப்தியைத் தெரிவிக்க ராஜீவ் அரசு முடிவெடுத்தது. நாங்கள் பெங்களூரிலிருந்து சென்னைக்குத் திரும்பிய ஒரு சில நாள்களில் ஆத்திரமூட்டும் அச்சம்பவம் நிகழ்ந்தது.

(தொடரும்...)

துர்முகிவருஷம் 2017 ஆம் ஆண்டு தைத் திங்கள் 16ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை

துவிதியை: பி.இ.5.25 வரை. பின் திரிதியை.அவிட்டம் இரவு 11.03 வரை. பின்சதயம். மரணயோகம் இரவு 11.03 வரை. பின்சுபயோகம்.

ராகு காலம்-பி.ப.4.45 - 6.13 வரை.
சுபநேரம்- மு.ப. 9.36 - 11.06 வரை.

திவசம் செய்ய வேண்டிய திதி : தைமாத வளர்பிறை துவிதியை.

சந்திராட்டம நாள்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இந்நாளில் சுபகருமங்கள் மேற்கொள்வதைத் தவிர்க்கவும்.

கணிப்பு: ஜோதிடமணி பிரம்மஸ்ரீ. சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி



**மேடம் :** இவ்வாரம் நன்மையான வாரம். பணவசதி தாராளமாக இருக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்துக் கொண்டிருந்த பதவி உயர்வு கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் அதிக ஊக்கமும், சுறுசுறுப்பும் உண்டாகும். பெண்கள் சுயதொழில் முன்னேற்றமடைவார்கள்.



**இடபம் :** இவ்வாரம் மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். அலுவலகத்தில் பொறுப்புக்கள் அதிகமாவதால், பணிகளைக் குறிப்பிட்ட காலத்தில் செய்து முடிக்க இயலாத சூழ்நிலை உண்டாகும். செய்யும் செயல்களில் தடைகள் உண்டாகும்.



**மிதுனம் :** இவ்வாரம் யோகமான பலன்கள் காணப்படுகின்றன. பணவரவுகள் அதிகமாகும். நீண்டகாலக் கடன்கள் அடைபடும். தாய் வழி உறவுகள் மூலம் பெண்களுக்கு பணம் வந்துசேரும். வேலைக்குப் போகும் பெண்களுக்கு பணவரவுகள் அதிகரிக்கும்.



**கடகம் :** இவ்வாரம் கவலையான வாரம் ஆகும். எடுக்கும் முயற்சிகள் தோல்வியடையும். பணவரவு குறையும். தொழிலில் வேலைச் சுமை அதிகரிக்கும். மாணவர்கள் தேர்வில் தோல்வியடைவார்கள். தொழிலில் போட்ட முதலீடுகள் நட்டம் உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் பிரச்சினைகள் உண்டாகும்.



**சிங்கம் :** இவ்வாரம் சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமையும், அலைச்சலும் அதிகரிக்கும். பொறுமையைக் காப்பது நன்று. நம்பியவர்கள்கூட ஏமாற்றப்பார்ப்பார்கள். ஆதலால் எதிலும் கவனம் தேவை.



**கன்னி :** இவ்வாரம் உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வேலைக்குப் போகும் பெண்களுக்கு அலுவலகம் மூலம் பணவரவுகளும், பதவி உயர்வும் கிடைக்கும். செயல்களில் வெற்றி உண்டாகும். தொழிலில் இருந்த சிரமங்கள் நீங்கும். போட்டிகளை இவர்கள் சாமர்த்தியத்தில் முறியடிப்பார்கள். கொடுக்கல், வாங்கலில் புரிந்துணர்வு அதிகரிக்கும்.



**துலாம் :** இவ்வாரம் இன்பமான வாரம் ஆகும். பணம் தாராளமாகப் புழங்கும். உத்தியோகத்தர் விரும்பிய இடத்துக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வுகளுடன் மாற்றம்கிடைக்கும். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் ஒன்றுசேர வாய்ப்புள்ளது. நீண்டகாலமாக வராமல் இருந்த உறவினர்கள் வீடுதேடி வருவார்கள். வழக்குகள் வெற்றிகரமாக முடியும்.



**விருச்சிகம் :** இவ்வாரம் அலைச்சல் மிகுந்த வாரம் ஆகும். தொழில் விஷயமாய் வெளியூர்களுக்கு அலையவேண்டிவரும். சிலர் வேலைதேடி அலைவார்கள். சுயதொழில் தொடர்பாகத் தொடங்க எண்ணும் பெண்கள் வங்கிகளின் உதவியை நாடுவார்கள். மாணவர்கள் உயர்கல்வி கற்க வெளிநாடு செல்ல விரும்பி முகவர்களை நாடுவார்கள்.



**தனுசு :** இவ்வாரம் மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். தடைப்பட்டிருந்த திருமணங்கள் தீவிர முயற்சியின் பேரில் நடைபெறும். பயணங்களில் பாதுகாப்பு இல்லாமல் பொருள்களை இழக்கும் நிலை ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை. பிறர்விவகாரங்களில் தலையிடுதலைத் தவிர்க்கவும்.




**மகரம் :** இவ்வாரம் மேன்மையான வாரம். பணவரவுகள் தடையில்லாமல் வந்து சேரும். செய்யும் பணிகளில் முன்னேற்றமும், செயல்களுக்கு வெற்றியும் ஏற்படும். எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்கும்படியாக வியாபாரம் சிறப்பாக நடைபெறும். இதுவரை பிரிந்திருந்தவர்கள் ஒன்றுசேர்வார்கள். திருமணகாரியங்கள் விரைவாக நடந்தேறும்.



**கும்பம் :** இவ்வாரம் அதிஷ்டமான வாரம். தனலாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வுடன் அதிகாரத்துடன் நிர்வாகம் செய்யும் சூழல் உண்டாகும். செல்வாக்கு அதிகரிக்கும். படித்து முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி உண்டாகும்.



**மீனம்:** இவ்வாரம் துன்பமான வாரம். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் அமைதி குறையும். செய்தொழில் விருத்தி குன்றும். நெருங்கிய உறவினர்களைப் பிரிய நேரிடும். செய்யும் செயல்களில் பாதிப்பு ஏற்படும். எதிரிகளின் கை ஓங்கும். பயணத்தின் போது உடைமைகளில் கவனம் தேவை.



வீணாகான குருபீடத்தின் தலைவரான சபா வாசுதேவக் குருக்களின் முயற்சியில் இந்துக்களின் விஷேட திருநாள்கள் - 2017 கலண்டர் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் தூதரகத்தில் நடைபெற்றது.

இந்தியத் துணைத்தூதர் ஆர். நடராஜன் இந்துக்களின் விஷேட திருநாள்கள் - 2017 கலண்டரை வெளியிட்டு வைத்தார். முதற்பிரதியை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி உப அதிபர் லயன் ஜெயச் சந்திரமூர்த்தி றஜீவன் பெற்றுக் கொண்டார். (ஐ-54)



திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் 2016 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கொழும்பு பல்கலைக்கழகத்தின் கட்புல, ஆற்றுகைக் கலைகள் பட்டப்படிப்புக்கள் கற்கைநெறியின் பீடாதிபதி பேரசிரியர் சரத் சந்திரஜீவா கலைத் துறைக்கு ஆற்றிவரும் பங்களிப்புக்களைக் கௌரவித்துத் திரு மறைக் கலாமன்றத்தால் "கலைஞான சிரோமணி" என்னும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இந்த விருதை மன்றத்தின் நிர்வாக இயக்குநர் அருட்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகளார் வழங்கினார்.

கலைத்தூது அழகியல் கல்லூரியால் 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஓவியக்கூடத்தில் நடத்தப்பட்டு வரும் மணல் சிற்ப பயிற்சிநெறியை பேராசிரியர் சரத் சந்திரஜீவாவும் அவரது குழுவினருமே வழிநடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கையில் பாரதி...

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியையும் 'மகாகவி பாரதியும் சோவியத் ஜனனமும்' என்ற கட்டுரை பதிவுசெய்துள்ளது.

1966 முதல் மல்லிகையில் பாரதியியல் ஆக்கங்கள் ஏராளமாக வெளியாகியிருக்கின்றன. இலங்கை படைப்பாளிகள் மட்டுமன்றி தமிழகத்தவர்களும் அதில் அடிக்கடி பாரதி பற்றி எழுதியுள்ளனர்.

பாரதி நூற்றாண்டுகாலத்தில் மட்டுமல்லாது அதற்கு முன்பிருந்தே தொடர்ச்சியாக பாரதியின் சிந்தனைகளுக்கும் அவை தொடர்பான வாதப்பிரதிவாதங்களுக்கும் மல்லிகை கனதியான களம் வழங்கி வந்திருக்கிறது.

பாரதி நூற்றாண்டு வரவிருக்கும் செய்தியை 1981 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு மல்லிகை இதழ்களிலும் குறிப்புகளாக வெளியிட்டு, எம்மவர்களை அதனை நோக்கிச் சிந்தித்து எழுதுவதற்கும் இயங்குவதற்கும் வழிகாட்டியிருக்கிறது மல்லிகை.

பாரதி நூற்றாண்டை முன்னிட்டு நாம் செய்யவேண்டியது என்ன என்பது பற்றி பேரசிரியர் கைலாசபதியும் பயனுள்ள கட்டுரை எழுதியிருந்தமையுடன், தமிழகம் செய்யத் தவறிய விடயங்களையும் (பிறிதோர் கட்டுரையில்) குறிப்பிட்டிருந்தார்.

'சிங்களத்தீவினுக்கோர் பாலம் அமைப்போம்' என்று பாரதி வர்ணித்த தேசத்தில் இனமுறுகல் தோன்றி - விடுதலைப்போராட்டம் எழுச்சியுறத் தொடங்கியிருந்த கால கட்டத்தில், மல்லிகையில் வெளிவந்த கைலாசபதியின் கட்டுரைகளில்


'இலங்கையிலும் இந்தியாவிலும் பாரதிக்காக என்ன நடந்தது...??? என்ன நடக்கவில்லை !!!' என்ற கருத்தியலே தொனிப்பொருள்.

அடுத்த அங்கத்தில் அந்தத் தொனிப்பொருளின் உள்ளடக்கம் தொடர்பாகப் பார்ப்போம்.

(தொடரும்)

காலைக்கதிர் Kalaikkathir





# தனித்துவமான நீரியல் கொள்கை வடக்கு மாகாணத்துக்கு அவசியம்

## நேற்றைய ஆய்வரங்கு நிகழ்வில் முதலமைச்சர்

வடக்கு மாகாணம் பல விதங்களிலும் மற்றைய மாகாணங்களில் இருந்து வேறுபட்டது. இந்த நிலையில் வடக்கு மாகாணத்துக்குத் தனித்துவமான நீரியல் கொள்கை அவசியம்.

-இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

வடமாகாணத்தின் நீர் வளத்தை மீட்டெடுத்தல், பாதுகாத்தல், பங்கிடுதல், முகாமை செய்தல் எனும் விடயப் பரப்புக்களை உள்ளடக்கியதாக வட மாகாணத்துக்குப் பொருத்தமான ஒரு நீரியல் கொள்கையை வகுப்பதற்கான சர்வதேச மற்றும் உள்ளூர் நிபுணர்கள் கலந்து கொள்ளும் ஆய்வரங்கு நேற்று யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது மாகாணம் பல விதங்களிலும் மற்றைய மாகாணங்களில் இருந்து வேறுபட்டது. நதிகள் அற்ற ஆனால் நற்குளங்களையும் கிணறுகளையும் கொண்டதொரு பிரதேசம். எனவே, தனித்துவமான ஒரு நீரியல் கொள்கை எமக்கு அவசியமாகின்றது. கொழும்பில் அல்லது மற்றைய மாகாணங்களில் வகுக்கப்படும் கொள்கை எமக்கு ஏற்புடையதாகும் என்று கூறமுடியாது. அதனால்தான் எமது அறிவுசால் உள்ளூர், சர்வதேச நிபுணத்துவப் பெருமக்களை அழைத்து எமக்கென நீரியல் கொள்கை ஒன்றை வகுக்க முற்பட்டுள்ளோம்.

முதலில் கொள்கை என்றால் என்ன என்பதை அறிந்து கொள்வோம். கலந்துரையாடலின் பின்னர் ஏதேனும் ஒரு துறை பற்றி அரசியல் உயர் மட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களே கொள்கைக்கு அத்திபாரமாகின்றன. ஒரு குறிப்பிட்ட துறையில் எதனை, ஏன், எவ்வாறு செய்ய வேண்டும் என்று முடிவெடுப்பதே மேற்படி தீர்மானங்கள். மேலெழுந்தவாரியாக நாட்டுக்கென ஒரு பொருளாதாரக் கொள்கையை வகுக்கலாம். அதே நேரத்தில் நாட்டின் ஒவ்வொரு துறை சம்பந்தமாகவும் வகுக்கலாம். அதே போன்று மாகாண ரீதியாகவும் வகுக்கலாம். எவ்வாறு ஒரு துறை சம்பந்தமாக அபிவிருத்தி நடைபெறவேண்டும், சுற்றுச்சூழல் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும் போன்ற அனைத்தினதும் வடிவமைப்பு கொள்கையினுள் அடங்கும்.

மத்திய அல்லது மாகாண அரசு கொள்கையை வகுத்த பின் அதனை நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாடு அந்தந்த அரச, மாகாண திணைக்களங்களுக்கு உண்டு.

ஆனால், சில நேரங்களில் கொள்கைக்கும் சட்டத்துக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படலாம். ஆகவே, நாங்கள் கொள்கை வகுத்தலில் ஈடுபடும் போது சட்டத்தையும் கருத்தில் கொண்டு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சில தடவைகளில் சட்டத்தை மாற்ற வேண்டியிருக்கும். சில வேளைகளில் கொள்கையை மாற்ற வேண்டிவரும்.

ஒரு நாட்டின் அல்லது மாகாணத்தின் அப்போதைய சமூக, அரசியல், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப நோக்குகளின் பிரதிபலிப்பாகவே கொள்கை இருக்கும். எனவே கொள்கைகளாவன, சமூக, அரசியல், பொருளாதார, தொழில்நுட்ப மாற்றங்களுக்கேற்ப நாளடைவில் மாற்றமடையக் கூடியன என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். உதாரணமாக ஆழக் கிண்டும் போர்க் (Bore) கிணறுகள் முன்னர் இருக்கவில்லை. ஆகவே, அவை பற்றி அப்போது கொள்கைகள் வகுக்கப்படவில்லை. தற்போது அவற்றை வகுப்பதுஅவசியமாகியுள்ளது.

65 ஆயிரம் பொருத்து வீடுகள் அந்தளவு ஃபோர்க் குழாய்க் கிணறுகளுடன் கட்டப்படும் என்றே அறிவிக்கப்பட்டது. அவற்றின் தாக்கங்கள் பாரதூரமானவை என்பதை நாம் அறிவோம். ஆனால் கொழும்பு அறிந்திருக்க அவசியமில்லை. ஆழக்கிண்டும் போர்க் குழாய்க் கிணறுகளுக்கும் எமது வழமையான கிணறுகளுக்கும் வேற்றுமைகள் பல உள்ளன. போர்க் கிணறுகள் ஆழ்நீரை அள்ளி வந்து ஆபத்தான பின்விளைவுகளை விளைவிக்கக் கூடியன. இவை எல்லாம் எமது கொள்கை வகுப்பின் போது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். நடைமுறையில் இருந்து வந்த கொள்கைகள் தேவையெனில் மாற்றப்பட வேண்டும்.

ஆகவே,தேவைகளுக்கேற்ற மாற்றத்தை உள்ளடக்காத கடுமையான கொள்கைகளும் கூற்றுக்களும், சதா மாற்றப்பட்டுவரும் கொள்கைகளும் பயனற்றவை என்றே கூற வேண்டும். கொள்கைகள் நெகிழத்தக்கனவாகவும் இருக்க வேண்டும். திட்டமிடுதலுக்கும் அபிவிருத்திக்கும் உறுதியான அடிப்படையாகவும் அவை அமைய வேண்டும்:

தொழில் நிபுணத்துவத்தின் அடிப்படையில் கொள்கைகள் வகுக்கப்பட்டாலும் அவற்றை நடைமுறைப்படுத்த அரசியல் விருப்பும் அவாவும் இருக்க வேண்டும். நடைமுறைப்படுத்த நிதி அவசியம்.

பொதுமக்கள் நிதியே இதற்காகப் பயன்படுத்தப்படப் போகின்றது. வங்கிக் கடன்களும் பொதுமக்கள் நிதியே. அவற்றை அவர்களே திருப்பி அடைக்கப் போகின்றார்கள்.

எனவே, அரசியல் ரீதியான ஒப்புதல் மிக அவசியமாக அமைகின்றது. சில தருணங்களில் நீரியல் முகாமைத்துவக் கொள்கைகள் நல்லனவாக அமைவன. ஆனால் அவை ஜனரஞ்சகம் பெறாதனவாக இருக்கக்கூடும். அப்போது அரசியல் ரீதியான தீர்மானங்களை மக்களின் அரசியல் பிரதிநிதிகளே எடுக்க வேண்டிவரும். ஆகவே, அரசியல் வாதிகள் கொள்கைகள் பற்றிய அறிவைப் பெற்றிருப்பது இன்றியமையாதது. அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களுக்கு அமைவாக கொள்கைகள் இருந்தால் அவற்றை நடைமுறைப்படுத்த அரசியல்வாதிகளுக்கு இலகுவாக இருக்கும்.

எனவே, 2013 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் கூடப் பரிசீலனைக்கு எடுக்கப்பட வேண்டும்.

கொள்கைகள் மக்கள் நலம் சார்ந்தனவாக அமைய வேண்டும். தனிப்பட்ட அரசியல் வாதிகளின் அடுத்த தேர்தலை மையமாக வைத்து வகுக்கப்படக் கூடாது.

எனவே, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் யாவரையும் உள்ளடக்கிய நோக்கு ஆகியன கொள்கைத் திட்ட வகுப்பின் போது உள்ளீர்க்கப்பட வேண்டும். அதாவது, முற்றான விவாதங்கள் நடைபெற்று வெவ்வேறு தேர்வுகள் அலசி ஆராயப்பட்டே கொள்கைகள் இயற்றப்பட வேண்டும்.

எமது அறிவுசால் பெருமக்கள் எங்கள் பொது மக்களைப் பற்றியும் அவர்களின் நல உரித்துக்களைப் பற்றியும் மட்டும் சிந்திக்க முனைவார்களேயானால் நாம் மிக நல்ல கொள்கைகளை வகுப்போம் என்பதில் எந்தவித சந்தேகமும் எழத் தேவையில்லை.

எங்கள் பாதிக்கப்பட்ட மக்கள் நலன் கருதி கருத்தாட முன் வந்தோமானால் தெளிவானகொள்கைவரைபொன்றை ஆக்குவதில் எமக்குச் சிரமம் இருக்கத் தேவையில்லை.

தெளிவான இலக்குகள், கால வரையறைகள், வெளிப்பாடுகள், சகல பங்குபற்றாளர்களுடனும் தொடர்பாடல் போன்றவற்றை உள்ளடக்கியே கொள்கைப் பிரகடனம் தயாரிக்கப்பட வேண்டும்.

இவை சம்பந்தமாக உலக வங்கி போன்ற சர்வதேச நிறுவனங்கள் உரிய வழிகாட்டு ஆவணங்களைத் தயாரித்துள்ளன.

கொள்கைகள் வகுப்பு திடீரென்று அவசரப்பட்டு ஆக்கப்படக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது. நிபுணர்களின் வழிகாட்டலின் கீழ் மக்களுடன், மக்கள் பிரதிநிதிகளுடன் அவை பற்றிப் போதியவாறு பேசி, கலந்தாலோசித்து முடிவெடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

வெறும் தொழில் ரீதியான மொழியில் கொள்கைகள் வகுக்கப்படாது என்றும் மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் அவை அமைய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. அவற்றை மக்களுக்கு எடுத்தியம்பும் விதத்தில் ஆவணத்தில் அழகும் வனப்பும் இருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. நீண்டிருக்காது சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதாய் அமைய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

கொள்கை ஆவணம் ஒன்று எவ்வாறு வரையப்படவேண்டும் என்பது பற்றியெல்லாம் கூறப்பட்டுள்ளன. உதாரணத்துக்கு செயல்சார்ந்த சுருக்க உரையொன்று முகவுரையின் பின்னர் அமைய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இவற்றை கொள்கை ஆவணம் தயாரிக்கப் போகும் நீங்கள் யாவரும் அறிந்து வைத்திருப்பது பயனளிக்கும்.

வடமாகாணத்தின் நீர் வளத்தை மீட்டெடுத்தல் பற்றியும், பாதுகாத்தல் பற்றியும், பங்கிடுவது பற்றியும் முகாமைத்துவம் செய்தல் பற்றியும் இந்த நிகழ்வில் ஆராய்வீர்கள். ஆனால், அதற்கு அப்பால் கொள்கைகள் என்றால் என்ன, கொள்கை ஆவணம் தயாரிக்கப்படும் போது எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பன பற்றியே நான் இதுவரை கூறியிருந்தேன்.

உங்கள் பரிசீலனையானது எமது பொருளாதாரம், கலாசாரம், மத அனுட்டானங்கள், போரின் பின்னரான சூழல் அனைத்தையும் மனதில் எடுத்து அதில் நீரின் பங்கு என்ன என்பதை ஆராய்வதாய் அமைய வேண்டும். எமது நீர்வளத்தை ஆராய்ந்து அவற்றின் சிறப்பியல்புகளை, குறைபாடுகளை கணக்கில் எடுக்க வேண்டும். எமது உணவுத் தேவைகளையும் அதில் நீரின் பங்கையும் ஆராய வேண்டும்.

தற்பொழுது நடைமுறையில் இருக்கும் நீர் சம்பந்தமான சட்டங்களை ஆராய வேண்டும். பல சர்வதேச உடன்படிக்கைகள் 1991 இல் கொப்பென்ஹேகனில் ஆக்கப்பட்ட உடன்படிக்கையின் பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அவை ஆராயப்பட வேண்டும். அவற்றில் பலவிதமான கருத்துக்கள் தரப்பட்டுள்ளன. நன்னீரின் தொகை அளவு வரைவெல்லைக்குட்பட்டது என்றும் பாதிக்கப்படக் கூடிய ஒரு வளம் என்றும் அது உயிரினங்களின் வாழ்வின் உயிர் நாடி என்றும் அபிவிருத்திக்கும் சூழலுக்கும் அது அத்தியாவசியம் என்றும் கூறப்பட்டுள்ளன. அதாவது, நீரானது குறிப்பிட்ட அளவே பாவனைக்குண்டு. அதுஎந்தளவு என்று கூட எம்மால் கணிக்க முடியும். அதை வைத்தே எமது பாவனைகள் பரிசீலிக்கப்பட வேண்டும்.

நீர் முகாமைத்துவமானது நிலப் பயன்பாட்டையும் நீர்ப் பயன்பாட்டையும் இணைத்துச் செயற்படவேண்டும். நீரின் தரம், தன்மை பற்றியெல்லாம் ஆராய்ந்து முடிவெடுக்கப்பட வேண்டும். சுன்னாகம் நீர் மாசுபடுதல் போன்றவை ஆராயப்பட்டு கழிவுப் பொருள்களின் வெளியேற்றல் பற்றியெல்லாம் இறுக்கமான தீர்மானங்களை நாங்கள் எடுக்க வேண்டும். இனியும் எமது நிலமும் நீரும் மாசுபடாதவாறு பாதுகாக்க வழிமுறைகளை நாங்கள் வகுத்துக் கொள்ள வேண்டும்.

நீருடன் தொடர்புடையதே சூழல். சூழலைச் சுத்தமாக வைத்திருத்தல் என்றாலேயே நீரை நன்னீராகப் பாதுகாத்து வைத்தல் என்று அர்த்தம் எனலாம். நீரைப் பாதுகாத்தல், சுத்தமாக வைத்திருத்தல், பங்கிடுதல், முகாமைசெய்தல் போன்ற அனைத்தும் உங்கள் பார்வைக்குள் கொண்டுவரப் பட்டுள்ளன.

நீரானது வறிய மக்களுக்கும் கிடைக்கும் விதத்தில் முகாமைத்துவப்படுத்த வேண்டும். நன்னீருக்கு ஒரு விலை வைப்பதால் அது யாவருடனும் பேசி முடிவெடுக்கப்படவேண்டும்.

நீர் முகாமைத்துவம் சம்பந்தமான கொள்கைகள் மற்றைய துறைகளின் கொள்கைகளுக்கு முரணானதாக அமைதல் ஆகாது. எனவே, காலத்துக்குக் காலம் சகல துறைகளிலும் கொள்கைகள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்.

கொள்கை வகுத்தலானது புரிந்துணர்ந்து செய்யப்பட வேண்டியதொன்று. பலவிதமான முரண்பட்ட கருத்துக்களையும் மனதில் எடுத்து அவற்றைக் கடந்து தீர்மானங்களை எடுக்க நீங்கள் யாவரும் முன்வரவேண்டும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் எளிதாக நடைமுறைப்படுத்தக் கூடியதாகஅமையவேண்டும். நீங்கள் யாவரும் சேர்ந்து எடுக்கும் முடிவுகள் மக்களுக்கு நல்லதோர் எதிர்காலத்தைக் கொடுக்க உதவட்டும்.-என்றார். (ஐ)

# எல்லை தொடர்பில் அமெரிக்காவுடன் மோதல்: மெக்சிக்கோவுக்கு அண்டை நாடுகள் நேசக்கரம்



லிமா, ஜன.29

எல்லைப் பகுதியில் தடுப்பு சுவர் கட்டும் விவகாரத்தில் அமெரிக்காவுடன் மோதல் போக்கைக் கடைபிடித்து வரும் மெக்சிக்கோவுக்கு ஆதரவாக அண்டை நாடுகளாக கொலம்பியாவும், பெருவும் நேசக்கரம் நீட்டியுள்ளன.

மெக்சிக்கோ நாட்டில் இருந்து ஆண்டுதோறும் ஏராளமானோர் சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேறுகின்றனர் என்று கூறப்படுகிறது. இதைத் தடுப்பதற்காக ஏற்கனவே அங்கு 670 மைல் தொலைவுக்குப் பல பகுதிகளிலும் தடுப்புச்சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ம்ப், அமெரிக்கா-மெக்சிக்கோ இடையிலான சுமார் 3200 கிலோமீற்றர் நீளமுள்ள எல்லைப் பகுதியில் தடுப்புச்சுவர் கட்டுவதற்கான நிர்வாக உத்தரவில் கையெழுத்திட்டார்.

அதுமட்டுமன்றி, இந்த தடுப்புச்சுவர் கட்டுவதற்கான பணத்தை மெக்சிக்கோ வழங்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஆனால், அதை மெக்சிக்கோ நிராகரித்து விட்டது. இது தொடர்பாக மெக்சிக்கோ ஜனாதிபதி என்ரிக் பெனா நீட்டோ கருத்துத் தெரிவிக்கையில், சுவர்களில் மெக்சிக்கோவுக்கு நம்பிக்கை இல்லை. நான் இதை பல முறை கூறிவிட்டேன். இந்த சுவருக்காக மெக்சிக்கோ எந்தப் பணமும் தராது என குறிப்பிட்டார். இதற்கிடையில், மெக்சிக்கோ ஜனாதிபதி நீட்டோ, நாளை மறுதினம் அமெ ரிக்க ஜனாதிபதியைச் சந்திக்க விருந்தார்.

இந்நிலையில், மெக்சிக்கோ ஜனாதிபதிக்கு பதிலடி கொடுக் கும் வகையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தடுப்புச் சுவர் கட்டுவதற்கு பணம் வழங்க விரும் பாவிட்டால், மெக்சிக்கோ ஜனாதிபதி தனது அமெரிக்கப் பயணத்தை ரத்து செய்வதே சிறப்பாக இருக்கும் எனக் காரசாரமான கருத்துக்களைத் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவு செய்துள்ளார்.

இதையடுத்து, தனது அமெரிக்க பயணத்தை இரத்து செய்துள்ளேன் என்று மெக்சிக்கோ ஜனாதிபதி பெனா நீட்டோ அறிவித்துள்ளார். இதுதொடர்பாக, தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்துப் பதிவிட்ட அவர், 'எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பை சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தை ரத்து செய்து விட்டேன் என்று வெள்ளை மாளிகைக்கு அறிவித்துள்ளேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா - மெக்சிக்கோ இடையில் மோதல்போக்கு அதிகரித்து வருவதால் மெக்சிகோ நாட்டின் பங்குச் சந்தை, வர்த்தகம் மற்றும் நாணய மதிப்பு வெகுவாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவுடனான மோதலால் மெக்சிக்கோ வீழ்ச்சி அடையாத வகையில் தடுப்பதற்காக அண்டை நாடுகளான கொலம்பியாவும், பெருவும் தற்போது நேசக்கரம் நீட்டியுள்ளன.

சிக்கலான நிலையைச் சந்தித்துவரும் மெக்சிக்கோவை மீட்பதற்காக பசுபிக் கூட்டமைப்பில் உள்ள லத்தின் அமெரிக்க வர்த்தக அமைப்பு உதவி செய்ய வேண்டும்.

மெக்சிக்கோவின் தயாரிப்பு பொருள்களை வர்த்தகம் செய்ய வசதியாக திறந்த நிலை வர்த்தகத்தை மேலும் இரு மடங்கு அதிகரிக்க அனுமதிக்க வேண்டும் என பெருநாட்டு ஜனாதிபதி பெட்ரோ பாப்லோ குக்ஸின்ஸ்கி குறிப்பிட் டுள்ளார்.

கொலம்பியா ஜனாதிபதி ஜுவான் மேனுவேல் சான்ட்டோஸ் அருகில் அமர்ந்து நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களுக்கு பேட்டி அளித்த பெட்ரோ பாப்லோ குக்ஸின்ஸ்கி,

''தற்போது நம்மில் ஒருவர் (மெக்சிக்கோ நாடு) நாம் செய்யாத ஒரு செயலுக்காக மிகத் தீவிரமான சிரமங்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

உலகளாவிய வர்த்தகத் துக்காக நாம் சில விலைகளை வழங்க வேண்டியுள்ளது. இதில் வேலை இழப்புகள் ஏற்படலாம். ஆனால், இதன் ஆதாயங்கள் மிகப் பெரியவையாகும். நமக்கு ஏராளமான நன்மைகளை தந்துள்ள உலகளாவிய வர்த்தகத்தைத் தக்க வைத்துக் கொள்ள நாம் நமது சித்தாந்தங்களில் ஒன்றுபட்டு நிற்க வேண்டியுள்ளது'' என்று தெரிவித்துள்ளார்.

வேகமாக வளர்ந்துவரும் ஆசியா- பசிபிக் பகுதியில் தங்கள் நாட்டு பொருள்களைச் சந்தைப்படுத்தத் தடைக் கல்லாக இருந்த இடையூறுகளை நீக்குவதற்காக பெரு, சிலி, கொலம்பியா, மெக்சிக்கோ ஆகிய நாடுகளை உள்ளடக்கிய பசுபிக் கூட்டமைப்பு கடந்த 2011 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



# மத்திய தரைக்கடலில் தத்தளித்த அகதிகள் ஆயிரம் பேர் மீட்பு!

ரோம், ஜன.29

மத்திய தரைக்கடலில் தத்தளித்த சுமார் ஆயிரம் வெளிநாட்டு அகதிகளை இத்தாலி கடலோரக் காவல் படையினர் மீட்டுள்ளனர்.

உள்நாட்டுப் போரால் நிலை குலைந்துள்ள ஈராக், சிரியா, லிபியா, ஆப்கானிஸ்தான்போன்ற நாடுகளில் இருந்தும், வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள ஆபிரிக்க நாடுகளில் இருந்தும் தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாகச் செல்கின்றனர்.

பல்வேறு நாடுகளுக்கு கடல் கடந்து செல்லும் இந்த அகதிகள், ரப்பர் படகுகள்போன்றவற்றில் பாதுகாப்பற்ற முறையில் பயணம் செய்கின்றனர்.

மத்திய தரைக்கடல் வழியாக இவ்வாறு அகதிகளை அளவுக்கு அதிகமாக ஏற்றிச் செல்லும் படகுகள், நடுக் கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி பலத்த உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தி வருகின்றமை தொடர்கதை ஆகிவருகிறது.

சமீப காலமாக ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ள மக்களின் எண்ணிக்கை மட்டும் சுமார் 21 லட்சத்தை எட்டியுள்ளது.

இந்நிலையில், இத்தாலிக்குள் நுழையும் நோக்கத்தில் மூன்று மரக்கலங்கள் மற்றும் ஆறு ரப்பர் படகுகளில் சென்ற சுமார் ஆயிரம் அகதிகளை இத்தாலி நாட்டு கடலோரக் காவல் படையினர் மற்றும் ஸ்பெயின் நாட்டு மனிதநேய பாதுகாப்பு அமைப்பினர் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர் என்று இத்தாலி ஊடகங்கள்செய்தி வெளியிட்டுள்ளன.

ஒரு படகில் சடலம் ஒன்றும் கண்டெடுக்கப் பட்டது என்றும் அந்தச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

# கென்ய வீரர் 57 பேரை நாம் கொன்று விட்டோம்!

## அல் ஷபாப் தீவிரவாதிகள் அறிவிப்பு



சோமாலியாவில் நிலைகொண்டுள்ள கென்யா இராணுவத்தின் ஒரு பகுதியினர்.

மொகாதிசு, ஜன.29

சோமாலியாவில் கென்ய படைவீரர்கள் 57 பேரைக் கொன்று குவித்துள்ளோம் என்று அல் ஷபாப் இயக்கத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்க நாடான சோமாலியாவில் அல்குவைதா தீவிரவாத இயக்கத்துடன் தொடர்புடைய அல் ஷபாப் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

இவர்கள் ஆபிரிக்க யூனியனின் அமிசோம் படைகள் மீது அவ்வப்போது தாக்குதல் நடத்துகின்றமையை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில், சோமாலியா-கென்யா எல்லை அருகே குல்பியோவ் நகரில் உள்ள இராணுவத்தளம் ஒன் றில் கென்ய படைவீரர்கள் 57 பேரைக் கொன்று குவித்துள்ளோம் என்று அல் ஷபாப் இயக்கத்தின் செய்தித் தொடர்பாளர் நேற்றுமுன்தினம் குறிப்பிட்டுள்ளார்.

தங்களது இயக்கத்தைச் சேர்ந்த 2 போராளிகள், வெடிகுண்டுகள் நிரப்பிய காரை ஓட்டிச்சென்று அந்த இராணுவத் தளத்தின்மீது மோதி, இந்த உயிர்ப்பலிகளை ஏற்படுத்தியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், கென்ய இராணுவ செய்தித் தொடர்பாளர் லெப் டினன்ட் கேணல் பால் ஜூகுணா இதை மறுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்-

அது தவறான தகவல். அங்கு தாக்குதல் நடந்து வருகிறது. அது தொடர்பான தகவல்கள் இப்போது தான் வரத் தொடங்கி உள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு இதே ஜனவரி மாதம், கென்ய எல்லையையொட்டி எல் அட்டே என்ற இடத்தில் அமைந்துள்ள இராணுவ முகாமில் தாக்குதல் நடத்தி 100 இற்கும் மேற்பட்ட கென்ய வீரர்களைக் கொன்று குவித்துள்ளோம் என்று அல் ஷபாப் இயக்கத்தினர் அறிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.


# ஏறுதழுவுதல் போராட்டத்தில் மோதல்:

# குற்றவாளிகளை அடையாளம் காணும் பணி தீவிரம்!

சென்னை, ஜன.29

ஏறுதழுவுதலுக்கு ஆதரவான போராட்டத்தில் வன்முறையில் ஈடுபட்டவர்களை வட்ஸ்-அப், பேஸ்புக், வீடியோ காட்சிகள் மூலம் சைபர் கிரைம் பொலிஸார் அடையாளம் கண்டு வருகின்றனர்.

அதேபோல் வாகனங்களுக்குப் பொலிஸார் தீ வைத்தனர் என்று வெளியான தகவல் குறித்தும் விசாரிக்கப்பட்டு வருகிறது என்று தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.



தமிழகத்தில் ஏறுதழுவுதலுக்கான தடையை நிரந்தரமாக நீக்க வலியுறுத்தி கடந்த 17 ஆம் திகதி சென்னை மெரினா விவேகானந்தர் இல்லம் எதிரே மாணவர்கள், இளைஞர்கள், தகவல் தொழில்நுட்ப ஊழியர்கள், பொதுமக்கள் எனப்பலர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த திங்கள் இந்தப் போராட்டத்தில் மோதல் ஏற்பட்டது.

சமூக விரோதிகள் ஏறுதழுவுதலுக்கான ஆதரவுப் போராட்டத்தில் ஊடுருவி அமைதியைச் சீர்குலைத்தனர். அதைத் தொடர்ந்து மெரினா கடற்கரைக்குச் செல்லும் அனைத்து வீதிகளும் மூடப்பட்டன.

இதற்கிடையில், ஐஸ் ஹவுஸ் காவல் நிலையம் பெற்றோல் குண்டு வீசி தீ வைக்கப்பட்டது. தொடர்ந்து ஐஸ் ஹவுஸ், டாக்டர் பெசன்ட் வீதி மற்றும், அவ்வை சண்முகம் வீதிகளில் பொலிஸார் மீது தாக்குதல் நடந்தன.

பொலிஸாரும் சில இடங்களில் தடியடி நடத்தினர். நடுக்குப்பம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தீ வைப்பு சம்பவங்கள் இடம்பெற்றன.

இதில் பொலிஸார் 142 பேர் காயம் அடைந்தனர். மேலும், போராட்டக்காரர்கள் 138 பேருக்குக் காயம் ஏற்பட்டது. பொலிஸாரின் வாகனம் உட்பட 117 வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன. இது தொடர்பாக 66 வழக்குகள் பதியப்பட்டு 215 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலைமறைவாக உள்ளோரின் பட்டியல் தற்போது சேகரிக்கப்பட்டு வருகிறது. வன்முறையாளர்களை அடையாளம் காண்பதில் பொலி ஸாருக்கு சிக்கல் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து கடந்த திங்கட்கிழமை அன்று வாட்ஸ்-அப், பேஸ்புக்கில் வெளியான புகைப்படம், வீடியோக் களை சைபர் கிரைம் பொலிஸார் ஆய்வு செய்து வருகின்றனர்.

இதேபோல், பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி செய்திகளிலும் ஏராளமான புகைப்படங்கள், வீடியோ காட்சிகள் வெளியாகின. அதையும் சேகரித்து தமிழக சைபர் கிரைம் பொலிஸார் குற்றவாளிகளின் பட்டியலைத் தயார் செய்து வருகின்றனர்.

அந்த பட்டியலை சென்னையில் உள்ள 12 பொலிஸ் மாவட்ட துணை ஆணையர்களுக்கு வழங்கி வருகின்றனர். அவர்கள் சென்னை எல்லைக்கு உட்பட்ட 135 பொலிஸ் நிலைய நுண்ணறிவு மற்றும் உளவுப் பிரிவு பொலிஸார் உதவியுடன் குற்றவாளிகளை அடையாளம் கண்டு வருகின்றனர்.

இதற்கிடையில், ஏறுதழுவுதல் போராட்ட மோதலின்போது அசம்பாவித சம்பவங்களில் ஈடுபட்டவர்களின் பின்னணி பற்றியும் தாம் விசாரித்து வருகின்றனர் எனப் பொலிஸ் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் வாகனங்களுக்குத் தீ வைப்பது போன்ற காட்சிகளும் வெளியாகின. இதுகுறித்தும் விசாரிக்கப்பட்டு வருகிறது என்று கூடுதல் பொலிஸ் ஆணையர் சேஷசாயி தெரிவித்துள்ளார்.

# அலங்காநல்லூர், பாலமேட்டில் ஏறுதழுவுதல் போட்டி ஒத்திவைப்பு!

## முதல்வரைச் சந்தித்த பின்னர் திகதியை அறிவிக்க முடிவு



மதுரை, ஜன.29

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர், பாலமேடு ஆகிய இடங்களில் அடுத்த மாதம் முதலாம், 2-ஆம் திகதிகளில் நடைபெற இருந்த ஏறுதழுவுதல் நிகழ்ச்சிகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

தமிழக முதல்வரை நேரில் சந்தித்த பின்னர், மறு திகதியை அறிவிப்பது என கிராமப் பொதுமக்கள் முடிவு செய்துள்ளனர்.

ஏறுதழுவுதலை நடத்துவதற்கு நிரந்தர சட்ட அனுமதி அண்மையில் வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, அடுத்த மாதம் முதலாம் திகதி அலங்காநல்லூரிலும் 2 ஆம் திகதி பால மேட்டிலும் 5 ஆம் திகதி அவனியாபுரத்திலும் ஏறு தழுவுதல் நடத்த அந்தந்தக் கிராமக் குழுக்கள் முடிவு செய்திருந்தன.

இந்நிலையில், அலங்காநல்லூர் மற்றும் பாலமேட்டில் நடைபெற இருந்த ஏறுதழுவுதல் நிகழ்ச்சிகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

மதுரை மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவராவை, கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்த கிராமக் குழுவினர், ஏறுதழுவுதல் திகதி ஒத்தி வைக்கப்பட்டுள்ள விவரத்தைத் தெரிவித்தனர்.

இதுகுறித்து அலங்காநல்லூர் ஏறுதழுவுதல் குழுத் தலைவர் தெரிவித்தவை வருமாறு:-

உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஏறுதழுவுதல் கடந்த 2 ஆண்டுகளாக நடைபெறவில்லை. மாணவர்கள், இளைஞர்கள் போராட்டம் காரணமாக இந்த ஆண்டு ஏறுதழுவுதல் நடைபெற உள்ளது. இதற்காகத் தமிழக அரசும் சட்டம் கொண்டு வந்திருக்கிறது. இதன் காரணமாக வழக்கத்தைக் காட்டிலும், அதிக எண்ணிக்கையில் காளைகள் பங்கேற்க இருக்கின்றன.

மேலும், பார்வையாளர்களும் அதிகம் பேர் கூடுவர். ஆகவே, காளைகள் மற்றும் மாடுபிடி வீரர்களுக்கான பரிசுகள், அவர்களுக்கான பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து அம்சங்களிலும் விரிவான ஏற்பாடுகளைச் செய்ய அவகாசம் தேவைப்படுகிறது.

அத்தோடு, ஏறுதழுவுதல் போட்டியைத் தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தொடக்கி வைக்க வேண்டும் என கிராம மக்கள் விரும்புகின்றனர்.

ஆகவே, கிராமக் குழுசார்பில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல்வரைச் சந்திக்க உள்ளோம். அதன் பின்னர் ஏறுதழுவுதல் நடைபெறும் திகதி அறிவிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதேபோல, பாலமேட்டிலும் ஏறுதழுவுதல் திகதியை ஒத்திவைக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது என்று பாலமேடு கிராம மகாலிங்க சுவாமி பொது மடத்துக் குழு செயலர் தெரிவித்துள்ளார். மேலும், தமிழக முதல்வரைச் சந்தித்த பின்னர் திகதி அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அவனியாபுரத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி ஏறுதழுவுதல் நடைபெறும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அதில் எவ்வித மாற்றமும் இல்லை. திட்டமிட்டபடி ஏறுதழுவுதல் நடைபெறும் என்று அவனியாபுரம் கிராமக் குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

# மெரினா கடற்கரையில் போராட்டங்களுக்குத் தடை!



சென்னை, ஜன.29

சென்னை மெரினா கடற்கரையில் போராட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னை பொலிஸ் ஆணையாளர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த சில நாள்களாக பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மெரினாவில் போராட்டம் நடத்த வருமாறு இளைஞர்களுக்கு சமூக வலைத்தளங்கள் மூலம் செய்திகளைச் சில விஷமிகள் பரப்பி வருகின்றனர்.

சென்னை மெரினா கடற்கரை பகுதியில் எந்த போராட்டங்களோ, ஆர்ப்பாட்டங்களோ நடத்தக்கூடாது எனக் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகத் தடை உள்ளது.

குறிப்பாக, கலங்கரை விளக்கம் முதல் நேப்பியர் பாலம் வரையில் எந்த அரசியல் கட்சிகளோ, அமைப்புகளோ போராட்டங்கள் நடத்தக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், மாநகரின் முக்கிய வீதிகளில் பேரணிகள் நடத்தக் கூடாது என நீதிமன்ற உத்தரவும் இருக்கிறது. எனவே, சமூக வலைத்தளங்களில் வதந்திகளைப் பரப்புவோரை நம்பி யாரும் செல்லவேண்டாம். சமூக வலைத்தளங்களில் வதந்தி பரப்புவோர் மீதும், அதைக் கேட்டு வருவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# சி.பி.ஐ. விசாரணையை கோருகிறார் ராமதாஸ்!




சென்னை, ஜன.29

ஏறுதழுவுதல் போராட்டத்தின் முடிவில் ஏற்பட்ட வன்முறைக்குக் காரணமான அனைத்து சக்திகளையும் அடையாளம் கண்டு தண்டிக்க வசதியாக சி.பி.ஐ. விசாரணைக்கு ஆணையிட வேண்டும் என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் கூறியுள்ளார்.

மேலும், பாதிக்கப்பட்ட நடுக்குப்பம் பகுதி மக்களுக்கு உரிய இழப்பீட்டை உடனடியாக வழங்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# இலங்கைக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டி 8 விக்கெட்டுக்களால் தென்னாபிரிக்கா வெற்றி



இலங்கை மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான 5 ஒருநாள் போட்டிகளைக் கொண்ட தொடரின் முதலாவது ஒருநாள் போட்டி நேற்று போர்ட் எலிசபெத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்தது.

இலங்கை அணியின் டிக்வெல்ல மற்றும் வீரக்கொடி ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர்.

டிக்வெல்ல 1 ஓட்டத்துடனும், வீரக்கொடி 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

சந்தில் மல் 22 ஓட்டங்களில் தாகிரின் பந்துக்கு இலக்கானார்.

95 பந்துகளைச் சந்தித்து 10 பவுண்டரிகள் அடங்கலாக 62 ஓட்டங் களைப் பெற்றிருந்த மெண்டிஸ் தாகிரின் பந்தில் எல்.பி.டபிள்யு ஆனார்.

அணித்தலைவர் தரங்க 6 ஓட்டங் களுடனும், குணரட்ண 10 ஓட்டங்களுடனும், குலசேகர 17 ஓட்டங்களுடனும், வண்டர்சே 8 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

டி சில்வா 28 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பர்னலின் பந்துவீச்சில் டு பிளேசிஸிடம் பிடிகொடுத்தார். லக்மால் 3 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

இலங்கை அணி 48.3 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 181 ஓட்டங்களை எடுத்தது.

பந்து வீச்சில் பர்னல் மற்றும் தாகிர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், மொறிஸ் 2 விக்கெட்டுக்களையும் றபாடா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

182 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் தென்னாபிரிக்க அணியின் டிகொக் மற்றும் அம்லா ஆகியோர் களமிறங்கினர்.

40 பந்துகளை எதிர்கொண்டு 34 ஓட்டங்களைப் பெற்றிருற்த டி கொக் சந்தகனின் பந்துக்கு வீரக்கொடியிடம் பிடி கொடுத்தார்.

அம்லா 71 பந்துகளுக்கு 57 ஓட்டங்களை எடுத்து குணரட்ணவின் பந்துவில் ஆட்டமிழந்தார்.

டு பிளேஸிஸ் 68 பந்துகளைச் சந்தித்து 55 ஓட்டங்களையும், அணித்தலைவர் டி வில்லியர்ஸ் 27 பந்துகளுக்கு 30 ஓட்டங்களையும் பெற்றிருந்த வேளையில் தென்னாபிரிக்க அணி 185 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைத் தனதாக்கியது.

தென்னாபிரிக்க அணி 8 விக்கெட்டுக்களால் இலங்கை அணியை வீழ்த்தி முதலாவது ஒருநாள் போட்டியில் வெற்றி பெற்றது.

பந்துவீச்சில் சந்தகன் மற்றும் குணரட்ண ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக தென்னாபிரிக்க அணியின் இம்ரான் தாகிர் தெரிவு செய்யப்பட்டார்.

# 2 ஆவது இருபதுக்கு 20 போட்டி இன்று;

## இங்கிலாந்துக்கு பதிலடி கொடுக்குமா இந்தியா?



நாக்பூர், ஜன.29

இங்கிலாந்துக்கு எதிரான முதல் இருபதுக்கு 20 போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு கோஹ்லி தலைமையிலான இந்திய அணி இன்றைய ஆட்டத்தில் பதிலடி கொடுக்குமா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

மோர்கன் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான ஒருநாள் தொடரை இந்தியா 2-1 என்ற கணக்கில் கைப்பற்றி இருந்தது.

மூன்று இருபதுக்கு 20 தொடரில், கான்பூரில் நடந்த முதல் ஆட்டத்தில் இங்கிலாந்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோதும் 2 ஆவது இருபதுக்கு 20 போட்டி மராட்டிய மாநிலம் நாக்பூரில் இன்று இடம் பெறவுள்ளது.

முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு வீராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணி இந்த ஆட்டத்தில் பதிலடி கொடுக்குமா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் தொடரை இழக்காமல் இருக்க வெற்றி பெற வேண்டிய நெருக்கடியும் இந்திய அணிக்கு இருக்கிறது.

கான்பூர் போட்டியில் இந்தியாவின் துடுப்பாட்டம் மிகுந்த ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருந்தது. சிறந்த அதிரடியை வெளிப்படுத்தவில்லை. தொடக்க வீரர் ராகுல் தொடர்ந்து சொதப்பி வருகிறார்.

மத்திய ஆட்டக்காரர்கள் வரிசையில் களம் இறக்கப்பட்ட மனிஷ் பாண்டேயைத் தொடக்க வீரராக ஆட வைக்கலாம். தலைவர் வீராட் கோஹ்லி, டோனி மற்றும் ரெய்னா நல்ல நிலையில் உள்ளனர். யுவராஜ், ஹர்த்திக் பாண்ட்யா ஆட்டத்தில் முன்னேற்றம் தேவை.

அஸ்வின், ஜடேஜா இல்லாததால் பந்துவீச்சு சற்று பலவீனமாக காணப்படுகிறது. யசுவேந்திர சகால் நேர்த்தியாக வீசினார். ஆனால், பர்வேஷ் எதிர்பார்த்த தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. இதனால் சிரேஷ்ட சுழற்பந்து வீரரான அமித் மிஸ்ராவுக்கு வாய்ப்பு வழங்கப்படலாம்.

வேகப்பந்தில் ஆசிஷ் நெக்ரா, பும்ரா உள்ளனர். புவனேஸ்வர்குமாருக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டுமானால் இந்த இருவரில் ஒருவர் கழற்றி விடப்படுவார்.

வெற்றி பெற வேண்டிய கட்டாயமான இந்த ஆட்டத்தில் இந்திய வீரர்கள் அனைவரும் தங்களது முழு திறனை வெளிப்படுத்துவார்கள். இங்கிலாந்து அணி இன்றைய போட்டியிலும் இந்தியாவை வீழ்த்தி தொடரை வெல்லும் ஆர்வத்தில் உள்ளது.

அணித் தலைவர் மோர்கன், ஜோரூட், ஜேசன் ராய், பென் ஸ்டோக்ஸ் போன்ற சிறந்த அதிரடி வீரர்கள் உள்ளனர். மேலும் பந்து வீச்சிலும் இந்தியாவை விட முன்னேற்றமாக இருக்கிறது. மில்ஸ், ஜோர்டான், மொய்ன்அலி ஆகியோர் கான்பூர் போட்டியில் மிகவும் நேர்த்தியாக வீசினார்கள்.

டெஸ்ட், ஒருநாள் தொடரை இழந்து இருந்த இங்கிலாந்து அணிக்குத் தற்போது இருபதுக்கு 20 தொடரை வெல்ல நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இதை அந்த அணி வீரர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளும் வேட்கையில் உள்ளனர். இரு அணிகளும் சமபலத்துடன் மோதுவதால் இந்த ஆட்டம் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரு அணிகளும் இன்று மோதுவது 10 ஆவது இருபதுக்கு 20 ஆட்டமாகும். இதுவரை நடந்த 9 ஆட்டங்களில் இந்தியா 3 போட்டிகளிலும், இங்கிலாந்து 6 ஆட்டங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. இன்றைய ஆட்டம் இரவு 7 மணிக்கு ஆரம்பமாகிறது.

# விராட் கோஹ்லியின் இடம் பறிபோனது; வெளியானது ஐ.சி.சி. தரவரிசை பட்டியல்



டுபாய், ஜன.29

ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான சிறந்த துடுப்பாட்டகாரர்கள் பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது.

இதில், இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி 3 ஆவது இடத்திற்கு சரிந்துள்ளார்.

இதில் 880 புள்ளிகளுடன் ஆஸ்திரேலிய அணியின் ஆரம்ப வீரர் டேவிட் வோர்னர் முதலிடத்தை பிடித்துள்ளார். ஏற்கனவே, முதலிடத்தில் இருந்த தென்னாபிரிக்க வீரர் டிவில்லியர்ஸ் 861 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

இதனால் 852 புள்ளிகளுடன் உள்ள விராட் கோஹ்லி 3 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

அதையடுத்து தென்னாபிரிக்க வீரர் டி கொக் (779 புள்ளிகள்), ஆஸ்திரேலியா வீரர் கேன் வில்லியம்சன் (770 புள்ளிகள்), இங்கிலாந்து வீரர் ஜோ ரூட்(753 புள்ளிகள்), தென்னாபிரிக்க வீரர் அம்லா(748 புள்ளிகள்), ஆஸ்திரேலியா வீரர்கள் ஸ்டீவ் ஸ்மித்(740 புள்ளிகள்), நியூஸிலாந்து வீரர் மார்டின் கப்டில்(735 புள்ளிகள்), பாகிஸ்தான் வீரர் பாபர் ஆஸம்(733 புள்ளிகள்) பெற்றுள்ளனர்.

# மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பயிற்றுவிப்பாளரானார் ஸ்டுவார்ட்



மெல்பேர்ன், ஜன.29

முன்னாள் ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் ஸ்டுவார்ட் லோவ் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பயிற்றுவிப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஸ்டுவார்ட் லோவ் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு மேற்கிந்திய தீவுகள் அணியின் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் எதிர்வரும் பெப்ரவரி 15 ஆம் திகதி முதல் மேற்கிந்தியத் தீவுகள் அணியில் செயற்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்டுவார்ட் லோவ் முன்னாள் இலங்கை அணி பயிற்றுவிப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொக்கட்டிச்சோலைப் படுகொலையின் 30 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று

## மட்டு. மகிழடித்தீவு நினைவுத் தூபிக்கு முன் அஞ்சலி

மட்டக்களப்பு, ஜன.29

மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை படுகொலையின் 30 ஆவது ஆண்டுநினைவேந்தல் நிகழ்வுநேற்றுசனிக்கிழமைமகிழடித்தீவு சந்தியில் அமைந்துள்ள நினைவுத் தூபிக்கு முன்பாக இடம்பெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பட்டிப்பளை பிரதேசக் கிளையால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்பா.அரியநேத்திரன் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில்,தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சர்ள்ஸ் நிர்மலநாதன், சீ.யோகேஸ்வரன், ச.வியாழேந்திரன், கிழக்கு மாகாண அமைச்சர் கி.துரைராஜசிங்கம், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள், படுகொலைசெய்யப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.





நினைவுத் தூபிக்கு முன்பாக சுடர்கள் ஏற்றப்பட்டு மலரஞ்சலி இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து அஞ்சலி உரைகளும் இடம்பெற்றன.

இங்கு பா.அரியனேந்திரன் கருத்துத் தெரிவிக்கையில் -

கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவு தினம் கடந்த 2008 ஆம் ஆண்டு வரை தமிழீழ விடுதலைப் புலிகளால் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்டது.

புலிகளினால்அமைக்கப்பட்ட நினைவுத் தூபி இராணுவத்தினால்அழிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அழிக்கப்பட்ட நினைவுத் தூபியைப்புனரமைப்புசெய்யாமல், நினைவுச் சின்னமாக வைத்து, இம்முறை அஞ்சலி நிகழ்வுகளை நடத்தினோம். - என்றார்.

1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி கொக்கட்டிச்சோலைஇறால்பண்ணையில் பணியாற்றிய நூற்றுக்கும் மேற்பட்டோர் விசேட அதிரடிப் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர். அதுவே கொக்கட்டிச்சோலைப் படுகொலை என்று அழைக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# வாய்த்தர்க்கம் முற்றி வாள்வெட்டு: மாங்குளத்தில் ஐவர் படுகாயம்

## சமரசம் செய்யச் சென்றவருக்குக் கடும் காயம்

கிளிநொச்சி, ஜன.29

மாங்குளம் - அம்பாள்புரம் கிராமத்தில் இரு குடும்பங்களுக்கு இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வாள்வெட்டில் முடிந்ததில், ஐந்துபேர்படுகாயமடைந்து வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு மேற்படி கிராமத்தில் வசிக்கும் இரு குடும்பங்களைச் சேர்ந்த நால்வர் மதுபோதையில் மோதலில் ஈடுபட்டனர். அதன்போது வீதியால் சென்ற அதேகிராமத்தைச்சேர்ந்த இளைஞர் ஒருவர் சமரச முயற்சிக்குச் சென்றார்.

இதன்போது அவர்கள் மாறி மாறி வாள்வெட்டில் ஈடுபட்டனர் எனக் கூறப்படுகின்றது. மோதலில்ஈடுபட்ட நால்வரும் படுகாயமடைந்ததுடன் சமரச முயற்சிக்குச் சென்ற இளைஞரும் வாள்வெட்டில் கடும் காயங்களுக்கு இலக்கானார்.

இச்சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களானகதிரவேலுசெல்வரட்ணம் (வயது-45), கதிரவேலு சந்திரரட்ணம் (வயது-40) ஆகியோரும் எதிர்த்தரப்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களான வேலுவிக்கினேஸ்வரன் (வயது-32), வேலு றொமேஸ்வரன் (வயது-37) ஆகியோரும் சமரசம் செய்யச் சென்ற சந்தானம் சந்திரமூர்த்தி (வயது-30) என்பவரும் படுகாயமடைந்தனர்.

மோதலில் ஈடுபட்டவர்கள் மல்லாவி, மாங்குளம் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்ற அதேவேளை, சமரசம் செய்யச் சென்றவர் மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு பதிலாக புதிய பாதுகாப்புச் சட்டம்

கொழும்பு, ஜன.29

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக புதிய பாதுகாப்புச் சட்டமொன்றைக் கொண்டு வருவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட தேசிய பாதுகாப்புப் பிரிவின் பிரதானிகளுடன் இடம்பெற்ற நீண்ட கலந்துரையாடலின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

1972,1978 ஆம் ஆண்டு அரசமைப்புக்களில் பிரித்தானியர்கள் அறிமுகம் செய்த பாதுகாப்புச்சட்டத்தின் அடிப்படையில் அமைந்தபயங்கரவாதத்தடைச் சட்டமே இலங்கையில் தற்போது வரை அமுலில் உள்ளது.

இந்தப் பயங்கரவாத அடிப்படைச்சட்டத்தை இலங்கையில் அறிமுகம் செய்த பிரித்தானியாவில் கூட தற்போது நவீன காலத்துக்கு ஏற்ற சட்டமாக அது மாற்றப்பட்டுள்ளதுஎனத்தெரிவிக்கப்படுகின்றது. (ஓ)

# கல்லுண்டாய் வெளியில் வைத்து இளம் பெண் மீது கத்திக் குத்து!

யாழ்ப்பாணம் ஜன.29

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை வீதியில், கல்லுண்டாய் வெளியில் வைத்து இளம் பெண்ணொருவர் மீது கத்திக் குத்துதாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் அவர் படுகாயமடைந்தார்.

நேற்று பிற்பகல் 4 மணியளவில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது என யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் ஆனைக்கோட்டையச் சேர்ந்த எஸ். வசந்தாதேவி (வயது38) என்பவரே கத்திக்குத்துக்கு இலக்காகிக் காயமடைந்தார். இவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

மேற்படிப் பெண்ணை அந்த இடத்திற்கு அழைத்துச் சென்ற இளைஞர் ஒருவர் அவரது முகத்திலும் வயிற்றிலும் கத்தியால் குத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றார் எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது எனக் கூறப்படுகின்றது.

கத்திக் குத்தால் படுகாயமடைந்து மயக்க நிலையில் கிடந்த அந்தப் பெண்ணை கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்கள் அவதானித்து வைத்தியசாலையில் சேர்த்தனர் எனப் பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் மானிப்பாய் பொலிஸ் எல்லைக்குள் நடைபெற்றமையால்அதுதொடர்பாக மானிப்பாய் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்றிரவு தெரிவித்தனர். (ம-09)

# மோட்டார் சைக்கிளில் சென்றபோது மயங்கி வீழ்ந்த முதியவர் மரணம்

அச்சுவேலி ஜன.29

மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்றபோது மயங்கி வீதியில் வீழ்ந்த முதியவர் ஒருவர் யாழ்.போதனாவைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த நிலையில், நேற்று உயிரிழந்தார்.

சுண்டிக்குளியைச் சேர்ந்த யோசப்அன்ரன் (வயது 72) என்பவரே உயிரிழந்தார்.

அவர் நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது திடிரென மயங்கி வீழ்ந்தார் எனக் கூறப்படுகின்றது. அதன்போது வீதியால் சென்றவர்கள் அவரை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர். எனினும் சிகிச்சை பயனின்றி அவர் நேற்று உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ம-09)

## அதிகாரத்தைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்காகப் போராட்டங்கள் நடத்தினால் பிரச்சினையில்லை. இது இந்தநாட்டையும், நாட்டின்பொருளாதாரத்தையும் கட்டியெழுப்பவும், மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டிய காலம். அதற்காகவே போராட்டங்கள் அவசியமாகும்.

அதிகாரங்களைக் கோரி சிலர் போராட்டங்களை முன்னெடுக்கின்றனர். தற்போது அரசியல் அதிகாரங்களுக்காகப் போராட்டம் செய்தாலும் 2020ஆம் ஆண்டுவரை அந்த அதிகாரங்களைக் கைப்பற்றுவது தொடர்பாக எவராலும்நினைத்துக்கூடப் பார்க்கமுடியாது. 2020ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெறும் தேர்தலில் மக்கள் வழங்கும் ஆணைக்குப் பின்னரே அது தொடர்பில் சிந்திக்க முடியும். குறுகிய அரசியல்நோக்கங்களை மறந்து, அரசின் நல்ல திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதே நாட்டைநேசிக்கும் அனைத்து அரசியல்வாதிகளினதும் பொறுப்பாகும். - என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இந்த வருடத்துக்குள் நல்லாட்சி அரசைக் கவிழ்த்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவோம் என நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டு எதிரணியின் 'புரட்சியின் ஆரம்பம்' பேரணிக் கூட்டத்தில் கூட்டு எதிரணியினர் சூளுரைத்திருந்த நிலையில் ஜனாதிபதி நேற்று இவ்வாறு கூறியுள்ளார். (ஓ)

## சுமந்திரனைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு கூறியுள்ளார்.

பிரதமர் செயலகத்திலிருந்து தனக்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டது எனத் தெரிவித்த சுமந்திரன் -

"எதற்காக என்னைக்கொலை செய்வதற்குத் திட்டமிட்டார்கள் என்பதும், யார் இவர்களை இயக்குகிறார்கள் என்றும் எனக்குத் தெரியாது. வெளி நாட்டுச் சக்திகளோ தெரியாது. கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட வர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"பொலிஸார் சொன்ன விடயங்களே எனக்குத் தெரியும். 23ஆம் திகதி பொலிஸார் எனக்குத் தகவல் தெரிவித்தார்கள். கைது செய்யப்பட்டவர்களிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள்எனக்குஅச்சுறுத்தல் காணப்படுவதைஉறுதிப்படுத்துகின்றன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்." - எனவும் அவர் தெரிவித்தார்.

உயர்மட்டப்புலனாய்வு அறிக்கைகளுக்கு அமைவாக இது தொடர்பில் முன்னாள் பேராளிகள் மூன்று பேரை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என கிளிநொச்சிபொலிஸார்ஊடகம் ஒன்றுக்கு உறுதிப்படுத்தியுள்ளனர்எனத்தகவல்கள்வெளியாகியுள்ளன.

"கிளைமோர்கள் மற்றும் டெட்டனேற்றர்களை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்" - எனக் கைது செய்யப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையான தனது பெயரை வெளிப்படுத்த விரும்பாத சட்டத்தரணி ஒருவர் தெரிவித்துள்ளார் என்றும் -

கஞ்சா விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டிலேயே தனது பிள்ளை கைது செய்யப்பட்டார் என்றும், எனினும் இவ்வாறான பாரதூரமான குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரின் தாயார் ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்டுள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(மற்றொரு செய்தி 3ஆம் பக்கத்தில்) (ஓ)

## உள்ளூ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவின் அறிக்கையில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் உள்ளூராட்சி மற்றும்மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா ஆணைக்குழுவின் தலைவர் அசோக பீரிஸுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதம் தனக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது என எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் கூறியுள்ளார். எனினும் அந்தக் கடிதத்தில் உள்ள விடயங்களுக்குத் தன்னால் பதிலளிக்க முடியாது எனவும், அமைச்சரால் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் தனது பொறுப்பின் கீழ் வரவில்லை என்றும் அசோக பீரிஸ் தெரிவித்துள்ளார். (ஓ)

காலைக்கதிர்
Kalaikkathir

# மஹிந்தவின் விமானப் பயண கட்டணங்கள் நிலுவையில்

கொழும்பு, ஜன.29

2011 ஆம் ஆண்டு முதல் பதவியில் இருந்து விலகிச் செல்லும் வரை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட விமானப் பயணங்களுக்காகச் செலுத்த வேண்டிய கட்டணங்களை அவர் இன்னும் செலுத்தவில்லைஎனத்தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கட்டணங்களைச் செலுத்துமாறு கோரி சிறிலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனம் அவற்றை ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளது எனக் கூறப்படுகிறது.

மஹிந்த ராஜபக்ஷ, அவரது குடும்பத்தினர் மற்றும் நெருக்கமானவர்கள்மேற்கொண்ட விமானப் பயணங்களுக்காக 11 கோடியே 34 லட்சம் ரூபா செலுத்தப்பட வேண்டியுள்ளது.

இந்த நிலுவையை அவர்கள் செலுத்தாத காரணத்தால் ஜனாதிபதி செயலகம் செலுத்த வேண்டும் என சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி பல சந்தர்ப்பங்களில் விசேட விமானங்களை ஒதுக்கிப் பயணித்தார் எனவும் தெரியவந்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து கொண்ட திஸ்ஸ அத்தநாயக்க, அந்தச் சமயத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து திருப்பதி சென்ற விமானப் பயணக் கட்டணத்துக்கான ரசீதையும் சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் ஜனாதிபதி செயலத்துக்கு வழங்கியுள்ளது எனக் கூறப்படுகிறது. (ஒ)

# ஆவரங்காலில் வாள்வெட்டு: மேலும் மூவர் நேற்றுக் கைது


அச்சுவேலி, ஜன.29

ஆவரங்கால் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் நேற்றைய தினம் மேலும் மூவரைத் தாங்கள் கைதுசெய்துள்ளனர் என அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

ஏற்கனவே மூவர் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே அந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி மேலும் மூவரும் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த 15 ஆம் திகதி பொங்கல் களியாட்ட நிகழ்வின்போது அச்சுவேலி தெற்குப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கும் ஆவரங்கால் நவோதயா பகுதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது.

இதன்போது, ஒருவருக்கு மூக்கு அறுபட்டதுடன் மேலும் நால்வர் வாள்வெட்டுக்கு இலக்காகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-09)



நேற்று நடைபெற்ற திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் புனருத்தாபனம் செய்யப்பட்ட பாலஸ்தான மண்டபத் திறப்பு விழாவின் போது எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் 'இறைபணிச் செம்மல்' விருது வழங்கிக் கௌரவிக் கப்பட்டார்.

# பொலிஸ் ஜீப் மீது கல்வீச்சு உள்ளே இருந்த பெண் காயம்

## வடமராட்சி அல்வாயில் வெள்ளி இரவு சம்பவம்

முறைப்பாடு ஒன்று தொடர்பாக விசாரிப்பதற்காக முறைப்பாடு செய்த பெண்ணையும் ஏற்றிச் சென்ற பொலிஸ் ஜீப் மீதும் சரமாரியாக மேற்கொள்ளப்பட்ட கல் வீச்சுத் தாக்குதலில் அந்தப் பெண் காயமடைந்தார். ஜீப்பும் சேதமடைந்தது.

வடமராட்சி அல்வாயில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அன்றைய தினம் கரணவாய் பகுதியைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமி ஒருவரை அல்வாயைச் சேர்ந்த நபர் ஒருவர் கடத்திச் சென்றார் என்று சிறுமியின் தாயார் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

அல்வாயிலேயே தனது மகள் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றார் என்றும் அங்கு சென்று விசாரணை நடத்தி தனது மகளை மீட்டுத் தாருங்கள் எனவும் அவர் பொலிஸாரிடம் கோரினார்.

அதனையடுத்து, அந்தப் பெண்ணையும் தமது ஜீப்பில் ஏற்றிய பொலிஸார் அல்வாய்க்குச் சென்றனர். அவர்கள் வருவதை அறிந்த சந்தேக நபர் சிறுமியைக் கைவிட்டுத் தப்பிச் சென்றார் எனக் கூறப்படுகின்றது.

அங்கிருந்த சிறுமியை மீட்ட பொலிஸார் அவரையும் தமது ஜீப்பில் ஏற்றிக்கொண்டு பொலிஸ் நிலையம் திரும்பினர். அதன்போது அங்கு நின்ற குழுவொன்று திடீரென்று பொலிஸ் ஜீப் நோக்கி கல்வீசித் தாக்குதல் நடத்தியது.

இந்தத் தாக்குதலில் முறைப்பாட்டுக்காரப் பெண் காயமடைந்தார் எனக் கூறப்படுகின்றது. பொலிஸ் ஜீப்பும் சேதமடைந்தது எனத் தெரிய வருகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-40)

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு புதிய தலைவர் நியமனம்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக நதுன் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 27ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக ரி.ஜி. ஜயசிங்க செயற்பட்டு வந்தார். (ஒ)

## 2 ரஷ்யர்கள் கைது!

பலப்பிடிய கடற்கரைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்ட இரண்டு வெளிநாட்டுப் பிரஜைகள் கடலோரப் பாதுகாப்பு அதிகாரிகளால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மீன் பிடிப்பதற்கு இவர்கள் பயன் படுத்திய உபகரணங்களைக் கைப்பற்றிய கடலோர பாதுகாப்பு அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ)

## பிள்ளையா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிசெம்பர் 25 ஆம் திகதி மட்டக்களப்புத் தேவாலயம் ஒன்றில் கிறிஸ்மஸ் ஆராதனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக 2015 ஒக்ரோபர் 11 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட பிள்ளையான் கடந்த பதினைந்து மாதங்களாக விளக்கமறியலில் இருந்து வருகின்றார்.

இந்தப் படுகொலை வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெறும் என சட்டமா அதிபர் ஜெயந்த ஜெயசூரிய தெரிவித்துள்ளார். (உ)

## அத்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாய்லாந்து நெத்தலி ஒரு கிலோ 490 ரூபாவாகவும், விதை கிழங்கு ஒரு கிலோ 115 ரூபாவாகவும் விற்பனை விலை அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய பொருள்களுக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள இந்த அதிகபட்ச விலைகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளனஎன்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹூசைன் முன்வைப்பார் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

மனித உரிமைகள் கவுன்ஸிலின் 34 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் பெப்ரவரி 27ஆம் திகதி முதல் மார்ச் 24ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதன்போது இலங்கை தொடர்பான பல்வேறு அறிக்கைகள் வெளியிடப்படவுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் 2015ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இலங்கை அரசும் சேர்ந்து நிறைவேற்றிய தீர்மானத்தில் போர்க் குற்றவிசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் இடம்பெற வேண்டுமென வலியுறுத்தப்பட்டிருந்தது.

ஆனால், அந்தப் பரிந்துரையைப் பின்னர் நிராகரித்த இலங்கை அரசு தனது அந்த முடிவை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஏற்றுக் கொண்டுள்ளார் என்றும் தெரிவித்தது.

எனினும் அதனை மறுத்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம், ஆணையாளர் செயிட் அல் ஹூசைன் எப்போதுமே சர்வதேசப் பங்களிப்புடனான விசாரணையையே வலியுறுத்துகின்றார் என்றும் அந்த நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என்றும் தெரிவித்திருந்தது. (ஒ)

## எல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்ட எல்லை நிர்ணயம் தொடர்பில் விசேட குறிப்புக்கள் இல்லாமை, குழுவின் பெயர் சிங்கள, தமிழ், மற்றும் ஆங்கில பிரதிகளில் காணப்படாமை மற்றும் எல்லை நிர்ணயம் தொடர்பான குறைபாடுகள் அதில் காணப்படுகின்றன என இந்தக் கடிதத்தில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் தெளிவுபடுத்த வேண்டியுள்ளதால் குறைபாடுகள் தொடர்பில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் நிலைப்பாட்டை அறிவிக்குமாறு அமைச்சர் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ)

## தமக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த சில வாரங்களாக கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் கூட்டு எதிரணியின் தலைவர்களுடன் குமார வெல்கம நடத்திய பேச்சுக்களின் பின்னரே அவர் இந்த யோசனையை முன்வைத்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவைத் தலைவராகக்கொண்டு தொடர்ந்தும் இந்த அரசியல் பயணத்தை மேற்கொள்ள முடியாது எனவும், கோட்டாபய ராஜபக்ஷவை அல்லது சமல் ராஜபக்ஷவை முன்னிறுத்திச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் குமார வெல்கம தெரிவித்திருந்தார்.

குமார வெல்கமவின் இந்த யோசனையை அடுத்து கடும் ஆத்திரமடைந்த மஹிந்த ராஜபக்ஷ, குமார வெல்கமவைத் திட்டி வெளியேற்றினார் எனக் கூட்டுஎதிரணித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மக்கள் தன்னையே தலைவராகக் கோருகின்றனர் எனவும் பஸில், கோட்டா அல்லது சமலை கோரவில்லை எனவும் கூட்டு எதிரணியில் இருக்கும் பைத்தியக்காரர்களுக்கு இது புரியவில்லை எனவும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளாராம்.

மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்கிரமநாயக்க இந்த யோசனையை முன்வைத்துள்ளார். அவரையும் கடுமையாகத் திட்டியுள்ள மஹிந்த ராஜபக்ஷ இப்படியான யோசனைகளை இனிமேல் தன்னிடம் முன்வைக்க வேண்டாம் எனக் கூறியுள்ளார்.

கோட்டாபயவுக்கு ஒன்றும் புரியாது எனவும் அவர் சிலரது பேச்சை நம்பி ஜனாதிபதியின் பொறியில் சிக்கியுள்ளார் எனவும் மஹிந்த சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய கட்சியை ஆரம்பித்தால் 2020 ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சுலபமாக வெற்றி பெறும் என மஹிந்த ராஜபக்ஷ தனிக்கட்சியை ஆரம்பிப்பதற்கு மேற்கொள்ளும் முயற்சி தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்துள்ள மஹிந்த ராஜபக்ஷ, இது தன்னுடைய பிரச்சினையல்ல எனக் கூறியுள்ளார். இந்த நிலையில், மேற்படி விடயம் தொடர்பில் கூட்டு எதிரணியின் தலைவர்களும் கலந்துரையாடியுள்ளனர். (ஒ)

## திருடர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அரசு திருடர்களைப் பிடிக்கவில்லை. திருடர்கள் தான் இந்த அரசைப் பிடித்துள்ளனர்.

ஊழலுக்கு எதிராகப் பிரசாரம் செய்து ஊழல்வாதிகளைத் தண்டிக்கப் போவதாகக் கூறி வாக்குறுதியளித்து ஆட்சிப்பீடமேறிய இந்த அரசு வாக்குறுதியை மீறிநடப்பது மாத்திரமன்றி ஊழலில் ஈடுபடவும் செய்கின்றது.

இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன் செய்த முதல் திருட்டுத்தான் மத்திய வங்கி பிணைமுறி மோசடி. அதனைத் தொடர்ந்து ஊழல்கள் வெற்றிகரமாகத் தொடர்கின்றன.

மஹிந்த ஆட்சியில் ஊழல் புரிந்தவர்களைத் தண்டிப்பதை விடுத்து தானும் ஊழலில் ஈடுபட்டு வருகின்றது இந்த அரசு.

இந்த அரசு ஆட்சிக்கு வந்து 2 வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால் உருப்படியாக ஒரு திருடனையும் பிடிக்கவில்லை. அது தொடர்பான அக்கறை இந்த அரசுக்கு இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. இதில் அரசியல் 'டீல்' இருக்கின்றது. இது தான் உண்மை.

அப்படியென்றால் இது தொடர்பில் நீதியை நிலைநாட்டக்கூடிய, திருடர்களுக்குப் பாரபட்சமின்றி தண்டனை வழங்கக்கூடிய, ஊழலை முற்றாக நிறுத்தக்கூடிய மாற்று அரசு ஒன்றை உருவாக்குவதுதான் இதற்கான ஒரே வழியாகும். இதை நாம் இனிச் செய்வோம்.

மக்களுக்கு இது தொடர்பில் பொறுப்பு உண்டு. மாற்று அரசை உருவாக்குவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இதைத் தவிர எமக்கு வேறு வழி இல்லை. தவறினால் நாடு மிஞ்சாது என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.01.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.